முரசொலி

திருவாரூர் மாநாட்டு

சிறப்பு மலர்

கோட்டாகுடி [illegible]
வை. கோவிந்தசாமி அவர்களின்
நூல் தொகுப்பு

கோட்டாகுடி பெரியநாயகசுவர்
வை. கோவிந்தசாமி அவர்களின்
நூல் தொகுப்பு

திருவாரூர் மாநாட்டு சிறப்பு மலர்

இந்தக் கிழமை முரசோலி — இதோ மாநாட்டு மலராக மணம் பரப்புகிறது!

அரசியல் ஒளி **பன்னீர்ச்செல்வத்** தின் ஆற்றலையும்—அண்ணன் **அழகிரி** யின் இலட்சிய வெறியையும்—நினைத்துப் பெருமூச்சு விட்டவாறு, நமது **மூத்தவர்** மொழிகளை வழித் துணையாகக் கொண்டு திருவாரூர் மாநாட்டுப் பொருளாளர் பதவியினை ஏற்றுக்கொண்டேன். என் ஆசைக்கு அதிகமாகவே தஞ்சை மாவட்டத்துத் தோழர்கள் பொருள் குவித்தனர் — எங்குமில்லாத பொலிவு குவித்தனர் — புதிய வலிவு குவித்தனர்—அவர்கட்கு, மாநாட்டுப் பொருளாளர் என்ற முறையில் 'முரசொலி' வாயிலாக மீண்டும் என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது கழகத்து சிறப்பு நிகழ்ச்சிகளும், மாநாடுகளும் என்றென்றும் கண்டு மகிழ— இம்மாதிரித் தொகுப்புகளாக வர வேண்டியது அவசியம். முரசொலி, அந்தக் கடமையை நிறைவேற்ற முன் நிற்கிறது. **மாநாடு நடத்துவோர் — சிறப்பு நிகழ்ச்சிகள் ஏற்பாடு 'செய்வோர் —' ஒத்துழைத்து சொற்பொழிவுகளையும்-நிழற் படங்களையும் - நிகழ்ச்சி விபரங்களையும் தருவார்களேயானால் ஒவ்வொரு மாவட்ட மாநாட்டினையும் "முரசொலி" மலராக்குவதற்குத் தயார்.**

இந்த மலர் எல்லா மாவட்டங்களுக்கும் பரவுகிறது—பல்லாயிரக் கணக்கில்! தாள் விலை ஏற்றத்தில் "லாபக் கணக்கு" இல்லை — கழகத்திற்கோர் நற்பணியாற்றினோம் என்ற மகிழ்ச்சியே, **மிச்சம்**! அதைவிட மதிப்பான—உற்சாகம் தரக்கூடிய— 'மிச்சம்' வேறென்ன இருக்கிறது!

வேல்க திராவிடம்!

அன்பு,

கோவை மாவட்ட

தி. மு. கழக 3-வது மாநாடு

★

1958 ஜூலை 5, 6. (சனி, ஞாயிறு) நாட்களில்

கோபிசெட்டிப்பாளையம்

வி. பி. இராசு நகரில் அமைந்துள்ள
அர்ச்சுனன் பந்தல்–நாகம்மையார் அரங்கில் நடைபெறும்.

தலைவர் :

ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம். எல். ஏ.

திறப்பாளர் :

ஆர். தருமலிங்கம் எம். பி.

அறிஞர் அண்ணா,

பொதுச் செயலாளர் **நெடுஞ்செழியன்**

மற்றும் கழக முன்னணி வீரர்கள் பலர்
கலந்து கொள்கின்றனர்.

முதல்நாள் இரவு

"உதய சூரியன்" நாடகம் நடைபெறும்.

இரு நாட்களுக்கும் நுழைவுக் கட்டணம்: ரூ, 5, 3, 2. பெண்கள் ரூ. 1.

ப. நாராயணன்
வ. கு. தலைவர்.

ஈ. வே. கி. சம்பத் எம்.பி.
பொருளாளர்.

எஸ். அப்பாவு, பி. ஏ. சாமிநாதன்—செயலாளர்கள்.

கே. எஸ். எஸ். சீரங்கராயர், ஜி. கே. பழனிச்சாமி,
தொண்டர் படைத் தலைவர்கள்

ஜி. ஏ. வேங்கடாலசம்,
விளம்பரப் பொறுப்பு.

தேனில் தோய்த்த மலர்

விழிகளே போதும் வீரர்களை வீழ்த்த! அவைகளுக்கு மையும் தீட்டப்பட்டு விட்டால்? அலைகளை வம்புக்கு இழுக்கும் அழகிய கூந்தலுடன் முல்லைச் சரமும் சேர்ந்தால்? முத்தாரம் விளங்கும் கழுத்தில் மோகன வைர மாலையும் தொங்கும்படிச் செய்தால்? தொட்டால் மணக்கும் தேகத்துக்கு சந்தனத்தையும் குழைத்துப் பூசினால்? பாலோடு சர்க்கரையும் கலந்தால்? பலாச் சுளையோடு தேனையும் சேர்த்தால்? அது போலாயிற்று, இயற்கை அன்னை தொட்டில் போட்டுத் தூங்கும் நஞ்சை நாடாம் தஞ்சை மாவட்டத்தில் நடைபெற்ற மாநாட்டு வரவேற்புக் குழுவுக்கு கருணாநிதியும் போய்ச் சேர்ந்தது. அதிராம்பட்டினம் இளங்கோ, மன்னார்குடி நாராயணசாமி, கிருட்டிணமூர்த்தி, பேராவூரணி அடைக்கலம், கொரடாச்சேரி நடராசன், ஆரூர் நாகப்பன்— எனும் ஆர்வ மிக்க தோழர்களுடன் கருணாநிதியும் போய்ச் சேர்ந்து கொண்டார் எனின், மாநாட்டின் எழிலும் சிறப்பும் எப்படியிருந்தது என்று உரைத்திடவுமா வேண்டும்?

''கண்களை உயர்த்திப் பார்க்கிறேன்! கனிகள் காட்சியளிக்கின்றன—பலாப் பழம் தொங்குகிறது—வாழைத் தார்களின் வரிசையும், பனங் குலையும், ஈச்சம் பழக் கொத்துக்களும் என்னைக் கவருகின்றன. அவைகளிலிருந்து கண்ணைக் கொஞ்சம் தாழ்த்தினாலோ, கனிந்த முகங்களைப் பல்லாயிரக் கணக்கில் காண்கிறேன்! வீரர்களாகிய நீங்கள், அகமும் புறமும் மலர இருக்கிறீர்கள் மாநாட்டில். இந்தப் பெறற்கரிய காட்சியினும் பிறிதொன்றுண்டோ?'' என்றார் அண்ணா, பேசும்போது.

கலையும், தமிழும் தூங்குமிடம் என்பர் தஞ்சைக் கோட்டத்தை! விதைக்கும் நெல் வீணாகாது; கதிராக மாறும் கழனிகள் நிரம்பிய மாவட்டம் அது. இதென்ன அதிசயம்? விதை போட்டால் எங்கும்தான் கதிர் கிடைக்கும் எனக் கூறக்கூடும். கதிர் எங்கும் கிடைக்கும்; ஆனால் தஞ்சை மாநிலத்தில் விளையும் நெல் மணிகளுக்குத் தனித்ததோர் அழகுண்டு. நெல் மணிகளை, அரிசியாக்கி, அதனை விருந்தினருக்குப் படைத்திடும் முறையிலும் கலை நயத்தைக் காணலாம். நட்சத்திரங்கள் ஆயிரம் உண்டெனினும் விடிவெள்ளியில் ஒரு அழகு இருக்கத்தானே செய்கிறது! அந்தப் பாங்கும் பண்பும் மாநாட்டின் ஒவ்வொரு செயலிலும் மிளிர்ந்தது. போட்டிருந்த கொட்டகை.அப்பப்பா.. முதல் முதலாக நாம் நடத்தினோமே மாநில மாநாடு, அதனை நினைப்பூட்டிற்று. ஓமான் கடலுக்கு இரையான பன்னீர்ச் செல்வத்தின் பெயரால் அமைந்திருந்த அப்பந்தலின் முகப்போ அபாரம்! அபாரம்!

அம் முகப்பைத் தாண்டி உள்ளே நுழைந்தால், வாயில்! அதுவும் உயர்ந்த வேலைப்பாடுகளுடன் அமைந்திருந்தது! முகப்புக்கும் வாயிலுக்குமிடையே பரந்து கிடந்த இடைவெளியையும் சும்மாவா விட்டார்கள்? ஈச்ச மரங்களையும் — வாழை மரங்களையும் பெயர்த்தெடுத்து வந்து, அழகுற அமைத்திருந்தார்கள்! அவைகளின் மத்தியில் நீண்டதோர் கம்பத்தில் இரு வர்ணக் கொடியைப் பறக்க விட்டிருந்தார்கள்! அந்தக் கொடிக் கம்பத்தைப் பூமியில் வைக்க மட்டும் 50 ஆட்கள் தேவைப்பட்டார்களாம்.

இதென்ன, இதுவும் ஒரு மாநாட்டுப் பந்தலோ என்று கேட்குமளவில் ஒரு கொட்டகையிருந்தது — விசாரித்தபோது உணவு விடுதி என்றார்கள்! உணவுப் பொட்டலக் கடை, தேநீர்க் கடை, சிற்றுண்டிக் கடை, சோடாக் கடைகள், நூல் அரங்கு—என்று இவ்விதம் பல கடைகள். சைக்கிள்களை நிறுத்துவதற்காக ஒரு பரந்த மைதானம்—அது முழுதும் ஈருருளிகளாகவே இருந்தன. கார்கள் நிற்கவும் தனி இடம் ஏற்பாடு செய்திருந்தார்கள். புற அழகை ரசித்து விட்டுக் கொட்டகைக்குள் நுழைந்தாலோ, அண்ணா வர்ணித்தது போலவே எங்கும் எதிலும் அழகு மிளிர்ந்தது.

மேடையின் அலங்காரம், கண்ணைப் பறித்தது.மேடைக்கு இட்டிருந்த, ''அழகிரி அரங்கு'' எனும் பெயரோ இதயத்தை எங்கோ இழுத்துச் சென்று, மறைந்த அம் மாவீரர் போன்றோர் நம் முன்னோர்களன்றோ எனும் நினைவைக் கிளறியது.

ஊர்வலங்கள், பல இடங்களில், பலவிதங்களில் கண்டிருக்கிறோம் இதுவரை! கழகமிருக்கும் ஊரின் பெயரினைப் பொறித்த கொடிகளுடன், பல்லாயிரக் கணக்கில் தோழர்கள் கலந்து கொள்வார்கள், ஊர்வலங்களில். ஆனால் தஞ்சை மாவட்ட மாநாட்டிலோ இது மட்டுமல்ல; இன்னொரு காட்சியையும் கண்டோம். வளமும் வகையு மட்டும் கிடைத்தால் இதென்ன; கடல்மேவும் கப்பல் செய்வோம் — வானத்தை வட்டமிடும் விமானம் கட்டுவோம்—கனக விசயன் தலையில் அன்றோர் நாள் கல் சுமக்க வைத்த சேரன் செங்குட்டுவனின் புகழை நாட்டுவோம்— வெற்றித் தேரில் ஏறி பவனி வருவோம் என்பதை எடுத்துக்காட்டுவதுபோல — ஆகாய விமானம் போல் ஒரு கழகமும், கடலில் மிதந்திடும் கப்பலைப் போல் இன்னொரு கழகமும், கனக விசயன் கல்சுமந்து செல்லவும், தேர் ஏறி மூவேந்தரும்

வருவதுபோல் வேறொரு கழகத்தவரும், முத்துப் பல்லக்கு ஒன்றும்—இப்படி விதவிதமாக அழகூட்டும் விதங்களில் பல செய்திருந்தார்கள்! குதிரைகள் பூட்டிய வண்டியில் மாநாட்டுத் தலைவர் கே. ஏ. மதியழகனும், திறப்பாளர் ப. உ. சண்முகம் எம். எல். ஏ. யும், கழகக் காவலர்கள் நாவலர் நெடுஞ்செழியனும், என். வி. நடராசனும், மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவர் என். எஸ். இளங்கோவும், பொருளாளர் கலைஞர் மு. கருணாநிதியும் அமர்ந்துவந்தனர். அவர்கட்கு நகர முழுமையும் மலர்மாலைகள் சூட்டினர்! மக்கள் எல்லாம் விழாப்போல் கொண்டாடிய காட்சி, ஆரூரின் வரலாற்றில் ஒரு புதுமையாக இருந்தது!!

தஞ்சை மாவட்ட மாநாட்டில் கூடியோரின் வகையினையும், சொற்பொழிவாற்றியோர் தந்த கருத்து மழையினையும், தொண்டர் குழாத்தின் சிறப்பினையும் எடுத்துக் காட்டிட வேறெதுவும் தேவையில்லை—மாநாட்டின் விளைவாகக் கிடைத்திருக்கும் மிச்சம் சுமார் இருபதாயிரம் ரூபாய்க்குமேல் என்கின்ற ஒன்றே போதும்! ஒரு மாவட்ட மாநாட்டில் ரூபாய் 20,000 மிச்சம்—உண்மையிலேயே இதனை அறிவித்தபோது, கருணாநிதியின் உள்ள மகிழ்வு, கண்களில் படர்ந்தது. ''தம்பி! உன் கரம் பட்டு எத்தனையோ பேர் நாட்டில் இலட்சாதிபதிகளாகி யிருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது, உன் கரம் பட்டு 20,000 கிடைத்தது ஒரு பெரிதா?'' என்று அண்ணா அவர்கள் சொன்னார், மாநாட்டில். கருணாநிதி, கண்களைத் துடைத்துக்கொண்டார்! ஆர்வமும் உணர்ச்சியுமிக்க அந்தக் காளை—'கலைஞர், கலைஞர்' என நாட்டோரால் அழைக்கப்படும் அத்தொண்டர்—அதே ஆரூரில் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் கழகம் வளர பட்டபாடு, என் கண் முன்னால் வந்ததும் — நானும் என் கண்களை துடைத்துக் கொண்டேன்!!

நாம், 300-க்கு மேற்பட்ட கிளைக் கழகங்கள் இருந்தும்—ஆதரவு தர நல்லவர்கள் இருந்தும்—கண் மூடாது உழைக்கும் உழவர்கள் ஏராளமிருந்தும்——'தஞ்சை' தேர்தலில் ''ஒருவரை'' க்கூட சட்ட சபைக்குத் தரவில்லை நமக்கு. அதற்கு, பல காரணங்கள் சொல்லக் கூடும்—தஞ்சையின்மீது கழகக் காவலர்கள் தமது கவனத்தை அதிகம் செலுத்தவில்லை என்று முணுமுணுப்பதும் கேட்காமலில்லை, நமக்கு. நடைபெற்ற தேர்தலில் கழகச் சார்பில் நின்றோர் வாங்கிய ஓட்டுகளின் எண்ணிக்கை, சாதாரணமானதல்ல!

நல்லோரின் ஆசி இருக்கிறது—மக்கள் மன்றத்திலும் நம்மைப்பற்றிய நல்லெண்ணம் இருக்கிறது—உழைக்கும் தோழர்கள்—நாட்டை வாழ்விக்கும் கொள்கையும் நம்மிடம்தான் இருக்கிறது. இவைகளை யெல்லாம் தக்க முறையில் பயன்படுத்தி இப்போது முதல் நல்ல தொடர்பை மக்களிடம் ஒவ்வொரு கழகத் தோழரும் உண்டு பண்ணிக் கொள்ள வேண்டும். அதற்கான வகையில் மாவட்டச் செயலாளர் என். எஸ் இளங்கோவும், அவருடன் ஒத்துழைத்த வரவேற்புக்குழுவினரும், மாவட்ட பிறநிர்வாகிகளும் தக்க திட்டம் தீட்டி பணியாற்றவேண்டும்.

தஞ்சைத்தரணி சாதாரணமானது அல்ல! அங்கு காவிரி பாய்கிறது; அதினின்றும் உண்டான பல நதிகள் ஓடுகின்றன என்பது மட்டுமே பலருக்குத் தெரிந்திருக்க முடியுமே தவிர, ஆண்டு மாண்ட வீரப் பரம்பரையினரின் வெற்றிகளை உணர்த்தும் சின்னங்களும் உண்டு என்பதைப் பலர் அறியார். முடிகொண்டான் என்று பெயர் கொண்ட ஆறு ஓடுகிறது — கடாரங்கொண்டான் எனும் ஊரும் உண்டு—புகாரும் 'தரங்கம்'பாடும் ஊரும் 'அரண்' தாங்கியும், அழகான ஆலயங்களும், அமிழ்ந்து போய்க் கொண்டிருக்கும் அரண்மனைகளும் நமது பழந்தமிழ் புகழை எடுத்துக்காட்டுவனவாகும்.

அவைகளை யெல்லாம் ஒரு கணம் எண்ணிடின், உள்ளம் எரிமலையாகும்! உணராத காரணத்தினாற்றான், தஞ்சை மாவட்டத்திலுள்ள பலர், இருளிலும், 'கொண்டதே கோலம்' எனும் போக்கிலும் உள்ளனர். அந்த இருளைப் போக்கிடும் பணியினை அங்குள்ள கழகத்தவர், அன்பு முறையால், கழகத்தின் கண்ணியம் கடமை கட்டுப்பாடு எனும் மூல மந்திரங்களின் துணை கொண்டு முயற்சிப்பார்களாயின் வெற்றி கிட்டும்! தாயகம் விடுதலை முரசு கொட்டும் நாள் விரைவில் எட்டும்!! ஃ



மாநாட்டில் இம்மாதிரியான 'பேட்ஜ்'கள் தரப்பட்டிருந்தன.

திருவாரூர் தந்த திருமுகம்

தஞ்சை மாவட்ட மாநாடு மே 10, 11 தேதிகளில் கூடியது!

ஆரூர் அழைத்தது! கழகம் அழைத்தது! தாயகம் அழைத்தது! தணியாத ஆர்வம் அங்கு அழைத்துச் சென்றது!

காடுகளிலும், கழனிகளிலும், மற்றும் பலப் பல வேலைகளிலும் ஈடுபட்டிருக்கும் மறவர் கூட்டம், தலைநகரின் உயர் மாடத்திலிருக்கும் முரசு ஒலிப்பது கேட்டால், விரைந்தோடி வந்து படை வரிசையில் நிற்றல் போல, ஆரூருக்கு அழைத்த முரசொலி கேட்டு, மறவர் கூட்டம் திரண்டுவந்தது!

வீரர் கூட்டம் — தாழ்ந்த நாட்டை மீட்டுத் தரும் தீரர் கூட்டம்—தஞ்சைத் தரணியிலுள்ள நூற்றுக் கணக்கான பாசறைகளிலிருந்து கிளம்பி ஆரூர் நோக்கி வந்தது!

அணியணியாக சிற்றூர் பேரூர்களிலிருந்து வந்தனர்; சாரை சாரையாக வந்தனர்; நடந்து வந்தனர்; மாட்டு வண்டிகளில் வந்தனர்; புகை வண்டிகளில் நெருக்கிக் கொண்டு வந்தனர்; சிலர் 'பறந்தோடியும்' வந்தனர்.

ஆரூர் தந்த பொலிவைக் கண்டு அவர்கள் வியந்தனர்! அவர்கள் வந்த வலிவைக் கண்டு ஆரூர் வியந்தது!

வரவேற்புகளும், வளைவுகளும், வண்ணத் தோரணங்களும், இரு வர்ணக் கொடிகளும், பார்க்குமிட மெங்கும் நீக்கமற நிறைந்திருந்தன!

ஊர்வலம் — உணர்ச்சி அந்த நகரை வலம் வரும் காட்சியாக இருந்தது!

சேர சோழ பாண்டியர்கள் வந்தனர்! வில்லைத் தாங்கிய வீரர் கூட்டம் வந்தது! கல்லைத் தாங்கிக்கொண்டு கனகனும் விசயனும் வந்தார்கள்!

ஊர்வலம் விதியிலே வந்தது. வரலாறு நம் மனக்கண் முன்னே வந்தது!

வாழ்ந்த நாடு—ஆண்ட பரம்பரையினர்!

யானை மேல் முரசு ஒலித்தது! அலங்கரிக்கப்பட்ட சிறு தேர்களில் — வண்டிகளில் —கொடிகள் அசைந்தன! குதிரை மேலிருந்து குழல் ஒலித்தது! அணி வகுத்து வந்த வீரர்களின் குரலில் ஆர்வம் தெரிந்தது!

மாநாடடுப் பந்தல்-தஞ்சைப் பகுதிக்குரிய கலையழகு குறையாமல் —அலங்கரிக்கப்பட்டிருந்தது.

பெருமிதமான தோற்றத்துடன் அழகான நுழைவு வாயிலை மாயூரம் தோழர்கள் அமைத்திருந்தனர்! பளிங்கு மண்டபத்தில் சேர்க்கப்பட்ட எழிலை தென்னங்கீற்றுகளில் இவர்கள் செய்து காட்டினர்.

அதையடுத்து வந்த பட்டி மண்டபம் — குருத்தோலைகளினால் செய்யப்பட்ட வாயில்— குற்றாலம் தோழர்களின் வேலைப்பாடு! முதல் வாயில் பெருமிதத்துடன் நின்றதென்றால், இரண்டாவது வாயில் கனிவு ததும்பும் அழகுடன் நின்றது!

நாற்பதினாயிரம் பேர்கள் அமரத் தக்க அந்தப் பந்தலில் வாழையும், கமுகும், தாழ்குலைத் தெங்கும், வண்ணப் பலாவும், தேமாங் கனியும், கொத்துக்கொத்தாகத் தொங்க விடப்பட்டிருந்தன.

தோழர் ப. உ. சண்முகம் அவர்களின் திறப்புரை, இன்பத் திராவிடத்தைக் காண நாட்டினரை அழைக்கும் திருமுகமாக அமைந்தது!

தலைவர் மதியழகன் அவர்கள் தமது தலைமையுரையை தமக்கே உரித்தான தெள்ளிய நடையில் —தெள்ளு தமிழ்ப் பேச்சில் கழகத்தின் வளர்ச்சியையும், காலங் கனிந்து வருகிற தன்மையையும், இன்பத் திராவிடம் எப்படியும் அமைந்து தீரும் என்ற உறுதியான நிலைமையையும் விளக்கிக் கூறினார்.

மன்றம்

மற்றும், மாநாட்டில் கலந்துகொண்ட தோழர்கள்— பல பிரச்சினைகள் பற்றிப் பேசினார்கள்.

பொதுச் செயலாளரின் உரையும், கடைசியாக பொறுக்கி எடுக்கப்பட்ட முத்துக்களை நிரல்படவைத்து, நடுநாயகமாக நல்லதொரு பதக்கத்தை வைத்து அழகு சேர்ப்பது போல அறிஞர் அண்ணாவின் சிறப்புரையும் நடைபெற்றன.

தஞ்சை மாவட்ட மாநாட்டைச் சிறப்பான முறையில் நடத்திடும் பெரும் பொறுப்பை ஏற்றுக் கொண்டவர் தோழர் கருணாநிதி ஆவார்கள். அவருடைய செயலாற்றும் திறனையும், ஒரு பொறுப்பை நிறைவேற்றும் பொழுது பண்புடனும் பொறுமையுடனும் செய்து முடிக்கும் தன்மையையும், திருவாரூர் மாநாட்டைக் கண்டவர்கள் நன்கு உணர்ந்தார்கள்.

கழகம் வளர்ந்து வருகிறது; மாநாடுகள் பெருமிதத்துடன் நடைபெறுகின்றன; மக்கள் பல்லாயிரக் கணக்கில் கூடுகின்றனர். நம்மைவிட அதிகவசதிகளை ஆளுங் கட்சியும், பிற கட்சிகளும் பெற்றிருக்கின்றன! அவர்கள் நினைத்தால் புது நகரங்களையே அரசாங்கச் செலவில் உண்டாக்கிவிட முடிகிறது! பெரிய கண்காட்சிச் சாலைகளை வைக்க முடிகிறது! ஆனால் அங்கெல்லாம் ஈர்க்க முடியாத மக்கள் கூட்டம், அங்கெல்லாம் காணாத உணர்ச்சியும் உற்சாகமும் திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டில் காணப்படுகிறது! ❖

தஞ்சையின் எழுச்சி!

தஞ்சையின் வீழ்ச்சியை நினைத்து நினைத்து மனமுருகியிருக்கிறோம். எழுதி எழுதிக் கண்ணீர் மல்கியிருக்கிறோம். வரலாற்று ஏட்டினில் ஒரு சோகத் திருப்பமாக தஞ்சையின் வீழ்ச்சி நம்மையெல்லாம் தலை தாழ்த்த வைத்திருக்கிறது.

சோழர் குல மாவீரர்கள் உலவிய இடம் — புலிக்கொடி வான் தொட உயர்ந்த இடம்— கலைத் தோட்டமாய் — நெற்களஞ்சியமாய் — செழித்திருந்த இடம்—அந்த இடத்தைப் புகழின் அடிச்சுவடுகூடத் தெரியாமல் புழுதி பேடாக்கிவிட முனைந்தோர், ஏராளம்! ஏராளம்!

வீழ்ந்த தஞ்சை வீழ்ந்ததே தவிர தன் பழம் பெருமையை அறவே அழித்துக் கொள்ளவில்லை. நெஞ்சில் ஈரமும் வீரமுங் கொண்டோர் தமிழர்—அவர்கள் கலை வளர்த்த தரணி தஞ்சை! கலைக் கோட்டத்தை இடித்துத் தகர்த்து, தமிழனின் வரலாற்றுச் சுவடிகளை இருட்டு மாளிகையில் வீசியெறிந்து, நான்கு புறமும் வகுப்பு வெறியெனும் அகழ் வெட்டி வாழுகின்ற புதுமையின் பகைவர்கள்—புல்லறிவாளர்கள்—ஒளிக்கீற்று எங்காவது தென்படுமாயினும் அதை அணைத்திடவே ஆள் சேர்ப்பர் என்ற நிலை தஞ்சைத் தரணியை இடைக் காலத்தில் ஆட்டிப் படைத்தது.

அந்த முட்டுக்கட்டையினையும் மீறி முகில் கிழிக்கும் நிலவு போல தஞ்சை பூமியிலே இன உணர்வென்னும் ஒளி பரவிடத் தொடங்கிற்று. அதனைத் துணைக் கொண்டு அரசியல் விழிப்பு ஏற்படலாயிற்று. நிலைமைகளைச் சாதகமாக்கிக் கொள்ளத் தருணம் பார்த்திருப்போர் அரசியல் வட்டாரத்தில் அதிகம்—அதிலும் காங்கிரஸ் கட்சியில் அமோகம்!

இந்தியத் துணைக் கண்டத்திற்கு விடுதலை கிடைக்கப் போகிறது என்ற ஜாடை தெரிந்ததும், ஜரிகைத் தொப்பிகள் — ஜமீன்கள் — சர்கள் — ராவ்பகதூர்கள் — எல்லாமே எல்லாவற்றையும் உதறிவிட்டுக் காங்கிரசில் இணைந்தன. தஞ்சை காங்கிரசுக்குப் பண பலம் கிட்டியதும் நாலைந்து பணக்காரர்கள் கையில் காங்கிரசும் தஞ்சையும் தஞ்சம் புகுந்தன. அவர்கள் வைத்ததே சட்டமாயிற்று. அவர்கள் கிழித்த கோட்டைத் தாண்டுதற்கு யாரும் துணியார்.

செல்வச் சீமான்களின் பாதுகாப்புக் கோட்டையாக காங்கிரஸ் மாறியதை ஏழை உழவன் கண்டான். அவன் கையிலே நெல்மணியும் — கண்களிலே நீரும்! காங்கிரஸ் போர்வையிலே பண்ணைக்காரர் ஏது வேண்டுமானாலும் செய்யலாம்—ஏனென்று கேட்க நாதி இல்லையே என உழவன் ஏங்கினான்.

அந்தச் சமயத்தில் அவனுக்குக் காட்டப்பட்ட அமைதியான போராட்ட மார்க்கத்தை அவன் ஏற்றுக்கொள்ள உணர்ச்சி இடங்கொடுக்கவில்லை. அவனது உணர்ச்சிக்கு நெய் வார்த்து மேலும் எரியவிட்டு அந்த நெருப்பிலே குளிர் காய விரும்புகிற தோழர்கள் "உலகப் பாட்டாளி மக்களே! ஒன்றுபடுங்கள்!" என்ற முழக்கத்தோடு தஞ்சையில் ஒரு சிறிய தெலிங்கானாவை அமைத்துக் காட்டினர்.

பலாத்காரம்—தீ — கொள்ளை —கொலை! இப்படியொரு பயங்கரம், தஞ்சையைக் கப்பிக் கொண்டது!

நேரம் பார்த்துப் பொதுத் தேர்தல் வந்தது. காங்கிரசுக்கு எதிராக எல்லா சக்திகளும் தஞ்சையில் ஒன்றுகூடி நின்றன. பணக்காரர் கையிலேயிருந்த வலிமை குறைக்கப்பட்டது. காங்கிரஸ் படுதோல்வி அடைந்தது. ஏழை உழவனும், பாட்டாளியும், நடுத்தர மனிதனும் தங்களுக்கு வழிகாட்டக் கூடியவர்கள் கம்யூனிஸ்டுகளே என நம்பினர். நம்பிக்கை சிறிது சிறிதாகத் தேயக்கூடிய பருவம் ஆரம்பமாயிற்று. அடுத்த தேர்தலில் அதன் விளைவும் அறுவடையாயிற்று. இந்த இடைக் காலத்தில் கம்யூனிஸ்டுகளின் சரிவை உற்று நோக்கிக் கொண்டிருந்தவர்கள்—வேறு புறத்தில் மறைமுகமாக காங்கிரசுக்கு ஊட்டம் தரப் படுவதைக் கவனிக்காதிருந்து விட்டனர்.

கம்யூனிஸ்டுகளின் வீழ்ச்சியினாலேயே காங்கிரசுக்குவளர்ச்சி ஏற்பட்டது என்று கூறிவிட முடியாது. காங்கிரஸ் போன தேர்தலில் ஏற்பட்ட பெருந் தோல்வியை சிந்தித்து தஞ்சை மாவட்டத்து மக்களை மயக்குவதற்கான மாய்மாலங்களில் மறைமுகமாக ஈடுபட்டதின் காரணமாகவே பெரும் வெற்றியை எட்ட முடிந்தது இரண்டாவது பொதுத் தேர்த

வில் திராவிட முன்னேற்றக் கழகம் போட்டியிடுவதெனத் தீர்மானித்துத் தேர்தலுக்கான முன்னேற்பாடுகளைக் கவனிப்பதற்கும் நேரமின்றி திடுமெனத் தேர்தல் களம் புகுந்தது.

அப்போதெல்லாம் கழகத்திற்குத் தஞ்சையில் போதிய வளர்ச்சியில்லை. கிளைக் கழகங்கள் அதிகமில்லை. பொது மக்களோ கம்யூனிஸ்டுகளிடம் அதிருப்தி அடைந்து, ''இவர்களுக்குக் காங்கிரஸ்காரர்களே பரவாயில்லை'' யென்று முணுமுணுத்துக் கொண்டிருந்தனர். அந்த நெருக்கடியில் வசதிகளற்ற நமது விளக்கவுரைகள் அவர்கள் விழிகளைத் திறக்கவோ, செவிகளில் விழவோ வாய்ப்பில்லாமற் போய் விட்டது. அதனால் தஞ்சையில் கழகத்திற்குக் கணிசமான வாக்குகள் கிடைத்தனவே தவிர, வெற்றிப் பூரிப்பு ஏற்பட வழியில்லாமற் போயிற்று.

அந்தத் தேர்தல் முடிவை மட்டுமே வைத்து தஞ்சை மாவட்டத்திக் கழக வலிவைக் கணக்குப் போட ஆரம்பித்தனர் அரசியல் வட்டாரத்தினர். ''தோல்வி'' நல்லதோர் விழிப்பை உடனடியாக ஏற்படுத்த உதவியது. எமாந்துபோய் காங்கிரசை வெற்றி அடையச் செய்து விட்டோம் என்ற ஏக்கம் எங்கெங்கும் எதிரொலித்தது. புதிய உணர்ச்சி—புதிய எழுச்சி—புதிய தொடர்பு-புதிய முழக்கம் — இப்படிப் பொங்கி எழுந்தனர் ஊருக்கு ஊர் வீரர்கள்!

சிற்றூர், பேரூர்களில் கொள்கை விளக்கக் கூட்டங்கள்—கிளைக் கழக அமைப்புகள்—கழகத்திற்கென புதிய புதிய கட்டிடங்கள் — கால்கோள் விழாக்கள் — தஞ்சையிலே கழகத்தின் ஒளி, படர்ந்திருந்த இருளைக் கிழிக்க எழுந்தது.

பெரியாரின் திராவிடர் கழகமோ, சென்ற தேர்தலில் கம்யூனிஸ்டுக் கட்சியின் வெற்றிக்கும் இந்தத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் வெற்றிக்கும் தானே தலையாய காரணம் என்று பெருமை பேசிக் கொண்டது. எந்தப் பிரச்சாரத்திற்கும் செல்லுகிற 'ஒலி பெருக்கிக் கடை' போலக் கழகம் ஆகிவிட்டதை யெண்ணி திராவிடர் கழகத்திற்குள்ளே பணி புரிந்த நண்பர்களே வேதனைப்பட்டனர். பாலையவனம் துரையரசன் போன்ற திராவிடர் கழகத் தூண்கள் பெரியாரின் முரண்பட்ட போக்கு கண்டு வெளியேறினர். தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணம் தொகுதி சம்பத், பட்டுக்கோட்டை தொகுதி சீனுவாசன், மந்திரி வெங்கட்ராமன் போன்ற பார்ப்பனப் பிரமுகர்களுக்கு திராவிடர் கழகம் ஓட்டு சேகரித்துக் கொடுத்ததையும்—பின் அதே கழகம், பார்ப்பனர்களை எதிர்த்து ஓரிரு மாதங்களில் ஆரம்பித்த மாபெரும் போராட்டத்தையும் கண்டு வியப்படைந்தவர்கள் திராவிடர் கழகத்திலிருந்து கூட்டம் கூட்டமாக வெளியேறினர்.

திராவிடர் கழக, கம்யூனிஸ்டுக் கட்சிகளின் சார்புடைய விவசாயிகளைத் தட்டி யெழுப்பி விழிப்பேற்படுத்தும் வகையில் ஒரு நிகழ்ச்சி உருவெடுத்தது. அதுதான் திராவிட முன்னேற்றக் கழகம் ஈடுபாடு கொண்டு அமைதியோடு நடத்தி வெற்றி கண்ட நங்கவரம் உழவர் அறப்போர்! அது திருச்சியிலே நடைபெற்றது என்ருலும், தஞ்சை மாவட்டத்து விவசாயிகளின் கவனத்துக்கு உரியதாயிற்று! வைக்கோற் போர்களுக்கு நெருப்பு மூட்டப்படாமலே—களத்துமேட்டு நெற்குவியல் களவாடப்படாமலே—வீடுகள் தீய்க்கு இரையாகாமலே—நங்கவரம் அறப்போரில் தி. மு. கழகம் வெற்றிக்கொடி நாட்டியது. வெளியேற்றப்பட்ட உழவர்கள் நிலத்திலே மீண்டும் உழைத்திடும் உரிமை பெற்றனர். பெரும்பாலான கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டன. அமைதியும் கண்யமும் சிறந்து மிளிர, நடந்து முடிந்த நங்கவரத்தால் ஈர்க்கப்பட்டோர் இதுவே எமக்கு ஏற்ற கழகமென அணி அணியாய்ச் சேரலாயினர். மாவட்டத்தின் பல பகுதிகளில் விவசாயிகளின் முன்னேற்ற சங்கங்கள் மலரலாயின.

உழவர் அணிவகுப்புடன் போட்டியிடும் வகையில் இளைஞர் அணி வகுப்பு—வாலிபர் வரிசை—கழகத்திற்கு எங்கெங்கும் பெருகிடலாயிற்று. மாவட்டச் செயலாளர் அருமைத் தோழர் என். எஸ். இளங்கோ அவர்களின் அரிய அமைப்பு முறைச் செயலால், வட்டச் செயலாளர்களின் ஓயாத உழைப்பால், மாவட்டத்தில் முன்னூறு கிளைகள் தோன்றலாயின. ஆங்காங்குள்ள பெரும் பகுதிகளில் ஆர்வமுள்ள கழகக் காவலர்கள் தாங்களே பொறுப்பேற்றுக்கொண்டு தங்கள் வட்டாரததைக் கழகத்தின் கோட்டையாக்க வேண்டுமெனச் செய்துள்ள முயற்சிகள் விவரிக்க இயலாதெனலாம்.

இப்படி நாள்தோறும் பெருகி வரும் கழகத்தின் சக்தியை ஒருசேரக் காணுதல் வேண்டுமென அவாக்கொண்ட மாவட்டக் கழகத்தினர் 3-வது மாவட்ட மாநாட்டினை நடத்திட வேண்டுமெனத் திட்டம் தீட்டினர். முதலிரண்டு மாவட்ட மாநாடுகள் முறையே மாயவரத்திலும், தஞ்சையிலும் நடைபெற்றுவிட்ட காரணத்தால், இந்த மாநாட்டை எங்கே நடத்துவதென கேள்வி உருவாயிற்று. திருவாரூரில் நடத்த வேண்டுமென நான் வேண்டுகோள் விடுத்தேன். பலரும் தங்கள் தங்கள் ஊரிலேயே நடத்த விரும்பினர். இறுதியில் திருவாரூரே வென்றது.

''ஐயாயிரம் ரூபாய் மிச்சம் காட்டுவீரோ? பத்தாயிரம் காட்டுவீரோ?......'' என்றெல்

லாம் அன்புத் தோழர்கள் மனதில் களங்கமின்றிக் கேலி புரிந்தனர். மாநாடு நடத்துவதால் கழகத்தின் பிரச்சாரமும், அதே சமயம் கழகம் நடைபெறுவதற்கு நிதி திரட்டுகிற வேலையும் ஒருங்கே நிகழ்கிறது எனக் கொள்ளலாம். அந்த அளவில் மாநாடு திருவாரூரில் நடைபெறுவது "ஒரு கல்லில் இரு மாங்காய்" என இருக்கும் என்று எடுத்துக் கூறினேன். மாவட்டக் கழகம் அனுமதி தந்தது.

அனுமதி கிடைத்த மறுநாள் சிந்தித்தேன்—திருவாரூரில் மாநாடு நடத்துவதாயின் உள்ளூரில் நிறைய கழகத் தோழர்கள் வேண்டுமே—பார்க்கப்போனால் ஏனைய ஊர்களை விடத் திருவாரூரில் உழைப்போர் தொகை குறைவாயிற்றே என எனக்குள்ளே குழம்பினேன். வெளியில் கூறிட சிறிது வெட்கம்!

மாநாட்டு நாள் நெருங்க நெருங்க நானே முன்பு நினைத்தது தவறு என்று புரிந்து கொள்கிற அளவுக்குத் திருவாரூர் தன் உழைப்பை நல்கியது. அடடா......ஒன்பது ஆண்டுகளுக்கு முன்பு திருவாரூரில் தி. மு. கழகமென்றால் நான்—தென்னன்—விசயராகவன்—சேதுபதி—இவர்கள்தான் ஓடியாடி வேலை செய்யக் கூடியவர்கள். ஆனால், இன்று?......எங்கு திரும்பினாலும் இளைஞர் பட்டாளம்; "இதோ வந்தோம்" எனக் கூறிடுகிற காட்சியைக் காணுகிறேன். அப்பப்பா...அவர்கள் ஆற்றிய பணி! பட்டபாடு! வடித்த வியர்வை! திருவாரூர் மாநாட்டுக்கு மாநில மாநாட்டுச் சிறப்பு கிடைத்திருக்கிறதென்றால் அதற்குத் தோழர்களின் தோள் வலியும் நெஞ்சுறுதியுமன்றோ காரணம்! திருவாரூர்த் தோழர்கள் போதுமோ போதாதோ என்று எங்கெல்லாமிருந்தோ ஆற்றல் மிக்கோர் வந்து குழுமினர். அவர்களின் பெயர்கள் முழுவதையும் எழுதிடத்தான் ஏடு கொள்ளுமோ? இதோ...அவர்களின் சிலர் என் மனக் கண்களிலே தோன்றி விடுதலை விருத்தம் பாடிக் காட்டுகிறார்கள்.

மாநாட்டு முன் செலவுகளுக்குப் பணம் தேவைப்படுமேயென்று கூறி முடிக்கவில்லை நான்; "அதற்கென்ன? நான் தருகிறேன் இரண்டாயிரம்!" என உறுதி தந்து அடுத்த நாளே கொண்டு வந்து கொடுத்தது மட்டுமல்லாமல், குவிந்திருந்த பணிகளையும் பங்கு போட்டுக் கொண்ட வாழக்கரை இராசகோபால்!

"தலைவர்கள் அமர மேடைதானே வேண்டும் உங்களுக்கு? அதோடு நிறுத்துங்கள்-அதற்கு நானுச்சு" எனக் கூறி அழகு மேடை அமைத்துத் தந்த வெங்கிடங்கால் சௌரிராசன்!

"மாநாட்டுப் பந்தலை அழகுபடுத்த வேண்டுமா? மா, பலா, வாழை என்ற முக்கனி மட்டும் போதுமா? போதாதா? ஆமாம்; போதாதுதான்—இதோ பாருங்கள், நாங்கள் தொங்கவிடும் மலர்க் கொத்துக்களை! பாக்குக் குலைகளை! ஈச்சங் குலைகளை! பனங் குலைகளை! செவ்விளநீர்க் குலைகளை! இன்னும் போதவில்லையா? இதோ, நெல் முத்துக்களைக் கோர்த்த சிங்காரத் தொங்கல்! கதிர்களை இணைத்த தோரணம்! இன்னும் பாருங்கள்; வாழைத் தோட்டத்தையே உற்பத்தி செய்து காட்டுகிறோம்!" எனச் செயல் முலம் விளக்கி சிந்தை தொடும் அலங்காரங்களைச் செய்த டாக்டர் விசயராகவன், சதாசிவம்!

"கோடைகாலமென மலைத்திட வேண்டாம்-தண்ணீருக்கு நான் பொறுப்பு" என முன் வந்து பொறுப்பினை அக்கறையுடன் செய்துமுடித்த சேதுபதி—அவருக்கு உறு துணையாக இருந்து சுழன்று பணியாற்றிய 'உதய சூரியன்' படிப்பகத்து நல் இளைஞர்கள்!

"மரம் நட வேண்டுமா? தட்டியைத் தலையில் தூக்கிச் செல்ல வேண்டுமா? டாக்டர் உத்தியோகம்—அந்த மதிப்பெல்லாம் பிறகு இருக்கட்டும்-எல்லாம் நானே செய்கிறேன்!" என்று அமைதியோடு உழைத்து ஊராரின் பாராட்டுதலைப் பெற்ற டாக்டர் தண்டபாணி!

சமர்க்களப் பாண்டியன் போல் நடந்து காட்டி, சௌந்தரபாண்டியனைப் போல கொள்கை தேக்கி, அயராது பாடுபட்ட சமரச பாண்டியன்!

சந்தணந்தான் அறைக்க அறைக்க மணம் பெறுதல் போல் உழைக்க உழைக்க உற்சாகம் கொள்ளும் வீரர்—ஒவ்வொரு சிறப்பிலும் அவருக்குப் பங்குண்டு—அவர்தான் வெங்கிடங்கால் சந்தானம்! தன்னூரில் கழகத்திற்கென மூவாயிரத்தில் கட்டிடம் அமைக்கின்ற தோழர்!

"என்ன அத்தான்; பந்தல் வேலை முடியவில்லை!" எனக்கூறி பறந்து சென்று பதினைந்து ஆளோடு வந்து பகலிரவு தூங்காது பந்தலை முடித்துத் தந்த கோமல் வெங்கட்டராமன்!

"உணவு உறக்க மெலாம் பந்தலிலேதான் — ஒழுங்காக மாநாடு முடிந்தால் போதும்" எனக்கூறி ஒரு துளி மழை விழுந்தால் இரண்டு துளி கண்ணீர் விட்ட பெருந்தகையாம் ராசசந்தானம்!

கழகத்திற்கு உழைத்திடவும் தெரியும்—கடமைதனைத் தவறாமல் செய்கின்ற வேலையும் எனக்குப் புரியும்-எனச் சொல்லாமல் செயல் புரிந்த கருணை ஜமால்!

கனி வகையும் கற்கண்டுப் பொங்கல் வகையும் களிப்பு தரும் வகையினிலே வழங்கியதோடு, காட்டூரில் கழகத்துக் கட்டிடத்தைத் திறக்கின்ற விழாவினையும் திறம் படவே முடித்த தித்திக்கும் மொழியாளர்—திறமை மிக்குடையார்—கே. வி. ராமைய்யா!

அஃதேபோல் விருந்தளித்தார் ஒருநாள், ஆரூர் கல்யாணசுந்தரனார்!

கனி வகைக்கு எதிர் வகையாகக் கறி வகையில் உணவு படைக்கின்றேன்- இதனை விடச் சுவையாக நாயன விருந்தும் அளிக்கின்றேன்—எனச் சொன்னார் — தலைவர்களை மகிழ்வித்தார்—தமிழ் நாட்டு இசைப் பெருங்கோ குளிக்கரை பிச்சையப்பா!

உடல் நலங் குன்றியிருந்தாலும் உடன் பிறப்பு போன்றவரே — உமது ஆசை தீர மாநாட்டு வெற்றிக்கு உழைத்திடுவேன்—கவலை வேண்டாம் எனப் பம்பரம்போல் சுற்றிய பழைய நாள் தோழன் தென்னன்!

"உணவுகூடத் தேவையில்லை—உறக்கமெனும் பெருந் தொல்லையும் மாநாடு முடியும்வரை

எனக்கில்லை — ஓய்வு நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள்! எனக்கு நல்ல உடல்!'' என நவின்று முப்பது நாள் எனைப் பிரியாதிருந்த கருணானந்தம்!

அவரனையார் அருமைக் காந்தி! அன்பு சக்தி! அலுப்பின்றித் தொண்டு செய்த பராங்குசம்! அலுவலகத்தில் பேனாவுங் கையுமாய் அமர்ந்திருந்து பிரதிநிதி — வரவேற்பாளர்—கணக்குதனை ஒழுங்காக வைத்திருந்த பொறையாறு ஜம்பு—பொறுமையாளர்! ஏற்றாற் போல எறும்பென உழைக்கின்ற தோழர் இராசன்!

இரவெல்லாம் பந்தலுக்குப் பாதுகாப்பளிப்பதற்காக அத்திப்புலியூர் ராமதாசு, ராசமாணிக்கம், பிச்சையன், சங்கரன், தங்கவேலு — தி. மு. க. சிங்கங்கள்! காலை மாலை நாகையினின்றும் கடமையாற்றிடத் துடித்து வந்திடும் காளையர் பட்டியல் களிப்பைக் கொட்டும்! களைப்பை விரட்டும்! செயல் புரியும் ராமன்! சிரித்த முக ராமு! பழைய நண்பர் பாப்பையன்! பாட்டாளியின் தோழன் பெருமாள்! இவரெல்லாம் மாநாட்டுச் சிறப்புக்குத் துணை நின்றோர்.

மாயூரம் கிட்டப்பா மாநாடு வெற்றிக்கு எது வேண்டுமோ அட்டியின்றி செய்து தந்தார்! குடந்தை பத்மநாபன், குருவிக்கரம்பை கிருட்டிணமூர்த்தி, வலங்கிமான் சாமிநாதன், ஆரூர் தில்லைமணாளன், தியாகராசன், டி. பி. டி, ஜேயராமன், துரை, அம்மையப்பன் சோமசுந்தரம், மன்னை அறிவழகன், கமலத்தியாகராசன், கலியபெருமாள்- இவர்கள் முயற்சியின் முழுப் பயனே திருவாரூர் மாநாடு! இவர்களுடன் திருச்சி திராவிடப் பண்ணை முத்தவும் சேர்ந்துகொண்டால் சீருடன் மாநாடு நடைபெறக் காரணம் கூறவும் வேண்டுமோ? எழில் ததும்பும் ஓவியக் காட்சி தந்த மாயவரம் ராசனும், அறந்தாங்கி கருணாவும் எவ்வளவு பாராட்டுக்கும் தகுதியானவர்கள். நன்றி மறவாத நடிக மன்னர் கலைவாணர் திருவுருவும், அரசியல் மேதை செலவம், அழகிரி அண்ணன் —ஆகியோர் எழிலுருவும் அமைத்துத் தந்த வீரய்யா அனைவரின் வாழ்த்தும்பெற்றார்.

கொள்கை வெறியோடு முன் முகப்பும், உள் முகப்பும் அமைத்து மாநாட்டிற்கே தனிச் சிறப்பு சேர்த்த மாயூரம் வைத்யநாதன், குற்றாலம் வைத்திலிங்கம் குழுவினரை காணத் துடிக்காதார் யார்?

வைரத்தை வாரியிறைத்தனரோ — வான்மீன்கள் கூட்டமோ — என வாய்பிளந்து வியப்பு கொட்டும் அளவுக்கு மின் விளக்கு அமைத்த ராபிக்கு மதிப்புரை நல்காதவர் எவர்?

தொண்டர் படைத் தலைவர்களாம் பேராவூரணி அடைக்கலம், கொரடாச்சேரி நடராசன் இருவரும் ஆற்றிய பணியில் அடையாளம் தெரியாதவாறு இளைத்தே போயினர். அவர் தம் தொண்டர் படையோ அத்தனை பேரும் அயர்வில்லாக் காளையர்! அவர்க்கேற்ற இணையிலாத் தலைவர்கள் இருவர்!

''அங்குமிங்கும் இப்படிப் பரபர வென ஓடியாட இவருக்கு எப்படித்தான் உடல் இடந் தருகிறது?'' என மூக்கிலே விரல் வைப்பார்கள்; செயலாளர் மன்னை நாராயணசாமி மாநாட்டு வேலைகளை கண்ணும் கருத்துமாய்ப் பார்க்கும்போது! அளவு கடந்த உழைப்பு அவரைப் பொறுத்தவரையில்!

விளம்பரப் பொறுப்பாளர் நாகப்பன—ஆரூர் தந்த அருமையான வைரம்! பொறுமைக் கடல்! வயதில் சிறிது முதிர்ந்தவர்—ஆனால் கொள்கை பரப்புவதில் வாலிப உள்ளம்!

நேர்மையின் முனையும் முறியாது—நெறி பிறழாது—செயலாற்றக்கூடிய தங்கமெனத் தஞ்சை மாவட்டத்திற்குக் கிடைத்தவர் அருமைத் தோழர் இளங்கோ! இணை பிரியாது என்னுடனேயே இருந்து மாநாட்டுப் பணிகளை அவர் மேற்கொண்ட விதம் பாராட்டுதற்குரியது! தன்னுடைய மாவட்டம் சிறப்பான மகாநாட்டைக் கூட்டிக் காட்ட வேண்டுமெனத் துடித்தார்!

இப்படிப்பட்ட துடிப்புள்ள தோழர்களின் துணையோடு முதலில் எடுத்துக் காட்டிய சூழ்நிலைகளோடுதான் திருவாரூர் மாநாட்டிற்கான ஏற்பாடுகள் தொடங்கின. மாநாட்டு வேலைகளை கவனிப்பதற்காக ஏப்ரல் திங்கள் பனிரெண்டாம் நாள் திருவாரூர் வந்தேன்.



தென்னங் கீற்றாலான மாநாட்டு வெளி முகப்பில் தென்னகத்துப் பெரும்படை திரண்டிருக்கும் காட்சி!

தஞ்சை மாவட்ட மாநாடு இரண்டு நாட்கள்தான் நடைபெற்றது எனக் கூறுவது தவறாகும். ஏறத்தாழ அந்த மாநாடு தஞ்சைத் தரணியில் ஒரு மாத காலம் தொடர்ந்து நடைபெற்றது என மொழிவதே சாலச் சிறப்புடையதாகும். இருபது கூட்டங்களுக்குமேல்மாநாட்டுப் பிரச்சாரக் கூட்டங்கள் நடந்திருக்கின்றன. ஒவ்வொரு கூட்டத்திலும் ஆயிரமாயிரம் பொதுமக்கள் கலந்துகொண்டு கழகத்தின் கொள்கை விளக்கங்களைப் பெற்றனர்.

கூட்டங்கள் நடத்திய கிளைக் கழகத்தினர் மாநாட்டு நிதியாக ஒவ்வொரு கூட்டத்திலும் நூறு ரூபாய் அளித்தனர். தங்களூரில் ஒரு மாதிரி மாவட்ட மாநாட்டையே நடத்திக் காட்டினர் என்று தலைநிமிர்ந்து கூறலாம். அப்படி நிகழ்வுற்ற மாதிரி மாவட்ட மாநாடுகள்தான் திருவாரூரில் ஒரு மாதிரி மாநில மாநாட்டை நடத்தக்கூடிய அளவுக்குத் துணை புரிந்தன! என்னே எழுச்சி—என்னே ஆர்வம்—ஒவ்வொரு சிற்றூர் பேரூர்களிலும்! நாங்கள் சொற்பொழிவாற்றச் சென்ற எல்லா ஊர்களுமே பெரும்பாலும் கிராமங்கள்! ஒன்றிரண்டே நகர வாடையுடையவை. அடடா — அவர்கள் தங்கள் ஊர்களில் நடத்திய ஊர்வலமும்—வாண வேடிக்கைகளும்—மேடை யலங்காரமும்—வரவேற்பும் — இசை நிகழ்ச்சிகளும் — தஞ்சையின் புதிய கோலத்தை — கம்பீரத் தோற்றத்தை—எங்களுக்கு அறிவித்தவாறே இருந்தன.

கிளைக் கழகத்தினர்—மாநாட்டு நன்கொடையாகப் பத்து ரூபாய் அனுப்பிட வேண்டுமெனக் கேட்டுக்கொண்டோம். அநேகமாக எல்லாக் கிளைக் கழகத்தினரும் தங்கள் கடமையைச் செய்து முடித்து எங்களைக் களிக்க வைத்தனர். சுற்றறிக்கை யொன்று, மாநாடு சிறப்புற வழிகள் குறிக்கப்பட்டு அனைவருக்கும் அனுப்பப் பட்டது. அந்த அறிக்கைக்குத் தான் தஞ்சை மாவட்டத்துக் கழகக் காளையர் எந்த அளவு மதிப்பு தந்தனர்! அதன் எடுத்துக் காட்டுதான் முதல் நாள் திருவாரூரின் ராஜ வீதிகள் அதிர நடத்தப்பட்ட மாபெரும் பவனியாகும்.

குடந்தைப் பெரியவரும், நமது கழகக் காவலர்களில் ஒருவருமான மதிப்புமிகு கே. கே. நீலமேகம் அவர்கள், மாநாட்டு மேடையில் அண்ணா அவர்களிடம் கூறிக் கொண்டிருக்கிறார்—அந்த வாசகங்கள் என் காதில் விழுகின்றன:

"அண்ணா! சிறிது தாமதமாக வந்து விட்டீர்களே! அடடா—ஊர்வலத்தைப் பார்க்காமல் போய்விட்டீர்களே — நமது கட்சிச் சரித்திரத்தில் பெரிய பெரிய ஊர்வலங்கள் நடந்திருக்கின்றன; ஆனால் இதைப் போன்ற அழகும், கவர்ச்சியும், எழுச்சியுமான பெரிய ஊர்வலங்கள் இதுவரை நடந்ததே யில்லையண்ணா! பழைய காலத்து ராஜாக்கள் ஊர்வலங்கள் இப்படி நடந்திருக்குமோ என்னமோ?"

—ஊர்வலத்தில் எனக்கேற்பட்ட மகிழ்ச்சியைவிட கே. கே. என். அவர்கள் சிறப்புரையைக் கேட்கும்போது ஏற்பட்ட மகிழ்ச்சியே அதிகம் என்பேன். அவரைப் போன்ற அனுபவமிக்கவர்கள்—பல நாட்களாகத் தொல்லை பல ஏற்றுக் கழகத்தைக் கட்டிக் காக்கப் பெரும் பொறுப்புக்கு ஆளானவர்கள்—உள்ளத்திலே ஏற்படுகிற பூரிப்புதான் நம்மைப் போன்ற வாலிபர்கள் செய்கின்ற பணிக்குக் கிடைக்கின்ற பரிசாகும் என எண்ணி எனக்கு நானே மகிழ்ந்துகொண்டேன்.

ஒரு மாநாடு நடத்துவதென்றால் சாதாரணமாக இருக்கிறதா? இதோ, விருத்தாசலம் மாநாட்டு வ. வே. கு. தலைவர் கோவிந்தசாமி அவர்களைப் பார்க்கின்றேன். தேர்தல் நேரத்திலேகூட அவர் முகம் இப்படிச் சுருங்கிப் போகவில்லை. உடல் கருத்துப் போகவில்லை. ஆளே உருமாறிக் காணப்படுகிறார். அவ்வளவு தொல்லைகள் — தொந்திரவுகள் —சமாளித்துத் தீரவேண்டியிருக்கிறது. "பந்தல் வேலை மாநாட்டுக்குள் முடிந்துவிடுமா?" எனக் கேட்போர் ஒரு பக்கம்—"முடியாது போலிருக்கிறதே!" என முணுமுணுப்போர் ஒரு பக்கம்—"அய்யோ, மழை வரும்போலிருக்கிறதே......பட்ட பாடெல்லாம் வீணாகிவிடும் போலிருக்கிறதே!" என்ற கவலை ஒரு பக்கம்"— இவ்வளவு செய்து, ஏன் சார் ஒரு நாடகம் நடத்தவில்லை?" என்று வினவுவோரும் —அதற்குப் பதில் சொல்ல முடியாமல் திணறுவோரும்— "போட்டிருக்கிற கழகத்தோழர்கள் எல்லாம் வந்து விடுவார்கள் அல்லவா?" என்று ஐயம் எழுப்புவோரும் — அவர்கள் அச்சம் தவிர்ப்போரும்—இப்படி மாநாட்டில் பலவகைக் காட்சிகள்; மாநாடு துவங்குகிற வரையில்!

இவ்வளவு பெரிய பந்தல் போட என்னிடம் மரங்களிகள், கீற்று, மூங்கில் இல்லையென்று பந்தல்காரர் கைவிரித்து விடுகிறார்; மாநாட்டுக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு! அன்றுதான் சகோதரர் அரங்கண்ணல் அவர்களும், அன்புத் தோழர் செழியன் அவர்களும், மதுரை வீரராம் எஸ். முத்து அவர்களும் மாநாட்டு வேலைகளில் முன்கூட்டியே கலந்து கொள்ளும் ஆர்வத்துடன் ஆரூர் வந்தடைந்து எங்களுக்கு மேலும் உற்சாக மளித்தனர். மழை பொழிகிறது—பந்தல் முக்கால் பகுதியே முடிந்திருக்கிறது— மீதியை முடிக்க கீற்று, மரம் கிடைக்கவில்லை. பந்தல் முழுதும் சேறு! உளை! நிற்கவும் இடமில்லை! ஓடுகிறோம் மூலைக்கு ஒருவராக! ஆளுக்குக் கொஞ்சம் கீற்று — மூங்கில் — கொண்டு வருகிறோம். ஆற்று மணல் ஏற்றிக் கொண்டு வண்டிகள் பறக்கின்றன. பந்தல் முழுதும் மணல் பரப்பப்படுகிறது. நூற்றுக் கணக்கான வண்டிகள் ஆற்று மணல்! மழையோடு மழையாக வேலை — அதோடு பந்தல் அலங்காரங்கள் வேறு!

இயற்கையை எதிர்த்து நடைபெற்ற பணியில் இறுதி வெற்றி நமது தோழர்களுக்கேதான். இனி என்ன மழை பொழிந்தாலும் கவலையில்லை — நடப்பது நடக்கட்டும் என நகை முழக்கி நடை பயிலுகின்றனர் தோழர்கள்.

அதை இப்போது என் மனக் கண் முன்னே காணுகிறேன். உணர்ச்சி கொள்ளுகிறேன். மாநாட்டுப் பந்தலில்

தற்காலிகமாக அமைக்கப்பட்டிருந்த தொலைபேசி மணி "டிரிங், டிரிங்" என அடிக்கும். யார் என்று கேட்டால், "நான் திருச்சியிலே யிருந்து பேசுகிறேன்—சென்னையிலிருந்து பேசுகிறேன்—குடந்தையிலேயிருந்து பேசுகிறேன் — இங்கு மழை தாங்கவில்லையே — திருவாரூரில் எப்படி? மாநாடு நடக்குமா?"

—இதுபோலக் கேள்விகள் வேறு நம்மை அயர வைக்கும், மழைக்குப் பயந்து மக்கள் வராமல் இருந்து விடுவார்களோ என்று!

ஒரேயடியாக அனைவரையும் மிரட்டிக் கொண்டிருந்த மழை, மாநாட்டுக்கு எதிர்ப்பு காட்டுவதுபோல் நடந்து கொண்ட மழை, கடைசியாக மாநாட்டு நிகழ்ச்சிகளுக்கு எந்த அளவு ஒத்துழைத்தது என்பதை நினைக்கவே நெஞ்சு இனிக்கிறது.

மாநாட்டுக்கு மக்கள் எதிர்பார்த்த எல்லோரும் வந்திருந்தார்கள். மழை மட்டும் வரவில்லை; வராதது மட்டுமல்ல; கோடையின் கொடுமை தெரியாமல் குற்றாலத்தைப் போல் ஒருநாள் முழுவதும் திருவாரூரை மாற்றி வைத்திருந்தது இயற்கை! "மாமழை போற்றுதும்—மாமழை போற்றுதும்!" என்ற வாழ்த்து முழக்கத்தை மக்கள் இயற்கையின் செவிகளுக்கு எட்டச் செய்தனர்.

வான்மழை வராவிடில் என்ன —இதோ சொல் மழை பொழிகிறோம் எனக் கழகத்து முன்னணி வீரர்கள் தனித் தனித் தலைப்புகளில் ஆற்றிய கருத்துரைகள் அத்தனையும் செங்கரும்பு — தேன் துளிகள்! மாணவர் படையின் முரசொலியாய்—மாணிக்கக் குன்றாய்—மறத் தமிழர் சேனைக்குத் தளபதியாய் விளங்குகின்ற மதியழகன் தலைமையுரை விடுதலை வீரருக்கு ஒரு படைக்கலன் என்பேன்!

அண்ணாமலை தந்த ஆற்றல் நிறை தோழர் — அன்புடைய நண்பர் — பண்புடைய காளை சண்முகத்தின் துவக்க உரை— தூய நம் கொள்கைக்குத் துணை நிற்கும் தீபஜோதி என்பேன்!

நாவலர் பேசினால், நாவெல்லாம்—கேட்போர் காதெல்லாம் —நாடெல்லாம் தமிழ் மணக்கும்—அந்த மணத்தை ஆரூரில் பெற்றவர்கள் ஆற்றல் பெற்றார் — ஆண்மை பெற்றார் — அடிமை நிலை தகர்த்தெறிய ஊக்கம் பெற்றார்!

வடநாட்டில் கழக நிலையை வளையாது, துவளாது, வடித்தெடுத்து வைத்திட்டார், வஞ்சகரின் இடுப்பொடிக்கும் வலிவு மிக்க நாவன்மை படைத்திட்ட நம் தோழர் சம்பத்!

அழகு தமிழ் — அன்பு சுரக்கின்ற நெஞ்சு — ஆற்றல் விளைகின்ற பார்வை — அரசியல் மேதா விலாசம் காட்டுகின்ற செயல்—அத்தனைக்கும் இருப்பிடமாய்த் திகழுகின்ற நம் அண்ணாவின் பேச்சினிலே தஞ்சைக்கு வாழ்த்து கொன்னார். "பார் தஞ்சையை—என இங்கிருக்கும் ஏராளமான மக்களையும், இருபதினாயிரம் ரூபாய் மிச்சமென்ற மகிழ்ச்சியையும் காட்டினால் போதாது' அடுத்த தடவை எத்தனை பேரை சட்டசபைக்கு அனுப்பிடப் போகிறோம் என்ற கேள்வியை ஒவ்வொருவரும் கேட்டுக் கொள்ள வேண்டும்!" எனும் கருத்தை வலியுறுத்தி ஜனநாயக முறைக்கு விளக்கம் தந்தார். நமைத் திட்டுவதையே வேலையெனக் கொண்டுள்ள எதிர்க்கட்சியினருக்குப் படுகின்ற விதத்தினிலே அறிவுரை புகன்றார். கண்மூடிக் காங்கிரசை அணைத்திருக்கும் திராவிடர் கழகத்தினரின் கண் திறக்க வழியொன்றும் சொன்னார். தஞ்சையின் கண் திறந்தது. மூடிக் கிடந்த செவிகளில் ஒலி புகத் துவங்கி விட்டது. கிழிந்து போன முரசு மீண்டும் சீர்பட்டு முழங்குகிறது.

"கூனன் நிமிர்ந்து விடுவான்" என அண்ணா அடிக்கடி கூறுவாரே; அதுபோல இதோ—

கூனன் நிமிர்ந்து விட்டான்!

தஞ்சை எழுந்து விட்டது!

இனி, அதன் தலையைத் தாழ்த்த யாராலும் முடியாது!

இனி — தஞ்சை தி. மு. க. பாசறை!

அந்த உணர்வோடு, அதோ— ஆயிரமாயிரம் இளைஞர்கள்— "திராவிடம் வெல்க!" எனச் சிந்து பாடிச் செயல் புரியப் புறப்பட்டு விட்டார்கள்!

அதற்கு ஆரூர் மாநாடு வழி காட்டுகிறது—அதை நடத்திய அனைவரும் பெருமைப்பட்டுக் கொள்கிறார்கள். ஃ



பனையோலை உள் முகப் பின் முன்னே—பறக்கின்ற இரு வண்ணக் கொடியும், குழுமி நிற்கும் மக்கள் வெள்ளமும்!

செல்லுவோம்! வெல்லுவோம்!

என். எஸ். இளங்கோ (மாநாட்டு வரவேற்புக்குழுத் தலைவர்)

"சிங்களத்து வீரர்களே! கயவாகுவின் ஆட்சியிலே உங்கள் வாய் வீரம் பேசியிருக்கும். உங்கள் கரங்களிலே வாளும் வேலும் மின்னியிருக்கும். வாள் முனையிலே பட்டிருநத இரத்தத்தை கதவோரத்திலே கட்டியிருக்கும் புலிக் குட்டியின் மேலே துடைத்து கயவாகு மன்னனின் புகழ் பாடியிருப்பீர். தினவெடுத்த உங்கள் கரங்களுக்கு வேலை தர காட்டானைகளைத்தாக்கி அவைகள் வேதனையால் பிளிறுவதை வேடிக்கை பார்த்து நின்றிருப்பீர். ஈடு இணை ஏது இந்த சிங்களத்து வீரர்களுக்கு என சிந்து பாடியிருப்பீர்.

"சிங்களத்து வீதிகளிலே நீங்கள் வீரர்கள்; சிங்காரத் தமிழகத்திலே எங்கள் குற்றேவல் புரிய வேண்டிய — பணியாட்கள்! மத யானையை ஒத்த உங்கள் உடலமைப்பு நல்ல காரியத்துக்குப் பயன்படட்டும்!

"தமிழகத்து வீரர்களே! அவர்களைப் பிணைத்திருக்கிறகயிறுகளை அவிழ்த்து விடுங்கள். காவிரித் தாய் அழைக்கிருள்; வாள் பிடித்த உங்கள் கரங்கள் கூடை மண் வெட்டி ஏந்தட்டும்!

"காவிரிக்கு இரு மருங்கிலும் பெரிய கரை எழும்பட்டும்! தினவெடுத்த உங்கள் தோள்களுக்கு நல்ல வேலை தருகிருர்கள் தமிழகத்துப் பெருமக்கள்!

"வீரத்திற்கு தலை சாய்க்க மாட்டார்கள் தமிழகத்துப்பெருமக்கள். அறிவுக்கும், நல்ல சேவைக்கும் அவர்கள் பாராட்டு என்றுமிருக்கும். பனிரெண்டாயிரம் சிங்கள வீரர்களே! நீங்கள் எந்த இடத்தில் மரக்கலங்களிலிருந்து இறக்கப்பட்டீர்களோ, அங்கே ஒரு புதிய பட்டினத்தை உருவாக்க வேண்டும். அந்த பெரும் பட்டினம் வரையிலும் காவிரித் தாய் ஓடிவந்து கடலிலே கலக்க வேண்டும். 'காவிரிக்குக் கரை கட்டினுன், காவிரிப் பூம்பட்டினத்தை உருவாக்கினுன் கரிகால் பெருவளத்தான்' என்ற பெரும் புகழினை நான் பெறுதல் வேண்டும்..."

* * *

"கண்ணே! பலகாலம் பிரிந்திருந்தேன் என்றுதானே உன் ஒளி முகத்தை சுளித்துக் கொண்டிருக்கிருய். கண்ணகி வழி வந்தவளே! கடாரம் வரை தன் கணவன் சென்றிருந்தான்; கடாரத்தை முற்றுகை யிட்டு சாவகம் வரையிலும் நம் மன்னர் பரப்பிய புகழுக்கு உன் கணவன் தன் வீரத்தைக்காட்டினுன் என்பது உனக்கல்லவா பெருமை! சிலகாலம் பிரிந்திருந்தால் என்ன? கேட்பாயா கதையை! கடாரத்துப் போர்க்களத்திலே ஒருவன் ஓடி வந்தான்; "தமிழகத்து மண்ணிலே பொன் விளைவதுபோல பெரு வீரம் விளைகிறதாமே; அங்கே வந்தால் வீரம் கொஞ்சம் விலைக்குத் தருவீர்களா?" என்ருன் அவன். 'தருவோம்' என்று நம் மன்னர் எனக்குத் தந்த உடை வாளை உறையிலிருந்து எடுத்தேன். நீ 'களுக்'கென்று சிரித்து வாய் மூடி விட்டாயே; அவன் என் முன் தோன்றி எங்கேயோ ஓடி மறைந்தான்.

"பொற்கொடியே! என் தோளிலே பட்டிருக்கிற வடுவினைத் தடவி பெருமூச்சு விடுகிருயே; ஏன்? உன் கணவன் இந்த விழுப்புண்ணை ஏந்தி உடலழகைக் கெடுத்துக் கொண்டு விட்டானே என்ரு? கடாரத்துக் களத்திலே நான் பெற்ற இந்த வடுவினை—பெரும் புண்ணை ஆயிரம் வீரர்களுக்கு மாமன்னர் சுட்டிக் காட்டினுர். கடாரத்திலே தமிழகத்தின் புகழை நிலைநாட்டியவன் — அவன்

யானை வருகிறது
முன்னே—விடுதலைச்
சேனை வருகிறது
பின்னே!

வாழ்க என உன் கணவரை மாமன்னர் வாழ்த்தினார். கடாரம் கொண்டான என்ற ஊரமைத்து அதிலே வீரர்களுக்கு விருதுகள் வழங்கினார். என்னை அழைத்தார். 'வீரனே! நின் புகழ் வாழ்க! கடாரத்திலே நீ பெற்ற வடு—தமிழகத்துக்கு நீ பெற்றுத்தந்த அணிகலன்! உன் வீரம் வெல்க! உனக்கு ஒரு அணிகலன் வழங்குவேன்; அது ஒரு பொற் சரடு!' என மாமன்னர் தந்தார். எங்கே உன் கழுத்தைக் காட்டு.

''கழுத்தினையும் காட்டி புன் சிரிப்பினையும் காட்டுகிறாயா? கட ரம் கொண்டான் நகரத்து உப்பரிகையிலே நின்று கடாரத்தை வென்று சாவகம்வரை புகழ் பரப்பிய மன்னர் இந்த பொற்சரடை தருகிறபோதே உன் புன் சிரிப்பு இப்படித்தான் இருக்கும் என்று எண்ணினேன்—அதனை நான் பெற்றேன். எங்கே, பால் நிலவைப் போன்ற முகத்தை இங்கே திருப்பு! அப்பப்பா .....எவ்வளவு நாளாயிற்று இந்த வெண்ணிலவைக் கை தொட்டு!

* * *

''மகனே, கதவைத் திற! வெளியிலே நிற்கிற குதிரையினை லாயத்திலே கொண்டு போய்க் கட்டு. இந்தக் கிழவனுக்கு வயது எண்பது ஆகிவிட்டது என்பது இந்தக் குதிரைக்கும் தெரிந்துவிட்டது போலும். அவசரமாகப் போய் பின்னர் அரண்மனைக்குத் திரும்பவேண்டும் என்பது இந்தக் குதிரைக்குத் தெரியவில்லையே!

''உன் தாய் இருக்கிறாளா, உள்ளே பார். கேழ்வரகு அடை சுட்டு இருந்தால் அதை இந்தக் கிழவனுக்குக் கொண்டு வா! கொள்ளு இருந்தால் குதிரைக்குக் கொஞ்சம் வை!

''என்ன அவசரம் என்று கேட்கிறாய்? மகனே, நீ போரிட்டுவிட்டுத் திரும்பினாயே கலிங்கம்; அந்தக் கலிங்கப் போரைப் பற்றி அழகான கவிதைகள் பல அரண்மனைக் கவிஞர் செயங்கொண்டார் பாடிக் காட்டுகிறார், கலிங்கத்துப் பரணியில்! தமிழர்கள் வட புலம் சென்று போரிட்ட வரலாற்றை தேனூறும் பாடலாகப் பாடிக் கொண்டிருக்கிறார். கலிங்கத்து மண்ணை, மன்னர் குலோத்துங்கர் தன் சோழமண்டல எல்லையிலே சேர்த்திருக்கிறார்—என்கிற வீர வரலாற்றைப் பாடிக் காட்டுகிறார். அப்பாடல்கள்—தமிழ் மக்களின் வீரம் குன்றி விடவில்லை என எடுத்துக்காட்டுகிறது. நீ தமிழகத்துக்குச் செய்ய வேண்டியதைச் செய்து விட்டாய்—நான் சக்கர கோட்டத்திலே போராடியதை நினைவு படுத்திக் கொள்கிறேன். என் தந்தை கங்கைக் கரைவரை சென்று போராடினார். என் தந்தைக்குத் தந்தை கடாரத்தில் தன் முத்திரையைப் பதித்துக் கொண்டார். தமிழ்ப் பெரு மக்கள் யாருக்கும் தலை வணங்கியதில்லை — அது என்னுடைய மகன் காலத்திலும் பொய்த்து விடவில்லை.

''அம்மாவை கண்ணயரச் சொல்! மாடத்திலே இருக்கிற அகல் விளக்கை உன் அறையிலே கொண்டுபோய் வைத்துக்கொள. மருமகள் மேல் மாடத்திலே இருக்கிறாளா? மகனே போ! அவள் தனியாக இருப்பாள். பால் போல நிலவு காய்கிறது...''

* * 8

இப்படி ஒருகாலத்தில் தஞ்சைத் தரணியின் திக்கில் எல்லாம் ஒலித்துக்கொண்டிருந்திருக்க வேண்டும் என்பதை அன்று திருவாரூர் மெய்பித்துக் காண்பித்துவிட்டது 1958, மே மாதம் 10, 11 ஆகிய நாட்களில்! தஞ்சைத் தரணியின் புகழ் மிக்க வீரர்கள்— தி. மு. க. தீரர்கள் அணி திரண்டனர். 'என் மூதாதையர் வாழ்ந்தனர் — அவர்கள் புகழ் பல நாடுகளுக்கு அப்பாலும் பரவி நின்றது. நான் மீண்டும் வாழவேண்டும்' என முழங்கி நின்றனர், தஞ்சைத் தரணியினர். 'தமிழர்களுக்கு—திராவிடப் பெருங்குடியினர்க்கு வாழ்வளிக்க வந்த பொம்மான், காஞ்சி தந்த கருவூலம் வாழ்க' என ஒலி முழக்கினர் 'நாவலரே! நெடுஞ்செழியனாரே! மீண்டும் ஒரு வழி காட்டுங்கள்; இதோ அயர்ந்த நிற்கிற கோபுரங்கள் எங்கள் மூதாதையருடையவை—அதோ, அந்தக் கோட்டையும். அக்கோட்டையினுள்ளே நிற்கிற கூட கோபுரஙகளும் என்னுடைய முன்னோர்கள் வாழ்ந்த இடங்கள். இந்த அகலமான வீதிகளில் எங்களுச்கு ஈடு இல்லை — எடுப்பு இல்லை என எம் முன்னோர் பவனி வந்த ராஜவீதிகள்! அவைகளை எங்களுக்கு ஆக்குங்கள்!' என்று கேட்டனர். நடத்திய ஊர்வலமும், அதிலே வந்த யானையும், குதிரைப் படையும் கடந்த காலத்தைச் சோழர்களின் பொற்காலத்தை நினைவூட்டியது. நாட்டை நமதாக்குகிற பெரும்பணியில் தஞ்சைத் தரணியும் இன்று தன் பங்கினைச் செய்யத் தயாராகிவிட்

டது என்பதனை அந்த ஊர்வலம் எடுத்துக் காட்டிற்று.

“நாங்கள் எதிர்பார்க்கவில்லை. மாநாட்டின் ஊர்வலம் மிகச் சிறப்பு!”

“எவ்வளவு ஆயிரம் தோரணங்கள்; எவ்வளவு அழகான தட்டிகள்!” என்றனர்.

“மிகப் பெரிய பந்தல்; அதன் உள்ளே உள்ள அலங்காரச் சிறப்பினை இதுவரை நாங்கள் கண்டதில்லை!” — இப்படிச் சிலர்.

“மேடை மிக விசாலம்—உபசரிப்பு அதைவிடப் பிரமாதம்!” —இப்படிச் சிலர்.

“பொதுவாக மாநாடு சிறப்பாக இருந்தது; குறை கண்டு பிடிக்க எங்களாலே முடியவில்லை!” என்று முத்தாய்ப்பு வைத்தவர்கள் பலர். இப்படி சீரும் சிறப்புடனும் மாநாடு நடைபெற்று முடிந்தது. ஆனால், அதற்கு அடித்தளத்தில் பணியாற்றியவர்கள் — இரவு பகல் உழைத்தவர்கள்—கழகப் பணியாளர்கள் — என் கண் முன்னே நிற்கிறார்கள். அவர்கள் ஓடியாடி உழைத்த பண்பு என்ன; அவர்கள் காட்டிய அன்பு என்ன; அவர்கள் மாநாட்டினைச் சிறப்பாக்கப் பல வழிகளிலே எடுத்துக் கொண்ட தொல்லைகள் எவ்வளவு?

அறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன “எதையும் தாங்கும் இதயம் வேண்டும்” என்ற மூதுரையை உள்ளத்திலே தாங்கிப் பணியாற்றினார்கள்.

நான் அவர்களை யெல்லாம் கேட்டுக் கொள்வேன்; நாம் ஏற்றுக் கொண்ட பணியைச் சிறப்பாக்கிக் காட்டினோம். மேலும் நம் பணியைச் சிறப்பாக்கிக் கொள்ள வேண்டும். டில்லி ஏகாதிபத்தியத்திடமிருந்து இந்த நாட்டை மீட்பது சுலபமான பணியல்ல; ஆனால், நம்முடைய தலைவர்கள் தீர யோசித்து எடுக்கிற முடிவுகளுக்கெல்லாம், நாம் பக்க பலமாக நிற்போமேயானால், அணி திரண்டு இதோ தஞ்சைத் தரணி உள்ளது எனப் பரணி பாடினால் நம் வேலை சுலபத்தில் முடியும்.

எனவே பட்டி தொட்டிகளில் எல்லாம் நம்முடைய மூதாதையர் பண் பாடிய இடங்களில் எல்லாம் கிளைகள் அமைக்க முயலுவோம்! அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் திரண்டு நின்று ‘திராவிட நாடு திராவிடர்க்கு’ ஆக்கிடும் பணியிலே நாம் ஈடுபடுவோம்!

அந்த உறுதியை — திடமான நம்பிக்கையை — நாம் திருவாரூரில் நடைபெற்ற மாநாட்டில் பெற்றுவிட்டோம்!

கரிகால் பெருவளத்தான் காலத்திலே பெறாத பெருமையை—இராஜ ராஜன் காலத்திலே பெறாத புகழை—குலோத்துங்கன் காலத்திலே அடையாத நல்ல மதிப்பை-இன்றைய தினத்திலே அறிஞர் அண்ணாவின் தலைமையிலே நாம் பெற்றிருக்கிறோம். அவர் வழி செல்லுவோம்; நாம் வெல்லுவோம்!

மாநாட்டுத் தலைவர், திறப்பாளர், பொதுச் செயலாளர், வ. கு. தலைவர் ஆகியோர் அமர்ந்திருக்கும் “சாரட்”டின் சாரதியாய் மாநாட்டுப் பொருளாளர்!



எல்லோருமே செயலாளரானோம்!

மன்னை ப. நாராயணசாமி

(மாநாட்டுச் செயலாளர்)

தஞ்சை மாவட்டம் பரம்பரை-பரம்பரையாகவே பல சிறப்புகளையும் பெருமைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. எனினும் கடந்த தேர்தலிலே அது தன்னைத் தாழ்வு படுத்திக்கொண்டது. பிற மாவட்டங்களின் நமது தோழர்களை நான் காணும் போதெல்லாம் — தேர்தல் நிலையைக் காட்டி கேலி பேசினர். கவலை கொண்ட என் உள்ளம் எப்படியும் நம் மாவட்டம் இழந்த சிறப்பை எய்திடாதோ என்று ஏங்கி வாடியது. தேர்தல் முடிந்த ஒரு ஆண்டுக்குள் இயக்க வளர்ச்சி மாவட்டத்தில் இல்லாத இடம் இல்லை. பிற மாவட்டங்களைவிட கிளைக் கழகங்கள் அதிக அளவு பலம் பெற்று விட்டன!

நமது இயக்கம் தோன்றிய அன்றை அதிக உறுப்பினர்களைக் காட்டியது தஞ்சை மாவட்டம்தான். அறிஞர் அண்ணா அவர்கள் சிறையில் என்றால், ஐநூறுக்கு மேற்பட்ட தோழர்கள் சிறை சென்று, மற்ற மாவட்டங்களைவிட தியாகத்தில் "உயர்ந்த நிலை"யைக் காண்பித்தனர். நமது இயக்கம் வளர்ச்சி பெற—பல துறைகளிலும் தற்பெருமை கொள்ளாது பாடுபட்டது, தஞ்சை மாவட்டம்தான். இயக்கத்தின் மூச்சுகளாம் பொதுச் செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களையும், பேராசிரியர் க. அன்பழகன் அவர்களையும், மு. கருணாநிதி அவர்களையும் தந்திருக்கிறது.

இப்போது வளம் பெற்றது மட்டுமல்ல; வெற்றியை நெருங்கிக் கொண்டிருக்கும் மாவட்டம் என்பதையும் காட்டியது, மே, 10-11 தினங்களில்!

மாநாடு நடத்த வேண்டும்; அதுவும் சிறப்புற நடத்த வேண்டும்; கடந்த இரண்டு மாநாட்டிலும் தொகையைப் பற்றி ஏமாற்றம் கொண்டோமே; இப்போது எப்படிக் காரியமாற்றுவது — என்று யோசித்தோம் நாங்கள்.

நினைத்து நினைத்துப் பார்த்தோம்—கூடிக் கூடிப் பேசினோம். பலர் தாங்கள் நடத்துவதாக முன் வந்தார்கள். 'இயலுமா' என்ற சந்தேகத்தை மறந்து விடச் செய்த அந்த ஆர்வம் எனக்கு மட்டும் இல்லாதிருக்குமா? எனது ஊரில் நடத்த வேண்டும் — என்று எனக்கும் எனது ஊர் தோழர்களுக்கும்கூட ஆசை உண்டு.

மாநாட்டைப் பற்றி முடிவு செய்ய திருமறைக்காட்டிலே கூடினோம். பல தோழர்களுடன் இது பற்றிக் கலந்து

பேசினோம். ஏதேதோ முடிவு செய்துகொண்டிருந்தோம். எல்லா மனக்கோட்டைக்கும் மாற்றம் தரும் வகையிலே நான் பொறுப்பினை எடுத்துக்கொள்கிறேன் என்று முன் வந்தார் மு. கருணாநிதி அவர்கள். சரியென்றோம். சரி என்றதில் என்ன தவறு? நிகரற்ற தாய் — சிறப்புடையதாய்— அழகுடையதாய் — அந்தஸ்து உடையதாய் — கலையில் உயர்வு பெற்றதாய்— இப்படி ஒரு மாநாடு நடந்து முடிந்த பிறகு, அன்று செய்த முடிவு "சரியா; தவறா?" என்ற வினாவுக்கு வேலையே இல்லை.

பொருளாதாரத்தில்மட்டும் இம்மாநாட்டைப் பொறுத்தவரை, 'பெரியாரின் பரம்பரை' என்பதைக் காட்டிவிட்டார், பொருளாளர் மு. க. அவர்கள். எப்படியோ 20.000 ரூபாய் உருவாக்கப்பட்டுவிட்டது.

தஞ்சை மாவட்டத்தின் எதிர்கால வளர்ச்சியில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பங்கு எத்தகையது என்பதை எடுத்துக்காட்டியது மாநாட்டு தினங்கள்! திருவாரூர் இயக்கத் தோழர்களும், மற்ற கிளைகளின் தோழர்களும் இருநாள் மாநாடும் வெற்றி பெற வேண்டும் என்று பொறுப்பும் பேருதவியும் செய்தனர். அவர்களைப் பாராட்டுகிறேன். யார் செயலாளர் என்றில்லாமல், எல்லோருமே செயலாளராக மாறி இடையறாது பணியாற்றி மாநாடு சிறப்புற பாடுபட்ட தொண்டுள்ளத்திற்கு—இயக்க ஆர்வத்திற்கு என் நன்றி! ஃ

பணி புரிந்த படை!

அ. நடராசன் (மாநாட்டுத் தொண்டர் படைத் தலைவர்)

திருவாரூர் மாநாடு, வாழ்விழந்தவர்களின் வாழ்வுக்குப் போராடக்கூடிய நாள்! சோழர்கள் வசித்த மாளிகையும், அவர் தம் சேனையும் யானையும் நின்ற இடங்களும், அரசவையும், அழுது புலம்பி நின்ற மக்களுடைய குரலைக் கேட்டிட அரசன் நின்ற இடமும்—அத்தனையும் ஆரூரிலே காணப்பட்டன, வேல் இழந்த வீரனைப் போல்—வேலியிழந்த சோலையைப்போல்! "அந்தோ! பொலிவிழந்து கிடப்பதைப் பாரடா மகனே, பார்! சோழன் தலைநகரத்து சுந்தர மாளிகை சோபிதமிழந்துக் கிடப்பதைப் பார்! ஆண்ட மரபே! வாழ்ந்த நாளையும் வீழ்ந்துபட்ட இக்காலத்தையும் ஒப்பிட்டுப் பார்! உப்பிட்டவரை உயிருள்ளளவும் மறவாதே என்ற மணிமொழி உதிர்த்த மரபே! மீண்டும் ஆண்ட மண்ணை மீட்டிடு! அதோ, முன்னேற்றக் கழகம் எடுக்கும் முடிவில் அயலார் ஆட்சி விலகியே தீரும்!"—என்ற உற்சாக வெள்ளம் கரை புரண்ட நாள்! தீரர்கள் திரண்ட நாள்!

மாநாட்டிற்கு இரு தினங்களுக்கு முன்பு மே 8-ம் தினத்தன்று பெய்த மழையால் மாநாடு நடைபெற்ற தைக்கால் திடல் பெருங் குளமாகியது. அதைக் கண்ட அருமைத் தொண்டர்கள் கொஞ்சமும் அயரவேண்டுமே; நம் கண்ணீரைப் போக்க வேண்டிய மாநாட்டை நடக்க விடாதபடி வானத்து நீர் கெடுத்து விடுமோ எனப் பயந்தார்கள்! அப்பப்பா! எவ்வளவு நீரை இறைத்தார்கள்—எவ்வளவு வேதனைப்பட்டார்கள்!

9—5—58 அன்று கொடி மரத்தை நிமிர்த்திட முப்பதுக்கு மேற்பட்ட தோழர்கள் முயன்றார்கள். 'வா பகையே, வா! வடவர் பகையே, வா!" என்று கொள்கை சொல்லும் நம்கொடி பறந்தாடியது!

வரண்ட நாவுக்கு நீர் தந்திட உதய சூரியன் படிப்பகத்துத் தொண்டர்கள் உழைத்தார்கள்! திருச்சி தோழர் ஷரீப் தலைமையில் இருபத்தைந்து பேர்கள் இரு நாட்களும் ஆடி ஓடி உழைத்ததை மறக்க முடியாது!

அன்னம் பாராமல்—அயர்வு பாராமல் — துயில் கொள்ளாமல்தொண்டாற்றிய கொரடாச்சேரி தொண்டர்களையும், மற்றவர்களையும் சொல்லின் செல்வர் சம்பத் அவர்கள் மிகவும் பாராட்டினார்கள்! திரு அரங்கண்ணல் அவர்களும் அத்தொண்டர்களை எல்லாம் "அடலேறுகள்" என்றல்லவா என்னிடம் புகழ்ந்தார்கள்!

தொண்டர் படைத் தலைவர்கள் என்கிற முறையில் நானும், நண்பர் அடைக்கலமும் அவர்களுடைய உழைப்பை மதித்து, மரியாதை மலர்களைத் தூவுகிறோம்.

தேரோடிய வீதிகளில் தி. மு. க. ரதம் ஓடிட விழைந்தார் மாநாட்டுப் பொருளாளர் மு. கருணாநிதி அவர்கள். முதலில்

என்னிடம்தான் அந்த எண்ணத்தை வெளிப்படுத்தினார். நானும், மற்ற அயர்வைக் கண்டு அஞ்சாத ஆர்வமுள்ள தோழர்களும் முயன்றோம் — தலைவர்களின் படம் பதித்த தட்டிகள், கொடிகள், கிளைக் கழக ரதங்கள் அநேகம் ஊர்வலத்தின் சிறப்பை உயர்த்தத் தயாராயின!

"திராவிட நாடு திராவிடருக்கே!" என்ற ஒலி வீட்டுக்குள்ளிருந்த வேல் விழி மகளிரை யெல்லாம்கூட கதவோரம் வந்து காது கொடுத்துக் கேட்டிடச் செய்தது. அந்த ஒலியின் பொருளையும் உணர்ந்தார்கள்!

இந்த நாட்டை எந்த நாட்டான் ஆள்வது என்று கேட்பதுபோல் விழித்தெழுந்த நாட்டாரின் கூட்டமே கூட்டம்! இந்த மகத்தான ஜன சக்தி சர்வாதிகாரத்தைத் தூளாக்கும் சம்மட்டி! அந்த மகோன்னத மக்கள் சக்தி முன்னேற்றக் கழகத்திடம்தான் இருக்கிறது என்பதை அறிவித்துவிட்டது ஆரூர் மாநாடு!

திருவாரூர் மாநாட்டு தொண்டர் படை திராவிடத்தை விடுவிக்கும் போராட்டத்தில் முதல் வரிசையில் நிற்கும் தகுதியைத் தட்டிப் பறித்திடத்தான் போகிறது என்ற நம்பிக்கை நமக்கெல்லாம் இருக்கிறது!

பணிக்காகப் புறப்பட்ட நற்படையே!...உன்னுடைய தூய்மையான தொண்டுக்கு வாழ்த்துரை கூறுகிறது திருவாரூர் மாநாடு! தொண்டர் படையே! என் கண்ணை ஒத்த படையே! உன்னை நானும் வாழ்த்துகிறேன், உளமார—வாய் குளிர! வரம்புக்குட்பட்டு, படைத் தலைவன் என்ற அளவில் மற்ற சிறப்புக்குரியவர்களை யெல்லாம் விட்டு விட்டேன்—மற்றவர்கள் எழுதுவார்கள்! ஃ

ஆரூர் காட்டிய அற்புதம்!

து. அடைக்கலம் (மாநாட்டுத் தொண்டர்படைத் தலைவர்)

ஆரூர் மாநாடுபற்றிய அரிய நிகழ்ச்சிகள் என்றென்றும் இதயம் விட்டகலாதிருக்க வேண்டுமென "முரசொலி" இதழை ஆரூர் மாநாட்டுச் சிறப்பு மலராக வெளியிட எண்ணி, நான் ஒரு தொண்டர் படைத் தலைவன் என்ற முறையில், என்னுடைய கருத்துக்களை எழுதும்படி ஆணையிட்டார்கள். கட்டுரை வரைவதென்றால் கற்பனையும் கலக்க வேண்டுமல்லவா? அப்பொழுதுதானே கட்டுரை அழகுபெறும்! நான் அந்தத் துறையில் ஆற்றலும் அனுபவமும் நிறைந்தவன் அல்லவே—என ஐயுற்றேன்.

கற்பனை ஏன்? கலை நுணுக்கம் ஏன்? கண்ணால் கண்ட காட்சிகளைக் கற்பனைத் துணைகொண்டு எழுத வேண்டியதில்லையென எண்ணி எனது இதயப் பூரிப்புடன் இதை எழுதுகிறேன். ஆம்; அந்த மே 10-ம் நாளை நினைத்தாலே மெய் மறக்கச் செய்கிறது. ஏளனக் குரல் எழுப்பிக்கொண்டு வந்த எதிரிகள் ஏங்கி நின்றனர். மாற்றார்கள் மமதை ஒடுங்கினர். ஆளுபவர்கள் அகந்தை அழிந்தனர். அத்தகைய சீரையும் சிறப்பையும் — சீரோடு திடத்தையும், சிறப்போடு உரத்தையும் அந்த மே பத்தாம் நாள் தந்துவிட்டது!

பாசறைப் படையின் பரந்த அணிவகுப்பைப் பார்ப்பதற்குக் கண்போதுமா? நம் பரம்பரைத் தமிழ் வேந்தரின் படைப் பலமும் பராக்கிரமமும் நம் கண் முன்னே எடுத்துக் காட்டினார்கள் வீரர்கள்!

கர்வம் கொண்ட கனக விஜயர்களின் தலைகளிலே — செம்பொன் மணிமுடியேந்திய சிரங்களிலே — கருங் கல்லை ஏற்றியதுபோல் காட்சி செய்து, கடைசிவரையிலும் கனகவிஜயராகவே இருவரை ஊர்வலம் நடத்தியதைக் கண்டபோது, "போகிறார்கள் அப்பாவிகள்! அவர்களை மன்னித்து இந்தக் கல்லை இறக்கிவிடுங்கள், மாமன்னர்களே!" என்று குதிரைமேல் வீரப் பார்வை மிளிர வந்த சேரன் செங்குட்டுவனைப் பணிவோடு கேட்போமா என்று பலர் எண்ணியே இருப்பர்.

அதுமட்டுமா? முடியுடை மூவேந்தர்கள் கொடியுடன் வாழ்ந்த நாடு இந்நாடு என்பதை விளக்க மூவேந்தர் வேடந் தாங்கி யாவரும் வியக்க இரதத்திலே பவனி வந்த காட்சியை யார்தான் மறக்க முடியும்?

'தீரமிகு படை வீரர்கள் திரண்டுவிட்டனர்; இனி திராவிடத்தை மீட்டே தீருவர்; அவ நம்பிக்கைக் கொண்டுள்ள அப்பாவிகளே! அதோ, பாருங்கள் படைவரிசையை!' என்று பறைசாற்றிக் கூறுவது போல் யானை தன் துதிக்கையைத் தூக்கிக் காட்டிக் கம்பீரமாகக் கர்ஜனை புரிந்து படை வரிசையின் முன் சென்றது. குதிரை வரிசைகள் கோலாகலமாக வந்தன. காலாட் படைகள் கழகக் கொடிகளைக் கையிலேந்தி ஆரூரே ஆச்சரியப்பட—

ஏன்; ஆளும் கட்சியினர் தமது ஆட்சியின் அந்திம காலத்தைக் காட்டுகிறதே இந்த ஆரூர் மாநாடு என்று அதிர்ச்சியுற— தேரோடும் வீதியெல்லாம் தி. மு. க கொடிகள்! 'இதோ திராவிடம்' என திசை காட்ட வ. உ. சி. யின் கப்பல் நகர்ந்த காட்சி கருத்தை விட்டகலுமோ?

தெள்ளு தமிழ்த் தஞ்சையின் செம்மல்—இன்பத் திராவிடத்தின் எண்ணமே உருவாகக் கொண்டிருந்த ஏ. டி. பன்னீர்ச் செல்வம் அவர்களை, எட்டு திக்கிலும் திராவிடத்தின் எழுச்சி முரசைக் கொட்டுவேன் என்று ஏறிச்சென்ற ஆகாய விமானத்துடன் காட்சியாக்கிக் கருத்தில் பதியக் வைத்தார்கள் நம் கழகத்தின் காளையர்கள். இவைகளை மறைக்கவோ, மறுக்கவோ, மாற்றார்களால் இயலுமா? உண்மையிலேயே 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட கழக வீரர்கள் பவனி வந்ததைப் பார்த்து பத்தாம் பசலிகள்கூட புத்துணர்ச்சி பெற்றிருப்பர் என்றால் இதில் எத்தகைய ஐயமும் இல்லை!

வந்துவிட்டனர் மாநாட்டுப் பந்தலுக்கு! வாசலில் 'அருமைத் தம்பிகளே! அணி வகுத்து வாரீர்! திருவிடத்தை சிக்கிரமே காண்போம்; வாருங்கள்! வாருங்கள்!' என்று சிந்தை குளிர ஆசீர்வதித்து அழைத்தாற்போல் அமைக்கப்பட்டிருந்தது அறிஞர் அண்ணாவின் திரு உருவம் தாஜ்மகால் தோற்றமுடைய வாசலின் முகப்பினிலே.

உள்ளே சென்றனர். ஒரு கணம் திகைத்தனர்! ஏன்? அஞ்சா நெஞ்சன் அழகிரிசாமி, கலைஞரேறு என். எஸ். கே., பன்னீர்ச்செல்வம் ஆகியோரின் உருவங்களையும் கண்டனர். களிகொண்டனர். இதற்குமேல் 'தொண்டர் தம் பெருமையைச்

சொல்லவும் பெரிதே' என்ற ஔவைப் பாட்டியின் அருள் மொழிக் கிணங்க தொண்டர்கள் யாவரும் தத்தமக்கிட்ட பணியினைத் தளராது செய்து, அயராது உழைத்து, ஆர்வத்தோடு பணிபுரிந்து, அண்டை மாவட்டங்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கியமைக்கு எனது நன்றி.

மாநாட்டுப் பந்தலின் மகத்தான அமைப்புகள் திருச்சி மாநில மாநாட்டுப் பந்தலமைப்பைச் சிந்தைக்குக் கொண்டுவந்தது. விலங்கு முறித்தெழுந்த வீரனின் தோற்றம் நமது விடுதலை வேட்கைக்குத் தூபமிட்டாற்போல் தூண்டிற்று.

மாநாட்டுத் திறப்பாளரான ப. உ. சண்முகம் அவர்களின் மாண்பு மிக்க சொற்பொழிவும், மாநாட்டுத் தலைவர் மதியழகன் அவர்களின் சொற்பெருக்கும் நெஞ்சை விட்டு அகலாத வண்ணம் அமைந்து விட்டது. அடுத்த நாள் அறிஞர் அண்ணா அவர்களின் பேருரையின் விடுதலைக் குரலைக் கேட்டோம்; பொதுச் செயலாளரின் புத்துணர்ச்சி பெறும் பொன்னுரையினைக் கேட்டோம்; பூரிப்படைந்தோம்; புதுமுறுக்கு பெற்றோம்.

இந்த அதி அற்புத நிகழ்ச்சிகளுக்கு மூலகாரணமானவர் கலைஞர் மு. க. என்றால் மிகையாகாது!

தஞ்சை இதர மாவட்டங்களுக்குப் பஞ்சையல்ல என்பதை நிரூபித்துவிட்டார் அவர். மாவட்டச் செயலாளர் என். எஸ். இளங்கோ அவர்கள் இந்த வெற்றிக்கு இடையறாது உழைத்து உறுதுணை புரிந்தார். மன்னை ப. நாராயணசாமி நல்ல முறையில் பாடுபட்டார். கொரடாச்சேரி நடராசன் என்னோடு கூட்டாகப் பாடுபட்டார்.

நகர தி. மு. க. தோழர்கள் வெற்றி நமதே—என ஊக்கத்தோடு உழைத்து சிறப்படைந்தனர்; பக்கத்தூர் கிளைக் கழகத்தார் பாகுபாடின்றி சிட்டு போல் பணியாற்றினர்.

இத்தகைய நிகழ்ச்சிகளைக் கண்டு இதர மாவட்டக் கழகத் தோழர்களும் பூரிப்படைந்தார்கள்.

இவ்வாறு இருந்தும் செந்தமிழ் மிளிரும் தஞ்சை தன் பங்கைச் சட்டசபைக்குத் தரவில்லையே என்று தலைவர்கள் நினைத்திருக்கலாம்; அது உண்மைதான்—நாங்களும் ஒப்புக்கொள்கிறோம்.

இதர மாவட்டங்களுக்கு இரண்டு பங்காக - வருகின்ற பொதுத்தேர்தலில் தஞ்சையிலிருந்து தருகின்றோம் என்று தாழ்மையுடன் சொல்லிக் கொள்கின்றேன்.

இப்படித் தருகின்ற உறுதிமொழி வெறும் ஒலிக் குறி மட்டுமல்ல; தஞ்சைத் தரணியின் தரம் குன்றா வீரர்களின் நம்பிக்கையான உழைப்பின் எதிரொலியாகும்!

வாழ்க, திராவிடம்!

காரினிலே தேரமைந்து, கண்களோடு கருத்தையும் கவர்ந்த
இக்காட்சியும்கூட ஊர்வலத்தில்தான்!



தோழர் ப.உ.சண்முகம் எம்.எல்.ஏ.

திறப்புரை

தஞ்சை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் இந்த மூன்றாவது மாநாட்டைத் திறந்து வைப்பதில் நான் பெருமையும் பூரிப்பும் கொள்கிறேன்.

இத்தகைய ஒரு சிறப்பான மாநாடு நமக்குக் களிப்பையும், அதே நேரத்தில் இந்த மாநாட்டைப் பார்க்கும்போதோ—அல்லது கேள்விப்படும்போதோ—மாற்றாருக்கு; அதிலும் குறிப்பாக காங்கிரஸ் கட்சித் தோழர்களுக்குப் பொறாமையையும் தான் உண்டுபண்ணும்.

அந்தப் பொறாமையின் விளைவாக இன்றைய தினம் அவர்கள் செல்லுகின்ற இடமெல்லாம் அவர்களது சாதனைகளைப் பற்றிப் பேச மறந்தாலும், நம்மைத் தூற்றுவதற்குத் தவறுவதில்லை!

நாம் வளர்ந்துவிட்டவர்கள்! நாட்டு நலனுக்கான நல்ல பல காரியங்களைச் செய்து வருபவர்கள்! நாட்டு விடுதலைக்குப் போராடிக் கொண்டு வருபவர்கள்! மக்கள் தேவையறிந்து ஆயிரமாயிரம் திட்டங்கள் தரத் தகுதி பெற்றவர்கள்!

நாம் கேட்டோம், நாம் வாழுகின்ற நாட்டிற்கு — தமிழ் தழைத்திருக்கிற நம் பூமிக்கு ஏன் தமிழ்நாடு என்று பெயரிடக் கூடாதென்று. ஆனால் அமைச்சர்கள் தமிழ்நாடு என்று பெயர் வைக்க மறுத்துவிட்டார்கள். ஆனால் இவர்களது அமைப்புக்குப் பெயர் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி! தமிழ் மொழி உலாவுகின்ற இந்த நாட்டிற்கு ஏன் அந்தப் பெயரை வைக்கக் கூடாது? சென்னை ராஜதானி — சென்னை ராஜ்யம் — சென்னை ஸ்டேட் — இப்படித் தான் இருக்க வேண்டும் என்று சொல்லி விட்டார்கள்!

மேலும், நம்மைப் பார்த்து சட்ட சபையில் உங்களால் என்ன திட்டங்கள் தரமுடியும். திட்டத்திற்கான என்ன யோசனைகள் வழங்க முடியும்—என்றும் கேட்கிறார்கள். நாம் ஒன்றுமே கேட்காமல் வாயை மூடியபடியே மௌனமாகவா இருந்து விட்டோம்?

சேலத்திலே இரும்பு எடுப்பீர்களா— என்று கேட்டோம்!

அந்தத் திட்டம் என்னிடம் இல்லை; நேருவைக் கேட்கச் சொல்—என்கிறார்கள்!

மூங்கில் காடு அதிகமிருக்கிறதே; காகிதத் தொழிற்சாலை வைப்பாயா?

என்னால் முடியாது; நேருவைக் கேட்கச் சொல்!

தமிழகத்து மண்ணிலே சுண்ணாம்புக் கல் ஏராளம் இருக்கிறதே; சிமெண்ட் தொழிற்சாலை வைப்பாயா?

அது என்னால் சாத்தியமில்லை: நேருவைக் கேட்கச் சொல்!

தமிழகத்திலே வேறு என்ன தான் தொழிற்சாலை வைத்திருக்கிறாய்?

இதோ வைத்திருக்கிறேன் பார்; செருப்புத் தொழிற்சாலை —அப்பளத் தொழிற்சாலை! அவைகளைப் பற்றிப் புகழ்ந்து பேசு!

அணைகள் கட்டினீர்களா?

அவைகளையெல்லாம் வடக்கே கட்டியிருக்கிறோமே; பார்த்ததில்லையா?

நம் அண்ணா சொன்னார்கள், "பாலாற்றுக்கு அடியிலே ஓடுகின்ற கீழ் ஊற்றுத் தண்ணீரை எடுத்து வெளியே விடுங்கள்; பாலாற்றை நம்பிக்கொண்டிருக்கின்ற வயல்கள் மீண்டும் வளம் பெறும்; நெற் களஞ்சியமாக மாறும்" என்று. ஏற்றுக் கொண்டார்களா? பரீட்சார்த்தமாகவாவது முயற்சித்தார்களா? முடியாது என்று மறுத்துவிட்டார்களே!

வெளியே வந்து கேட்கிறார்கள், என்ன திட்டம் இவர்கள் கொடுத்தார்கள்—என்று! இன்னும் என்ன திட்டங்கள் தேவை? நாங்கள் என்ன; கையிலே வெடிகுண்டு வைத்து உள்ளே வந்தவர்கள் என்று எண்ணிக் கொண்டார்களா? நாவின் நுனியிலே செந்தமிழ்த் தாயை ஏந்தி உள்ளே வந்திருக்கிறோம்! எங்கள் கரம் மாசற்ற கரம்! எங்கள் இதயம் தூய்மையானது! நாங்கள் சொல்லுவது ஒவ்வொன்றும் தமிழக மக்களின் அன்றாடப் பிரச்சினையைத் தழுவியதாகும்!

கைத்தறி நெசவாளரின் பிரச்சினையைக் கவனித்தீர்களா என்றால், முடியாதாம்! நேரு மறுக்கிறாராம்! ஏன் மறுக்கிறார்? நெசவாளர்களைப் பற்றி — சிங்களத்திலே அவதிப்படுகின்ற தமிழர்களைப்பற்றி — கவனிக்க மறுக்கிறார்! காரணம் என்ன? சுப்பிரமணியம் சொல்லுகிறார், 'நிதி கிடையாது' என்று!

சென்னையிலே கவர்னர் மாளிகையிலே பூந்தோட்டம் ஒன்று வைத்திருக்கிறார்கள். அதற்காக கனம் சுப்பிரமணியம் ஆண்டு ஒன்றுக்கு 65,000 ரூபாய் செலவு செய்கிறார்! அவசியம்தானா அது? அந்த 65,000—வசூலிப்பதற்காக எத்

னை ஏழை விவசாயிகளின் நரம்பை முறித்திருப்பார்கள்? அவர்களது உழைப்பு ஆட்சியினருக்கு மிக மிகச் சாதாரணமாகத் தெரிந்து விட்டது!

கவர்னர் மாளிகைக்கு சுண்ணும்பு அடிக்க 1,30,000 ரூபாய் செலவு செய்கிறார்கள். அந்த ஆடம்பரச் செலவுகளுக்கெல்லாம் பணம் எங்கிருந்து வந்தது?

இந்தக் கேள்விகளை நாம் எழுப்புகிற நேரத்தில் எல்லாம் வடக்கு திசை நோக்கிக் கையை நீட்டி, நேருவைச் சுட்டிக்காட்டுகிறார்கள். அந்த நேருவும்—காந்தியாரின் சீடரும் இப்போது விலகிவிடுகிறேன் என்று சொல்கிறார்! அதற்காக அவர் சொல்லுகின்ற காரணங்களை நாம் நம்பத் தயாராயில்லை!

பதவி மோகம் காங்கிரசிலே மலிந்துவிட்டது; லஞ்சம் அதிகரித்துவிட்டது—இந்தக் காரணங்களைவிட முக்கியமான ஒரே ஒரு காரணம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் இப்போது படுதோல்வி அடைந்துவிட்டது. இந்த இக்கட்டான நிலையில், இருக்கின்ற பொறுப்பினை வேறு யார் தலையிலாவது சுமத்திவிட்டுப் போகலாம் என்று கருதியிருப்பார் நேரு! அதைத் தவிர வேறு காரணம் இருக்கமுடியாது!

அப்படிப்பட்ட தோல்வி அடையும் திட்டங்களைப் போட்டுக்கொண்டு, நம்மையும் சேர்த்துப் பிணைக்க எண்ணுகின்ற நேரு சர்க்காரோடு இனியும் நாம் தொடர்பு கொண்டிருக்க முடியுமா?

என்ன உறவைக் கண்டுவிட்டார்கள்?

தெற்கே விளைகிற மணிலாப் பயிர் 'டால்டா'வாக ஆக்கப்படுகிற இடம் வடக்கே!

தெற்கே கோலாரில் எடுக்கப்படுகிற தங்கத்திற்கு விலை நிர்ணயிக்கப்படுகின்ற இடம் வடக்கே—பம்பாய்!

தெற்கே விளைகிற பஞ்சு நூலாக—துணியாக ஆக்கப்படுகிற இடம் வடக்கே—ஆமதாபாத்; ஷோலாப்பூர்!

தமிழகம் எப்படி வாழும்? எப்படி வளம் பெறும்? தமிழகத்தின் தொழில் வளம் எப்படி முன்னேற முடியும்?

திராவிட முன்னேற்றக் கழகம் எழுப்புகின்ற கேள்விகள் இதுதான்! நாடு மீட்கவேண்டும்; மொழி காக்கவேண்டும்; நல்ல இதயம் படைத்த இளைஞர்களே! திராவிட முன்னேற்றக் கழகம் உங்களை அழைக்கிறது; வந்து சேருங்கள் பட்டாளத்தில்!

என்றோ ஒருநாள் நாம் சாகத்தான் போகிறோம்! எங்கெங்கு ஓடினாலும், எத்தனை பூசைகள் செய்தாலும், எத்தனை கோயில்களை வலம் வந்தாலும், எத்தனைத் திருக் குளங்களில் மூழ்கி எழுந்தாலும், சாவு நம்மை விட்டுப் போகாது!

நாமெல்லாம் சரித்திரம் படித்த இனம்; நாம் வாழ்ந்து கெட்ட சரித்திரத்தையும் உணர்ந்தவர்கள்!

இளங்கோவடிகள் காட்டிவிட்டுப்போன சிலப்பதிகாரக் காட்சிகள் — தமிழகத்திலே — ஏன், இன்றைய தினம் திருவாரூரின் அழகிய தெருக்களிலே ஊர்வலமாக வந்ததை நாம் பார்த்தோம்! சேரன் செங்குட்டுவன் கனக விசயர் தலையிலே கல் சுமந்து அழைத்துவந்த நிகழ்ச்சியைக் கண்டோம்!

அதைப்போல் இன்றைய தினம் வடக்கே காமராசர் தலையிலே தென்னாட்டு அதிகாரம் என்ற கல்லை வைத்துச் சுமக்கச் செய்திருக்கிறார், பண்டித நேரு!

அங்கு சேரன் செங்குட்டுவன் செய்தான்; இங்கு பண்டித நேரு செய்கிறார்!

அன்று கனக விசயர் சுமந்து வந்தனர்; இன்று காமராசரும், சுப்பிரமணியமும் சுமந்து கொண்டிருக்கிறார்கள்! அதுதானே வித்தியாசம்!

கண நேரம் சிலப்பதிகாரத்தைக் கண்முன் கொண்டுவந்து பார்த்தால் நாம் நம் நிலையை—நமது பணியை உணர்ந்து கொள்ள முடியும்!

ஆங்கிலமே பொது மொழியாக இருக்க வேண்டுமென்று நாமும் நல்லவர்களும் கோருகிற நேரத்திலே, அது அன்னிய மொழி என்று தூற்றுகிறார்கள், ஆட்சிபீடத்தினர்!

வெள்ளைக்காரன் கையாண்ட நாகரீக முறைகள் தேவை; அவன் விட்டுவிட்டுப் போயிருக்கிற சட்டங்கள் தேவை; துருப்பிடித்த துப்பாக்கிகள் தேவை; அவன் தருகிற தோட்டாக்கள் தேவை; டாலர்கள் தேவை! ஆனால் அவன் தந்த மொழி மட்டும் தேவையில்லையா?

அவைகளை எல்லாம் வேண்டாம் என்று சொல்! மோட்டார் காரிலே வராதே; கட்டை வண்டியைப் பூட்டு!

அப்படிச் செய்ய முடியாது உன்னால்; ஆனாலும் ஆங்கிலத்தை வெறுக்கிறாய்!

என்ன காரணம் அதற்கு?

இந்தியைப் புகுத்தியாக வேண்டும்—அதுதான் குறிக்கோள்!

நாம் அனுமதிக்க முடியுமா அதை? அருமை இளைஞர் உலகமே! தாய்க் குலமே! திராவிடத் தோழர்களே! அன்பழைப்பு விடுக்கிறது, திராவிட முன்னேற்றக் கழகம்! தயவு செய்து வாருங்கள்! மொழி காப்போம்! தமிழ் மொழி காப்போம்! செங்குட்டுவனுக்கு முன் அகத்தியனும், தொல்காப்பியனும், வள்ளுவனும், இடையிலே வந்து விட்டுப் போன கம்பனும் வளர்த்து விட்டுப் போன தமிழ் மொழியைக் கடைசியாக வந்திருக்கிற காமராசர் அழிக்கப் பார்க்கிறார். அதை அனுமதியோம் நாம்!

இறுதியாக திராவிட முன்னேற்றக் கழகத்துப் பொதுச் செயலாளரை நான் தாழ்மையோடு கேட்டுக் கொள்வேன், "நாவலரே! எப்போது திராவிடம் பிரியப் போகிறது? இளைஞர்களது உள்ளங்களிலே எல்லாம் சுடர் விட்டுக் கொண்டிருக்கிற அந்தத் தீப விளக்கு எப்போது இலட்சியத் தீபமாக மாறப்போகிறது? எப்போது அதற்கு உயிர்ப் பலிகள் தேவை? திராவிடம் பிரியும் நன்னாள் என்னாள்? அதற்கு குறிப்பிடப்படும் தேதி என்ன? தயவு செய்து சொல்லுங்கள்! இந்த மாநாட்டை நான் திறந்து வைக்கிறேன்! பொதுச் செயலாளர் அவர்களே! திராவிடம் பிரிவதற்கான வழி வகைகளை நீங்கள் திறந்து விடுங்கள்! நாளைத் தள்ளிப் போடாதீர்கள்!" என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டு இந்த மாநாட்டைத் திறந்து வைக்கிறேன். ஃ

தோழர் கே. ஏ. மதியழகன் பி. ஏ.

தலைமையுரை

தஞ்சை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக மூன்றாவது மாநாட்டில் என்னைத் தலைமை வகிக்கக் கேட்டுக் கொண்டமைக்கு என் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதே திருவாரூரிலே தான் பதினான்கு ஆண்டுகளுக்கு முன் என் பகுத்தறிவுப் பிரசாரத்தின் முதற் சொற்பொழிவை—நாம் ஊர்வலமாக வருகிறபோது கடந்த கமலாலயத்தின் எதிரிலேயுள்ள கழக உயர்நிலைப் பள்ளியில் நிகழ்த்தினேன்.

அப்போது நான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மாணவன்; எனது நண்பர் கருணாநிதி இந்த ஊர் உயர்நிலைப்பள்ளி மாணவர். அவர் அமைத்திருந்த மாணவர் மன்றத்திலேதான் என்னைப் பேச அழைத்திருந்தார்.

இன்றைய தினம் நீங்கள் அமைத்துக் காட்டிய பிரமாண்டமான ஊர்வலத்தைப் பார்த்தேன். சோழ மன்னர்களுடைய காலத்தில், பெரிய வெற்றி நாட்களிலேகூட இவ்வளவு பெரிய அணிவகுப்பு, ஊர்வலம் நடந்திருக்கமுடியுமா என்று நீங்கள் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறேன்.

இதற்கு என்ன காரணம்? இன்று நம்முடைய வனப்பும் எழுச்சியும், நாம் பட்டிருக்கின்ற தியாகங்களுக்கெல்லாம் சிகரம் வைப்பது போலாகும். பள்ளிகளிலே — பல்கலைக் கழகங்களிலே — மூலை முடுக்குகளிலே — சாலைகளிலே சோலைகளிலே எங்கு பார்த்தாலும் இதே பேரார்வம்! எங்கள் நாடு எங்களுக்கு ஆகவேண்டும் என்ற தீவிர உறுதியைத்தான் உங்களுடைய கண்களிலே—பேச்சுகளிலே—மூச்சுகளிலே—நடவடிக்கைகளிலே எல்லாம் காணுகிறேன்.

குறுகிய காலத்திலேயே நாம் எவ்வளவு பெரிய முன்னேற்றத்தை அடைந்திருக்கிறோம் என்பதை சமீபத்திலே வடநாட்டிலேயிருந்து இங்கு இறக்குமதி செய்யப்பட்டு, தமிழ்நாடெங்கும் சுற்றுப் பயணம் செய்த தேபர் அவர்களது பேச்சின் மூலம் நன்கு அறியலாம்.

தேபருடைய கூட்டங்களில் ஒன்றை நானே கேட்க நேரிட்டது. அவர் சுற்றிச் சுற்றி நம்மைத்தான் தொட்டார். காங்கிரசின் சாதனைகளைப் புகழ்ந்து பேசிய அவர், கடைசியில், "நீங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்காகக் கை தட்டுகிறீர்கள்! நீங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்காகக் கைதட்டுகிறீர்கள்!" என்று அடிக்கடி சொன்னார். அவர்கள் சாதித்ததையெல்லாம் புள்ளி விவரங்களோடு விளக்கிவிட்டு, கடைசியில் இன்னொன்றும் கூறுகிறார், "தீப்பொறி பறக்கும் பேச்சுகள் தேவை என்றால் நீங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்துக்குப் போங்கள். நாங்கள் நிர்வாக வேலையைச் செய்கிறோம்" என்று! நமக்குப் பெரிய பாராட்டுரை தந்தார் என்று இதை நான் கூறவில்லை.

இவர்களுக்கு என்ன தெரியும் என்கிறார்கள், காங்கிரஸ்காரர்கள் ஒரு நேரத்தில்; 'புள்ளி விவரம் தெரியுமா? படித்திருக்கிறார்களா? வாதத் திறமையுண்டா? அறிவாற்றல் உண்டா?'— என்று ஒரு சில நேரத்தில் பேசிவருகிறார்கள்.

ஆனால், அவர்கள் ஸ்தாபனத்தைக் கட்டிக் காத்துவரும் மாபெரும் காவலர் தேபர் சொல்கிறார், தீப்பொறி பறக்கப் பேசுவோம் என்று! அதற்கு என்ன காரணம்? யார் தீப்பொறி பறக்கப் பேசுவார்கள்? உள்ளத்தில் தீயுக்குச் சமமான வேதனைகள் இருப்பதால்தான் வார்த்தைகளும் வெடித்துக் கிளம்புகின்றன! ஆனாலும் நம் உள்ளத்திலே தூய்மை இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் அவ்வளவு ஒழுங்காக—தீரமாக—அழகாக—கவர்ச்சியாகப் பேசுகிற தென்றால் நமது உள்ளத்தில் தெளிவு இருக்கிறது; உண்மை இருக்கிறது; துன்பங்களைக் களைந்து கொள்ள வேண்டுமென்ற ஆர்வம் இருக்கிறது!

இன்றைக்கு பதினெட்டு வருடங்களுக்கு முன்பு இந்தத் திருவாரூரிலேதான், முதன் முதலில், 'திராவிடநாடு தனி நாடாக ஆக வேண்டும்' என்ற சுதந்திர இலட்சியமே உருப்பெற்றது. பெரியார் ராமசாமியின் தலைமையிலே நடைபெற்ற நீதிக் கட்சியின் மாநாட்டில் இந்தக் காவிரி நதி தீரத்திலேதான்

திராவிடத் திருநாடு தனியாகப் பிரிய வேண்டுமென்று நம் முன்னவர்கள் உறுதிமொழி எடுத்தார்கள்.

பதினெட்டு வருடங்களுக்குப் பிறகு இன்று மறுபடியும் நம்மை நாமே பார்த்துக்கொள்கிறோம்; ஓரளவுக்குத் திருப்திதான்; ஓரளவுக்கு நிம்மதிதான்; ஏனெனில் ஓரளவுக்கு நல்ல காரியத்தைத்தான் நாம் செய்திருக்கிறோம்!

ஆனால் மிகச் சின்னஞ் சிறு நாடுகள் — மக்கள் தொகை குறைந்த; வசதியில்லாத; பணமில்லாத; இலக்கியமில்லாத; பெரும் ஆற்றல் நிறைந்த தலைவர்களைப் பெறாத நாடுகள் எல்லாம் மிகக் குறுகிய காலத்தில் சுதந்திரச் சங்கு ஊதியிருக்கின்றன என்பதை இப்போதுதான் நாம் நினைத்துப் பார்க்கவேண்டும்!

இரண்டு மூன்று ஆண்டு கால நிகழ்ச்சிகளைக் கவனமாக எடுத்துப் பாருங்கள். காட்டுமிராண்டிகள் மட்டுமே வாழ்வதாகக் கருதப்பட்ட ஆப்பிரிக்காவிலுள்ள அல்ஜீரியா நாட்டுக்காரன் விடுதலை பெற்றிருக்கிறான்! டூனீஸியா, மொராக்கோ, கோல்டு கோஸ்டு நாட்டுக்காரர்கள் சுதந்திரம் பெற்றிருக்கிறார்கள்! சைரப்ஸ், தீவு சுதந்திரப் போராட்டம் நடத்துகிறது! மலேயா சுதந்திரம் பெற்றிருக்கிறது! இந்தோனேஷியா விடுதலை பெற்று அங்கே வேறொரு கிளர்ச்சியும் ஆரம்பமாகியிருக்கிறது!

இப்படிப்பட்ட சின்னஞ்சிறு நாடுகள் எல்லாம் தங்களுடைய உரிமைகளைப் பாதுகாக்க—தங்கள் வாழ்வை நிர்மாணித்துக் கொள்ள நல்ல காரியங்களை யெல்லாம் நடத்திக்கொண்டே யிருக்கின்றன! ஆனால் இந்தப் பெரிய நாட்டைப் பொறுத்த வரையில் இவ்வளவு பெரிய எழுச்சியும் விழிப்பும் ஏற்பட்ட பின்னாலேயும் நம்முடைய கோரிக்கை கவனிக்கப்படவில்லை. 1947-ம் ஆண்டுக்குப் பின்னால் வடநாட்டிலே ஏற்பட்ட புதியதொரு வல்லரசுக்கு நாமெல்லாம் அடிமைகளாகி விட்டோம்! நடைப் பிணங்களாக மாறிவிட்டோம்!

அப்படி நம்மை அடிமைப் படுத்தி வைக்க—நம்மை அரசாள—சுதந்திரம் என்ற பெயரால் ஓர் அரசியல் சட்டத்தை அன்று அவர்கள் நிர்மாணித்தார்கள்.

அந்த அரசியல் சட்டத்தை எங்கேயோ இருக்கின்ற டெல்லிக்காரர்கள், நாம் ஏமாந்த வேளையிலே—நாம் விழித்திருக்காத நேரத்திலே—நம்முடைய சம்மதத்தைப் பெறாது செய்து விட்டார்கள். நம்மைப் பிடித்து வைத்திருக்கிற அந்த சட்டத்தின் மூலம்தான் நம்முடைய நாட்டு வரிகள் எல்லாம் சுரண்டப்பட்டன! நம்முடைய மானம் டெல்லியிலே அடகு வைக்கப்பட்டது! நம்முடைய மொழி சிதைக்கப்பட்டது!

உலகத்து சுதந்திர நாடுகள் எல்லாம்தான் அரசியல் சட்டம் நிர்மாணித்திருக்கின்றன. எப்படி? நாட்டு மக்களுடைய சம்மதத்தைப் பெற்று—அபிப்பிராயத்தைக் கேட்டு — ஒத்துழைப்பைப் பெற்று — பிறகுதான் செய்தார்கள்.

ஆனால், இங்கே இரண்டு மூன்று கோடி ரூபாய்கள் செலவு செய்து, ஒரு ஐந்தாறு பேர்கள் கையிலே அதை ஒப்படைத்தார்கள்.

யார் அவர்கள்? அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் — என். கோபாலசாமி அய்யங்கார் — டாக்டர் அம்பேத்கார் — கே. எம். முன்ஷி! இவர்களில் யார் சுதந்திரத்திற்காகப் போராடியவர்கள்? யார் சிறைச்சாலைக்குச் சென்றவர்கள்?

அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் என்பவர் அட்வகேட் ஜெனரலாக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் சார்பிலே பதவி வகித்துக் கொண்டிருந்த மனிதர்!

கோபாலசாமி அய்யங்கார், உதவி கலெக்டர் வேலையிலே தொடங்கி, காஷ்மீர் மந்திரி வேலை வரையில் வெள்ளைக்கார சர்க்காரின் தயவில் உத்யோக மண்டலத்திலே உலவிய பெரும் சுகவாசி!

டாக்டர் அம்பேத்கார் இவர்களால் பரிகசிக்கப்பட்டவர்!

நான்காவது மனிதரான முன்ஷி யார்? பாரத் வர்ஷம், ராம ராஜ்யம் என்றெல்லாம் சொல்லி, கங்கை நதி தீரத்தில் பர்ணசாலை அமைத்துக் கொண்டு, ஆர்யா வர்த்தத்தை ஆட்சி செய்த அந்த மகோன்னத நாட்கள் இங்கே ஏற்பட வேண்டுமென்று கனவு காண்பவர்!

இப்படிப்பட்ட பிற்போக்குக்காரர்களால் உண்டாக்கப்பட்ட அரசியல் சட்டத்தின்படிதான் நாம் இன்று ஆளப்படுகிறோம்; அதன்படி இன்னும் ஏழு வருடங்களிலே இந்தி மொழிதான் நமக்கு மொழியாகுமாம்; தமிழ் மொழி இருக்காதாம்! இப்படிச் சொல்கிறார்கள், ஆணவத்தோடு!

நாம் பெரிய மனிதரைத்தான் டெல்லியின் தலைவராக வைத்தோம்! பண்டித நேரு சாதாரணமானவரல்லவே! ஆசியாவின் ஜோதி — பஞ்சசீலம் போதிக்கும் பண்டிதர்! அவரது ஆற்றலை உலகத்தில் எவரும் மறுத்ததில்லை!

எந்த மொகலாய சிற்றரசுக்கும் கிடைக்காத பெருமை, அலகாபாத்திலே உள்ள ஒரு வக்கீல் குடும்பத்திற்கு — காஷ்மீர நாட்டு பிராமணக் குடும்பத்திற்கு ஏற்பட்டது—அதையும் சரித்திரம் மறக்காது!

தேசியப் போராட்டத்தின் விளைவால், பண்டிதர் வெளிநாட்டுப் பல்கலைக் கழகத்திலே படித்துக் கொண்டிருந்த காலத்திலேயே, இங்கே தலைமைப் பதவி காத்துக் கிடந்தது!

காந்தியாரின் செல்லப் பிள்ளையாய்—அரசியல் வானின் பல்லாண்டு கால உன்னதத் தாரகையாய்—ஒளிவிடும் நட்சத்திரமாய் பிரகாசிப்பவர் அவர்!

“ஜவஹர்லால் நேருவா; அவர் இளைஞருடைய சின்னம்—வாலிபருடைய சின்னம்—புதிய நவ இந்தியாவின் எழுச்சி!” என்றெல்லாம் போற்றி வளர்க்கப் பட்டவர்!

அப்படிப்பட்ட பெருமை மிக்க நேருவின் ஆட்சி பதினேரு ஆண்டுகளை முடித்துக் கொண்டது. அதற்குப் பின்னால் தான் சென்ற வாரத்திலே அவர் சொல்லுகிறார், “என்னாலே ஒன்றும் செய்யவே முடியவில்லை. நான் தோல்வியுற்றுவிட்டேன். எனவே இமய மலைச் சாரலில் எந்த இடத்தில் தங்கலாம்? எனக்கு ஓய்வு தேவை!” என்று.

எவ்வளவு பொறுப்பற்றவர்கள், எவ்வளவு சுரண்டல்காரர்கள், எவ்வளவு தன்னலக்காரர்கள் இன்றைய தினம் டெல்லி மூல பீடத்திலே நிறைந்து விட்டார்கள் என்பதைத்தான் நாம் இதனால் உணரமுடிகிறது!

அப்படிப்பட்டவர்களுடைய



முத்தமிழின் சிறப்பு கூறி—மூவேந்தர் வேடமணிந்து ஊர்வலத்தில் இப்படிச் சென்றார்கள், இயக்க வீரர்கள்!

ஆட்சியோடு — டெல்லியோடு தென்னாடு இனி என்ன உறவு வைத்துக் கொள்ள முடியும்? அங்கிருந்து நாம் என்ன பலனை எதிர்பார்க்க முடியும்?

அவர்கள் அமைத்திருக்கிற மந்திரி சபையில் எத்தனை பேர் தென்னாட்டவர்கள் இருக்கிறார்கள்? சுமார் பத்துகோடி திராவிடர்களின் சார்பில் கே. சி. ரெட்டி என்ற கன்னட நாட்டுக்காரர் ஒருவருக்கு மந்திரிப் பதவி தந்திருக்கிறார்கள்! ஆனால் நேருவினுடைய சொந்த மாகாணமாகிய உத்திரப் பிரதேசத்திலிருந்து ஆறு பேர்; பம்பாய் மாகாணத்துக்காரர் ஐந்து பேர் பெரிய மந்திரிகள்!

அத்தனை பேர் வடநாட்டுக்காரர்கள் இருந்தும்கூட அவர்களுடைய ஸ்தாபனம் கலகலத்து—கட்டுக் குலைந்து—மிகவும் கீழ்த்தரமான நிலைக்குத்தான் போய்க் கொண்டிருக்கிறது.

ஓரிஸாவிலே நடக்கும் தகராறு உலகக்கேலிக்கு இடமாகிவிட்டது!

மைசூரிலே இருக்கிற காங்கிரசின் உள் குழப்பம் அவர்களுக்கே கவலையைத் தந்து விட்டது! முதன் மந்திரி பீடத்திலே இருந்த நிஜலிங்கப்பாவை அங்கே காணோம்! யாரோ புதிதாக ஒருவர்—யாருக்கும் தெரியாத ஒருவர்—பம்பாய் மாகாணத்துக்காரராம் — அவருக்கு அங்கே முதன் மந்திரிப் பதவி தூக்கித் தரப்பட்டு விட்டது!

கேரளாவிலே காங்கிரசுக்கு செல்வாக்கு இல்லை என்ற நிலை!

ஆந்திர பூமியிலே குமுறிய அமளி இப்போதுதான் கொஞ்சம் அடங்கி யிருக்கிறது!

பஞ்சாபிலே தகராறு—உத்திரப் பிரதேசத்திலே முதன் மந்திரியாக யார் வர வேண்டும் என்ற பதவிச் சண்டை அதிகரித்துக் கொண்டே போகிறது!

இப்படி யாருமே காப்பற்ற முடியாது என்ற அளவிற்கு அவர்கள் பலகீனமாகிக் கொண்டு வருகிற நேரத்திலேயும் வெறித் தன்மையும், சுயநலச் சுபாவமும், இத்தனை கோடி மக்களையும் அடிமைகளாகவே வைத்திருக்க வேண்டுமென்ற தன்னல ஆதிக்கமும் டெல்லியிலேதான் வளர்ந்து கொண்டே போகிறது!

இவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான், வெள்ளைக்காரன் காலத்திலேயும் இல்லாத எத்தனையோ முறையான அடக்குமுறைகளை நாம் பார்த்தோம்! இருந்தாலும் இங்கேதான் பிரஜா உரிமை காப்பாற்றப்படுவதாக பீற்றித் திரிகிறார்கள்!

இங்கே அமர்ந்திருக்கின்ற நம்மில் ஆயிரக் கணக்கானோர் சிறைச் சாலைக்குச் சென்று விட்டு வந்திருக்கிறோம்!

இவர்கள் ஆள வந்த பிறகுதான் அறிஞர் அண்ணா அவர்களுடைய நூல்களுக்குத் தடை விதித்திருக்கிறார்கள்!

பத்திரிகைகளுக்குத் துணிந்து ஜாமீன் வசூலித்திருக்கிறார்கள்!

நமது தோழர் ஆசைத்தம்பியைச் சிறையிலே அடைத்துப் பூட்டினார்கள்! நாடகங்களுக்குத் தடைகள் போன்ற—இன்னும் மிகக் கொடிய எத்தனையோ தவறான காரியங்கள்! இருந்தாலும் பிரஜா உரிமை; பிரஜா உரிமை என்ற எழுத்துக்களைக் குப்பைக் கூளத்தைப் போல அரசியல் சட்டத்தில் எழுதி வைத்திருக்கிறார்கள்!

இப்போதுகூட சென்னை, திருவல்லிக்கேணி கடற்கரைக் கூட்டத்தில் அறிஞர் அண்ணா பேச முயற்சித்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட வழக்கு நடைபெறுகிறது. அரசியல் தலைவர்களை இப்படிக்குற்றவாளிக்கூண்டிலே நிறுத்தி விட்டுத்தான் குடியுரிமைகள் பற்றியும் ஜனநாயகம் பற்றியும் கதையளக்கிறார்கள், ஆளப் பிறந்தவர்கள் தாமே என்று எண்ணி இறுமாந்திருப்பவர்கள்!

இது என்ன கேலிக் கூத்து? இரண்டு மாதம், மூன்று மாதம் காரணமின்றி ஒருவரைச் சிறைச் சாலையிலே தள்ள இவர்களிடம் ஒரு சட்டம் இருக்கிறது! அதற்குப் பெயர் தடுப்புக் காவல் சட்டம்! அதன் ஆயுளையும் நீடித்திருக்கிறார்கள் இப்போது. இதுதான் குடியுரிமையா?

இரண்டு வாரத்துக்கு முன்னால் ஆச்சாரியா கிருபளானி கூறினார், இவர்களது அதிகார

போதையைப்பற்றி. பழைய காலத்து லூயி மன்னர்களைப் பற்றி—ஜேம்ஸ் மன்னர்களைப் பற்றி உங்களுக்குத் தெரியும். லூயி மன்னன் பிரான்ஸ் நாட்டின் ஆர்ப்பாட்டக்காரன்; கொடுமைக்காரன்; சுயநலத்திலே நீந்தித் திளைத்தவன்! அதேபோல் ஜேம்ஸ் மன்னர்களும் இங்கிலாந்து நாட்டிலே, மன்னர்கள்தான் பெரிய மகேஸ்வரர்கள் என்று மமதையோடு கூறிக் கொண்ட கொடியவர்கள்! அதனாலே தலை வெட்டப் பட்டவர்கள்! அப்படிப்பட்ட மன்னர்களுக் கில்லாத அதிகாரம் இன்றைய தினம் ஒரு சாதாரண அமைச்சருக்கு இருக்கிறதென்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

அப்படிப்பட்ட கொடுங்கோலர் ஆட்சியில் நாம் எத்தனை நாட்களுக்குத்தான் ஓட்டிக் கொண்டிருக்க முடியும்? நாம் என்ன அடிமைகளாக வாழ்ந்த இனமா?

ஒரு காலத்தில் நம்முடைய மூதாதையர்கள் வாழ்ந்த சிறப்பு மிக்க வாழ்வை உணராதவரல்லவே! காவிரி நதித் தீரத்தினுடைய அழகிய பூஞ்சோலைகளும் வயல் வெளிகளும், வண்ணத் தடாகங்களும், கடற் கரைளும், கடற் கரையிலேயிருந்து மரக் கலங்கள் வெளிநாடுகளுக்குச் சென்றன என்ற காட்சிகளும் நமக்கு நினைவுக்கு வரத்தான் செய்கின்றன!

கிரேக்க நாட்டில், ரோம நகரத்து வீதிகளில், யாழ்ப்பாணத் தெருக்களில், சீன நாட்டு நெடுஞ் சுவர்களுக்கு அருகில், சிறப்புமிகு சாவகத்தில் தமிழ் நாட்டினுடைய மிளகு, மயில், சந்தனம் போன்ற ஒப்பற்ற பொருள்களுக்கு இருந்த மதிப்பு நமக்குத் தெரியும்!

தமிழ் நாட்டுப் பெரும் வீரர்கள் அங்கெல்லாம் அணிவகுத்துச் சென்ற காட்சிகளையும் நம் மனக் கண் முன்னாலே கொண்டுவரத்தான் முடிகிறது.

இங்கே இருக்கின்ற கோபுரங்களையும், அதன் சிற்ப வேலைகளையும் பார்க்கின்ற நேரத்தில்—மண் மேடிட்டுப் போய்விட்ட பூம்புகார் நகரை நினைக்கின்ற நேரத்தில் — மாமல்லபுரத்துச் சிற்பத்தை, கோட்டைக் கொத்தளங்களை, பெரிய பெரிய அணைக் கட்டுகளை, தஞ்சைத் தரணியின் வளம் கொழிக்கும் வயல்களைப் பார்க்கின்ற நேரத்தில் உழைப்பும் நல்ல உறுதியும் கொண்ட இனம் ஏனோ இப்படி ஆனது என்று நம்மை அறியாமல் கேட்டுக் கொள்கிறோம்!

இந்த நிலை இந்தத் தலைமுறையோடாவது தொலைந்து விடுமா என்ற கேள்விக்கு விடை காணத்தான் இவ்வளவு பெரிய மகத்தான எழுச்சி இந்த நாட்டிலே உருவாகியிருக்கிறது!

இல்லாவிட்டால் இவ்வளவு பிரமாண்டமான மாநாடு ஏன்? லட்சக் கணக்கில் இப்படிக் கூடுவது ஏன்? கூடுவது மட்டுமல்ல; கண்களிலே வருகின்ற கண்ணீரையும் துடைத்துக் கொள்கிறார்கள்! படுகிற சிரமங்களைத் துச்சமென மதிக்கிறார்கள்! தங்களுடைய குடும்பத்தை — சுகபோகத்தை — சிரமத்தை மறந்து ஒன்றுபடுகிறார்கள் என்றால், இந்த நாட்டிற்கு விரைவிலே ஒரு நன்மை வருகிறது என்பதுதானே பொருள்?

நாம் நம் விலங்கினை ஒடித்தெறிய எடுத்துக் கொள்ளுகின்ற முயற்சியிலே — குதிக்கின்ற போராட்டத்திலே—செத்துத் தொலைந்தாலும் பரவாயில்லை!

சாவு நமக்கு என்ன பயங்கரமானதா? எத்தனையோ பெரிய பெரிய மனிதர்கள் எல்லாம் திடீரென்று செத்து விடுகிறார்கள்! பஞ்சாப் நாட்டின் மிகப் பெரும் தேசியத் தலைவர் டாக்டர் கான்சாகிப் என்ற 78 வயது நிரம்பியவர், எவனோ ஒரு வெறியனால் கொல்லப்பட்டார் என்ற செய்தி வருகிறது. நல்ல பண்பாளர் — அப்படிப்பட்டவருக்கே இந்த முடிவு ஏற்படுகிறதென்றால், சாவைக் கண்டு அஞ்சலாமா?

சாகாமலா இருக்கிறோம்? ஒரு புயல் அடித்தால் நூற்றுக் கணக்கிலே மரணம் நேரிடுகிறது! ஆகவே, ஒரு பெரிய போராட்டத்தில் நம் தலைமுறையிலே, சமயம் குறுக்கிட்டால் பல உயிர்களைப் பலி கொடுக்க நாம் தயாராகத்தான் இருக்க வேண்டும்!

அத்தகைய ஒரு முரட்டுத் தனத்தை — பிடிவாதத்தை — திமிரை — ஆணவத்தை—உண்மையிலேயே நாம் பெற்றுத் தீர வேண்டும்!

நாம் அடிமைகளாகவே — கோழைகளாகவே வாழ்வதற்குப் பிறக்கவில்லை. நமக்குப் பின்னால் வருகிறவர்களாவது, நம்முடைய சந்ததியினராவது இந்த நாட்டிலே சுதந்திரமான மக்கள் என்ற நிலையைப்பெற்று உலவட்டும்! அந்தத் தெளிவை இன்றைய தினம் திராவிட சமுதாயம் அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் பெற்று வருகிறது!

ஒரு பெரிய இனம் விழிப்படைந்துவிட்டால் — எழுச்சி பெற்றுவிட்டால் அதனை அழித்ததாக உலகத்திலே எங்கேயுமே சரித்திரம் இல்லை!

ஒரு பெரிய படையை—காக்கிச் சட்டைகள் அணிந்திருப்பவனை — துப்பாக்கி தூக்கியிருப்பவனை — வேண்டுமானால் தோற்கடித்துவிடலாம்.

சேனைகள் தோற்கலாம் — நெப்போலியன் தோற்றிருக்கிறான்; நெல்சன் தோற்றிருக்கிறான்; அலெக்சாண்டர் தோற்றிருக்கிறான்!

ஆனால், இங்கே கூடியிருக்கிற திராவிட வாலிபர்களே! உங்களுடைய மகத்தான உறுதியை — நேருவானாலும் சரி; வேறு யார் வந்தாலும் சரி; அழிக்க முடியாது!

இத்தாலிய நாட்டு விடுதலை வீரன் மாஜினி மக்களைப் பார்த்துச் சொன்னான், "இந்த நாட்டினுடைய சுதந்திரப் போராட்டத்திற்கான தலைப்பைத் தந்து விட்டோம். அதனுடைய அத்தியாயங்களை எழுத வேண்டியது உங்களுடைய கடமை!" என்று!

அதைப்போலத்தான் நம்முடைய அரிய தலைவர் அண்ணா அவர்கள் திராவிட நாட்டின் எதிர்கால வாழ்விற்கான நல்ல தலைப்பைத் தந்திருக்கின்றார்கள். அதுதான் "திராவிட நாடு திராவிடருக்கே" என்பது. அதனுடைய அத்தியாயங்களை—பாகங்களை—வரிகளை — எழுத வேண்டிய கடமை உங்களுடையது! ஃ

அறிஞர் அண்ணாவின் பேருரை

தஞ்சை மாவட்ட மாநாடு திருவாரூரில் இரண்டு நாட்களாக மிகச் சீரான முறையிலே — நாமெல்லாம் கண்டு மகிழ்ந்து பெருமைப்படத்தக்க வகையிலே நடைபெற்றிருக்கிறது.

உங்களிடத்திலேயே தங்கி —மாநாட்டைச் சிறப்பான முறையிலே நடத்தி—கடைசியிலே 20,000 ரூபாயை மிச்சப்படுத்தித் தந்த என்னுடைய தம்பி கருணாநிதிக்கும் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

"20,000 ரூபாயை மட்டுமல்ல நான் அண்ணாவிடம் காட்டுவது; தஞ்சை மாவட்டத்தைக் காட்டுகிறேன்; தஞ்சையிலே கொள்கை குலுங்கிக் கொண்டிருக்கிற காட்சியைப் பாரீர்! பாரீர்!" என்று கருணாநிதி என்னிடத்திலே எடுத்துச் சொன்னதைக் கேட்டீர்கள். அதிலே மகிழ்ச்சி அடைகிறேன் என்றாலும், கருணாநிதி இதைச் செய்யாவிட்டால் எப்படி என்னுடைய தம்பி என்று சொல்ல முடியும்?

கருணாநிதியின் கரம் பட்டதால் இந்த மாநாட்டில் 20,000 ரூபாய் மிச்சப்பட்டதென்று கருணாநிதி நமக்கு எடுத்துச் சொன்னதைக் கேட்டோம்! ஆனால் நான் சொல்கிறேன், தம்பி!...உன்னுடைய கரம் பட்டு லட்சக்கணக்கான ரூபாய் பெற்றவர்கள் தமிழகத்தில் ஏராளமான பேர் இருக்கிறார்கள். ஆனால் மிகக் குறைந்த தொகைதான் கழகத்திற்கு உன்னாலே இன்றைய தினம் பெற முடிந்திருக்கிறது!

குறிப்பாக இந்த மாநாட்டுப் பந்தலை அமைத்திருக்கிற முறையே சுவை சொட்டச் சொட்ட இருப்பதைப் பார்க்கிறோம். மேடையிலே நான் உட்கார்ந்து கொண்டிருக்கின்ற நேரத்திலே, பந்தல் காலுக்கு பந்தல் கால் கட்டியிருக்கிற வாழைப் பழங்களையும், பலாப் பழங்களையும், பார்த்து 'சுவையாக இருக்குமே' என்று என்னுடைய கண்கள் மேலேயே நின்றுவிட்டன; அதே நேரத்தில் கீழே நீங்கள் கனிவான முகத்துடன் உட்கார்ந்து கொண்டிருப்பதைப் பார்த்து, இதைவிடச் சுவையான கனிகள் கீழே இருக்கின்றனவே என்று என்னுடைய கண்கள் தானாக கீழே இறங்க ஆரம்பித்து விட்டன.

நாட்டிலே நாம் அடைந்திருக்கின்ற எழுச்சியை — நாள்தோறும் நாம் காணுகின்ற எழிலோவியத்தை உலகத்திலே உள்ளவர்கள் காண முடிகிற அளவிற்கு நம்மிடையே பத்திரிகை பலம் இல்லை!



அதுமட்டுமல்ல; நம்முடைய இயக்கத்திற்கு சட்டசபைக்கு வெளியே பலம் அதிகம்; சட்டசபைக்கு உள்ளே பலம் குறைவு! காங்கிரஸ் கட்சிக்கு சட்டசபைக்கு உள்ளே பலம் அதிகம்; வெளியே பலம் குறைவு!

நீங்கள் இதை மறந்துவிடக் கூடாது; நானும் மறந்துவிடவில்லை; டில்லி பாராளுமன்றத்திலே இப்படிப்பட்ட எழுச்சி உள்ள இயக்கத்தின் சார்பிலே உள்ளவர்கள் இரண்டே இரண்டு தோழர்கள்! அவர்கள் 20 தோழர்களுக்குச் சமமானவர்கள் அறிவில், ஆற்றலில்—அதை நான் உணருகிறேன்! அந்த இருவரும் பெருமைப்படத்தக்க அளவில் பணியாற்றிக் கொண்டு வந்திருக்கிறார்கள் —அதையும் உணருகிறேன்!

இந்த அரிய வளர்ச்சியை நாம் ஏதோ சாதாரணமாகப் பெற்றுவிடவில்லை! தர வேண்டிய விலையைத் தந்தோம்! கொட்ட வேண்டிய குருதியைக் கொட்டினோம்! பொழிய வேண்டிய வியர்வையைப் பொழிந்தோம்! தாங்க வேண்டிய ஏச்சுக்களையும், பேச்சுக்களையும் கூட நாம் தாங்கியிருக்கிறோம்! காட்ட வேண்டிய தியாகத் தழும்புகளையும்

நாட்டுக்குக் காட்டியிருக்கிறோம்.

ஒவ்வொரு மாநாட்டிலேயும் நான் இந்த எழிலுள்ள காட்சிகளைக் காணுகின்ற நேரத்தில் நாம் இப்படி வளர்வதற்காகத் தங்கள் இரத்தத்தைச் சிந்தியவர்கள் — வியர்வையைக் கொட்டியவர்கள் —இன்னுயிரைத் தந்தவர்கள்—அத்தனை பேரையும் மனக் கண்களிலே நினைத்துப் பார்த்து, அவர்கள் சிந்திய இரத்தமும் வியர்வையும் வீண்போகவில்லை; உழைப்பு நல்ல உருவெடுத்திருக்கிறது —என்று எண்ணி, அவர்களுக்கு வீர வணக்கம் செலுத்திக் கொள்ளுவேன்.

நம்மிலே யாரும் பெரிய பாண்டித்யம் பெற்றவர்களல்ல; புலவர் பெருமக்களல்ல; பெரிய சீமான்களல்ல; சிற்றரசர்களல்ல! நம்மிலே பல பேர் இலக்கியம் பேசுகின்றோம்; ஆனால் நாம் இலக்கியம் பேசுகின்ற நேரத்தில், அதிலே ஏற்படுகின்ற கவர்ச்சிக்குக் காரணம், அந்த இலக்கியத்தை எதிலே கொண்டு வந்து இணைக்கிறோம் என்பதிலேதான் இருக்கிறது!

நம்மிடத்தில் புலமையை எதிர்பார்த்துக் கூட்டம் கூடவில்லை. நம்முடைய புலவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை எடுத்துக் காட்டி, இன்றைய தினம் எப்படி நாம் புல்லர்கள் கையிலே சிக்கியிருக்கிறோம் என்பதையும் எடுத்துக் காட்டுகிறோம்!

நாம் வரலாறு அத்தனையும் நன்றாகப் படித்து விட்டோம் என்பதல்ல; ஆனால் ஓரிரு வரலாற்றுத் துணுக்குகளை நம்மிலே பலபேர் எடுத்துச் சொல்லுகின்ற நேரத்தில், கேட்பவர்களுக்கும் முறுக்கு ஏற்படுகிறது! கூனன் நிமிர்ந்து உட்காருகிறான்! விழியற்றவனுக்குப் பார்வை தெரிவது போன்ற பிரமை தோன்றுகிறது! ஊமைக்குக் கூட பேசலாமா என்ற ஆசை ஏற்படுகிறது! இன்னும் சொன்னால் காங்கிரஸ்காரர்களுக்குக்கூட கனிவு வருகிறது!

இங்கே அமர்ந்திருக்கின்ற ஒவ்வொரு தோழரும்—என்றாவது ஒரு நாள் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய விடுதலைக் குறிக்கோளுக்குத் தன் இன்னுயிரைத் தர வேண்டுமென்றாலும் தருவதற்குச் சித்தமாக இருப்பவர்கள் என்பதை நான் மனதார உணர்ந்திருக்கிறேன். உங்களை எந்த நேரத்திலே அந்த ஆபத்தான விளையாட்டிலே நான் சிக்க வைக்கப் போகிறேனோ அது எனக்கே தெரியாது! எந்த நேரத்திலே அப்படிப்பட்ட பயங்கரமான பரிசோதனையை நாட்டை ஆள்பவர்கள் நமக்கு வைப்பார்களோ; அதையும் இன்றைய தினம் அரசியல் ஆருடத்தில் கணிக்க முடியாது!

ஆனால், ஆட்சியாளர்களுக்கு நான் சொல்லுவேன் —என் கண் எதிரில் காணுகின்ற இந்த இளைஞர் கூட்டம் மாநாட்டுக்குக் கட்டணம் கொடுத்து வருபவர்கள் மட்டுமல்ல; சிறைச்சாலைக்கு அழைக்கப்பட்டால் உள்ளே செலவதற்கு 'நான் நீ' என்று போட்டியிட்டுக் கொண்டு வருபவர்கள் மட்டுமல்ல; நான் அழுத குரலிலே கேட்கிறபோது—நான் குற்றுயிராக இருக்கின்ற நேரத்திலே 'உங்கள் இன்னுயிரைத் தர வேண்டும்' என்று கேட்கின்ற நேரத்தில்—தமிழகத்திலே பல்லாயிரக் கணக்கான வாலிபர்கள் தாய்த் திருநாட்டை மீட்பதற்கு உயிரைத் தருவதற்கும் தயாராக இருக்கிறார்கள்!

அல்ஜீரிய, டுனீசிய நாடுகளின் விடுதலைக் கிளர்ச்சிகளைப் பற்றி அறிவீர்கள். அதைப்போலவே "தென்னகத்தாராகிய நீங்கள் ஒரு புரட்சி நடத்தினால்தான் உங்களை மதிப்பேன்" என்று நேரு பண்டிதர் சொன்னால்—இந்திய சர்க்காரும் ஓர் அறிக்கை விட்டால்—இவர்கள் 1942—ல் எத்தனை ரயில்களைக் கவிழ்த்தார்களோ, அதைப்போல் பத்து மடங்கு ரயில்களைக் கவிழ்த்துக் காட்ட முடியும்!

"நாங்கள் ரயில்களை மட்டும் கவிழ்த்தோமில்லை; துப்பாக்கிக் குண்டுக்கு மார்பு காட்டினோம்" என்று அவர்கள் சொன்னால், அப்படிப்பட்ட தோழர்கள் மட்டுமல்ல; அதைவிட வீர உணர்ச்சி படைத்த தோழர்கள் மட்டுமல்ல; அன்று உங்களோடு இருந்த தோழர்களிலேயே நூற்றுக்கு இருபது பேர் இப்போது திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கின்றார்கள் என்ற உண்மையை ஆட்சியாளர் உணர வேண்டும்! வேட்டு முறையிலே எனக்கு விருப்பம் வந்து விட்டது; திராவிட முன்னேற்றக் கழகம் பலாத்காரத்தை நாடுகிறது-என்று யாரும் தப்புக் கணக்குப் போட வேண்டாம்.

பலாத்காரத்திற்குத்தான் நான் மதிப்பு அளிப்பேன் என்று இந்திய சர்க்கார் சொன்னால் — ரத்தத்தைப் பார்த்தால்தான் எனக்கு விஷயம் புரியும் என்று நேரு பண்டிதர் சொன்னால் —இரத்தத்தைக் கொட்டுவதற்கும், தியாகத் தழும்புகளை ஏற்றுக் கொள்வதற்கும்—வீர மகனைத் தருவதற்குத் தாய்மார்களும் தமிழ்நாட்டிலே தயாராகி விட்டார்கள்!

அவர்கள் பழைய தமிழ் இலக்கியத்தைக் காதாரக் கேட்டு, நெஞ்சாரப் பதிய வைத்து, தாங்கள் ஒரு வாழ்ந்த இனம் என்பதை இன்று நன்றாகத் தெரிந்து கொண்டு விட்டார்கள்!

ஈராயிரம் ஆண்டு காலத்திற்கு முன்னாலே—உலகத்திலே இருள் சூழ்ந்திருந்த நேரத்திலே— தமிழகத்தில் ஒளி இருந்தது என்பதைத் தெரிந்து கொண்டு விட்டார்கள்! உலகத்தில் எழு

தவோ, படிக்கவோ மக்கள் முயற்சி செய்து கொண்டிருந்த நேரத்தில், தமிழகத்துப் புலவர்கள், இன்று படித்தாலும் நன்றாகப் பொருள் புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு மிகத் தூய்மையான தமிழில்—மிக அழகான, ஆழ்ந்த கருத்துக்களை தொல்காப்பியத்திலேயும், அகத்திலேயும் புறத்திலேயும், பத்துப் பாட்டிலேயும் எட்டுத் தொகையிலேயும், இவைகளை யெல்லாம் உள்ளடக்கியதைப்போலக் காட்சியளிக்கின்ற திருக்குறள் மூலமாகவும் தமிழகத்திற்குத் தந்திருக்கிறார்கள்!

இன்றைய தினம் நம்முடைய வாணிபம் சீரழிந்து கிடக்கிறது! நம்முடைய விவசாயம் வாட்டத்தையும் வருத்தத்தையும்தான் விளைவாகத் தருகிறது! நம்முடைய வாலிபர்கள் முதுகு வளைந்தவர்களாகக் காணப்படுகிறார்கள்! தாய்மார்களில் பலபேர் தற்குறிகளாக இருக்கின்றார்கள்! நம்முடைய நாட்டு வளம் அத்தனையும் வட நாட்டுக்குத்தான் பயன்படுகிறது!

இன்றைய தினம் நீராவிக் கப்பல்கள், தமிழனை—நம் உடன் பிறந்தானை—காவிரிக் கரையிலே உலவிக்கொண்டிருப்பவனை — ஒரு கவளம் சோற்றுக்காக இலங்கைக்கும், சாவகத் தீவிற்கும், போர்னியோவிற்கும், மலேயாவிற்கும், ஜான்சிபாருக்கும் சுமந்து கொண்டு செல்கிறது!

இந்த வெட்கக் கேடான நிலைகண்டு நம் விழிகள் குளமாகின்றன. ஏனெனில் நம்முடைய மூதாதையர்கள் மடியிலே முத்தையும், நெஞ்சத்திலே தமிழ்ப் புலமையையும், கண்களிலே வீரத்தையும் தாங்கிக் கொண்டு, யவன நாட்டுக் கடை வீதிகளிலே இறங்கி, தன்னுடைய நாட்டிலேயிருந்து கொண்டு வந்த முத்துக்களைக் காட்டி—நாட்டுப் புலமையை எடுத்துச் சொல்லி—வீரத்தை விளக்கி-விருதுகள் பெற்றுத் திரும்பினார்கள்.

கதரை எவ்வளவு கனமாக உடுத்தி இருந்தாலும், கைராட்டினத்தை எத்தனை ஆண்டு காலம் சுற்றியிருந்தாலும், காந்தியார் படத்தின் முன்னால் எத்தனை தடவை கன்னத்திலே போட்டுக் கொண்டிருந்தாலும், நேரு பண்டிதர் நிற்கின்ற திக்கு நோக்கி தண்டம் இடுகின்ற அளவிற்கு உள்ளவர்களானாலும், அந்தக் காங்கிரஸ் காரர்களேதான் ஒரு கணம் யோசிக்கட்டுமே! நாம் எந்த இனத்திலே பிறந்தோம்? எப்படி எப்படி யெல்லாம் வாழ்ந்தோம்? இன்றைய தினம் எந்த நிலையிலே இருக்கிறோம்? இந்த வினாக்களுக்கு விடையாக நம் வீர வரலாற்றின் ஒரு துணுக்கை மட்டும் மனதிலே பதிய வைத்துக் கொள்வார்களேயானால், நம்மை விலக்கிவிட்டு முன் வரிசையிலே வந்து உட்காரத்தான் செய்வார்கள்!

இது கனிகின்ற காலம் என்றுதான் நான் கருதுகிறேன் அதற்குக் காரணம் ஒருபுறம் வளர்ந்து கொண்டிருக்கிறோம் என்பது மட்டுமல்ல; அதைப் போலவே மற்றொரு புறத்திலே அடைய வேண்டிய அளவிற்கு மிக வளர்ச்சி அடைந்த காங்கிரஸ் இன்றைய தினம் தளர்ச்சி நிலைபெற்று-தாங்க முடியாத நோய் பீடிக்கப்பட்டு — சரிந்து வீழுகின்ற நிலைமைக்கு ஆளாகி விட்டது!

நம்முடைய கரங்களிலே வலிவு ஏறி வருகிறது: மாற்றாருடைய கரங்களில் வலிவு குறைந்து வருகிறது!

நம்முடைய இரத்தத்திலே சூடு ஏறிக் கொண்டிருக்கிறது: மாற்றாருடைய இரத்தத்திலே சூடு ஏறாதது மட்டுமல்ல: இரத்தம் கட்டிக்கொண்டிருக்கிறது!

நம்முடைய நாடி நரம்புகளில் நல்ல முறுக்கேறியிருக்கிறது; மாற்றாருடைய நாடி தளர்ந்து சோர்ந்து விட்டது!

நம்முடைய கண்களிலே நல்ல கனிவும், நல்ல ஒளியும், நல்ல நம்பிக்கையும் வீசிக் கொண்டிருக்கிறது; அவர்



இத்தகைய அலங்கார ரதங்கள் ஊர்வலத்தில் ஏராளம்!

களது கண்களில் நம்பிக்கைக் குறைந்து வருகிறது!

நாம் வளருகிறோம் என்பது நமக்குப் புரிகிறது; அவர்கள் கெடுகிறார்கள் என்பது அவர்களுக்கே நன்கு தெரிகிறது!

தேபர் சொல்லுகிறார், 'காங்கிரசில் ஊழல் மலிந்து விட்டது. அதைக் கலைத்து விடுவது மேல்' என்று. நேரு பண்டிதரும் சொல்லுகிறார், "நான் போய்விட்டால் நாட்டிலே தொல்லைகள் நேரிடும் என்பது உங்களுக்குத் தெரிகிறது; என்றாலும் இங்கே இருந்து மனம் புழுங்குவதைவிட நான் கொஞ்ச நாளைக்கு வெளியே போய் இருக்கிறேன்!" என்று.

ஆனால் இருவரும் சேர்ந்து உண்மையான குற்றங்கள் எவை; உண்மையான ஊழல் எங்கேயிருக்கிறது—என்பதைச் சொல்லவில்லை.

நான் இந்த மாநாட்டின் மூலமாக காங்கிரஸ் தலைவர் தேபர் அவர்களுக்கு ஒன்று சொல்லுவேன்; உங்களுடைய காங்கிரஸ் கட்சிதான் இன்றைய தினம் டெல்லி செங்கோட்டையிலே கொடி பறக்க விட்டிருக்கிறது — பாராளுமன்றத்திலே கொலு வீற்றிருக்கிறது. அதனிடத்திலே ஆண்டு ஒன்றுக்குத் தரப்படுகிற வரிப் பணம் ரூ. 400 கோடி ரூபாய்! அதைப்போல் சென்னை மாநிலத்தைப் பொறுத்தவரை கணக்குப்படி ரூ. 63 கோடி இந்த ஆண்டிலே வரியாகக் கட்டியிருக்கிறோம்.

இவ்வளவு பெரும்பாலான தொகையை வாங்கி வைத்துக்கொண்டிருக்கிற ஒரு காங்கிரஸ் கட்சி தங்களுடைய மாநாடு நடத்தி — கமிட்டி கூட்டம் ஒன்று நடத்தி "எங்களிடத்திலே லஞ்சம் மிகுந்து விட்டது; ஊழல் மலிந்துவிட்டது!" என்று சொன்னால் என்ன பொருள்? தொட்டுத் தாலி கட்டிய கணவனை கன்னத்திலே அடித்து, "பைத்தியமே! நேற்று இரவு நான் எங்கே போயிருந்தேன் தெரியுமா?" என்று எந்த மனைவியும் கேட்கமாட்டாள். கேட்பவளை எந்தக் கணவனும் மனைவியாக ஏற்றுக்கொள்ளவும் மாட்டான்.

அத்தகைய காங்கிரஸ் கட்சி இன்று நாட்டை ஆண்டு கொண்டிருக்கிறது என்றால், நாட்டு மக்களுடைய வரிப் பணம் மட்டுமல்ல; தன்மானம்; வீர உணர்ச்சி; எதிர்காலம்--எல்லாமே எந்த அளவிற்குப் பாழாக்கப்பட்டு வருகிறதென்பதை உணர வேண்டும்!

பணப் பெட்டியை ஊழல் நிறைந்தவர் கையிலே கொடுத்துவிட்டு, ஆறு இல்லையே; பாலமில்லையே; பள்ளிக்கூடமில்லையே — என்று அங்கலாய்த்துக் கொண்டால் அதிலே பயனில்லை!

ஆகையினால் இங்கே காணப்படுகின்ற இந்த ஆர்வத்தை-உணர்ச்சியைப்பதப்படுத்தி—பக்குவப்படுத்தி — அடுத்தத் தேர்தலில் தஞ்சைத் தரணியை மட்டும் பொறுத்தவரை "நாம் ஐந்து எம். எல். ஏ.க்களைப் பெற்றிருக்கின்றோம்" என்று பட்டியல் காட்டினால், தமிழ்நாடே ஆச்சரியத்தால் அகலக் கண்களை விரித்துப் பார்க்கும்.

நம்முடைய கழகத் தோழர்களுக்கும், காங்கிரஸ்காரர்களுக்கும் ஒரு வித்தியாசம் இருக்கிறது. அதை நான் ஏதோ குறைசொல்கிறேன் என்று யாரும் எண்ணிவிட வேண்டாம்.

நமது கூட்டங்களிலே பல்லாயிரக் கணக்கான மக்கள் கூடுகின்றீர்கள். தேர்தல் காலத்திலேயும் நிச்சயம் ஓட்டளிப்பீர்கள். ஆனால், ஓட்டளிக்கவேண்டுமென்று கருதுகிற நீங்கள், "ஓட்டு அளிக்கலாமா? கூடாதா?" என்ற ஐயப்பாட்டோடு இருக்கிறவர்களிடத்திலே உரையாடி-அவர்கள் உள்ளத்திலே தெளிவு ஏற்படுத்தி — சந்தேகம் இருந்தால் அதை நீக்கி-அருவருப்பு இருந்தால் அதைப் போக்கி—அவர்களையும் நம் பக்கத்தில் அழைக்கின்ற வேலையை இனி தொடர்ந்து செய்யவேண்டும்! இப்போது செய்வதைவிட இன்னும் கொஞ்சம் தீவிரமாகவே செய்யவேண்டும்!

காங்கிரஸ்காரர்களது கூட்டங்களில் ஆயிரம் பேர், ஐநூறு பேர் வந்தால் தலைவர்களே மலைத்துப் போகிறார்கள், இவர்களெல்லாம் எங்கிருந்து வந்தார்கள் என்று! அவ்வளவு சிறிய கூட்டம் அங்கு கூடினாலும் வருகின்ற ஒவ்வொருவரும் ஐம்பது பேருக்கு—நூறுபேருக்கு ஓட்டுகளை வாங்கிக் கொண்டு வருகிற பெரும் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறார்கள். அதற்கான முறையில் அவர்கள் உழைக்கிறார்கள்!

தேர்தலைப்பற்றி நான் சொல்லுகிற இந்த நேரத்தில், மதிப்பிற்குரிய திராவிடர் கழகத் தோழர்கள் நம்மைப் பற்றிப் பேசுவதை மறந்து விட்டுப் பேசவில்லை. அவர்கள் சொல்லுகிறார்கள், தேர்தலிலே வெற்றி பெற்றால் திராவிடநாடு கிடைத்துவிடுமா—என்று.

திராவிடநாடு கிடைப்பதற்கு அதுவும் ஒரு வழி என்றுதான் நாம் சொல்லுகிறோம். அது எப்படி சாத்தியமாகும் எனக் கேட்பதானாலும், அந்த வழியைச் சொல்லுகிறேன். இன்று பதினைந்து பேராக இருக்கின்ற நாங்கள் அடுத்த முறை சட்டசபைத் தேர்தலிலே நூறு பேராகச் செல்லுகிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். காங்கிரஸ் கட்சி அந்த அளவிற்கு வராமல், கவர்னர் நம்முடைய கட்சிக்காரர்களைக் கூப்பிட்டு, "நீங்கள்தான் மெஜாரிட்டியாக வந்திருக்கின்ற கார

ணத்தால் அமைச்சரவையை நீங்களே ஏற்படுத்துங்கள்!" என்று சொல்லுவார்.

நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் பொதுச் செயலாளர் என்ற முறையிலே கவர்னரிடம் போய்ப் பேசி, "நாங்கள் அமைப்பதிலே அட்டியில்லை. ஆனால் நாங்கள் உள்ளே வந்ததும் நிறைவேற்றுகின்ற முதல் தீர்மானம் வடநாட்டுத் தொடர்பிலேயிருந்து—டெல்லி ஆட்சியிலேயிருந்து இந்த நாடு விடுபட வேண்டும் என்பது தான்!" என்று சொல்லுவார்.

"அப்படித் தீர்மானம் நிறைவேற்றுவதற்கு சட்டத்திலே இடமில்லையே!" என்று அவர்கள் சொன்னால், "அதற்கு இடமிருக்க வேண்டும்; சட்டத்தை மாற்ற வேண்டும் — என்ற தீர்மானத்தைக் கொண்டு வருவோம்!" என்பார் நாவலர்.

"செய்யுங்கள், பார்க்கலாம்!" என்று கவர்னர் அனுமதியளிப்பார். உள்ளே சென்று நாம் உட்கார்ந்து, நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் பழைய காலத்து மாமன்னர்களைப்போல் எழுந்து நின்று, பன்னெடும் காலமாக ஈடும் எடுப்புமாக வாழ்ந்து வந்த தமிழகம் இன்றைய தினம் வடவருடைய கரத்திலே சிக்கிக் கொண்டிருக்கிற கொடுமையை விளக்கி, இந்த நிலையை இனியும் நீடிக்க விடமாட்டோம் என்று கூறி, "ஆகையால் இந்த வினாடி முதல் நாங்கள் டெல்லி ஏகாதிபத்தியத்திலேயிருந்து விடுபடுகின்றோம்" என்று சொல்வார். ஆனால், உடனே கவர்னர் நாம் அமைக்கின்ற மந்திரி சபையைக் கலைத்து விடுவார்.

அப்படிக் கலைத்தவுடனே என்ன நடக்கும்? என்னுடைய மனக் கண்களிலே அதிகமான கோட்டைகளைக் கட்டுகிறேன் என்று காங்கிரஸ்காரர்கள் எண்ணக்கூடும். ஆனால், இந்தக் காட்சிகளைப் பார்க்காமல் நாங்கள் யாரும் சாக மாட்டோம்! அப்படி எங்களிலே யாராவது பலகீனத்தால் செத்தாலும், இதைப் பார்ப்பதற்கு ஏற்ற நல்ல கண்களை வைத்து விட்டுத் தான் சாவோம்! நாம் அமைக்கின்ற மந்திரி சபையைக் கலைத்து விட்டபின் கொஞ்ச காலத்திற்கு கவர்னர் ஆட்சி நடக்கும். ஆனால் உலகத்தினுடைய கண்களுக்கு முன்னாலே கடைசி வரை கவர்னரே ஆள முடியாது. மறுபடியும் ஒரு தேர்தல் நடத்தியாக வேண்டும். அந்த மறு தேர்தலிலே நூறு பேர் நூற்றியிருபது பேராக மாறும். சென்ற தடவை நாவலர் நெடுஞ்செழியன் எழுந்து நின்று சொன்னதற்குப் பதிலாக, இம்முறை காலின்மேல் காலைப் போட்டு, சபாநாயகரைத் திரும்பிப் பார்த்து, "எழுதிக் கொள்ளுங்கள்; நாங்கள் டெல்லியிலேயிருந்து விடுபட இருக்கின்றோம்!" என்று சொல்ல—

பிறகு மறுபடியும் வெளியே துரத்த — மறுபடியும் பொதுத்தேர்தல் வரட்டும்! இப்படி இந்த அரசியல் ஊஞ்சல் எத்தனை காலம் நடத்த முடியும்?

அதற்குப் பின் தமிழ் நாட்டில் வட நாட்டுப் பட்டாளத்தை வைத்துக் கொண்டு தான் வரிகள் வாங்க முடியும். அந்த நேரத்திலே நாங்களும், நீங்களும், மற்றவர்களும் வரி கட்டாதே என்று சொன்னால் 'நிலத்தை எடுப்பேன்' என்பார்கள். நாட்டிலே உள்ளவர்கள் எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர ஆரம்பித்தால், அந்த நிலத்தை யார் ஏலத்தில் எடுப்பார்கள்?

குஜராத் மாகாணத்தில் சர்தார் படேல் வரிகொடா இயக்கத்தைத் துவக்கிய நேரத்தில், மகாத்மா காந்தி கேட்டார், "நீங்கள் நிலவரி கட்ட வேண்டாம் என்று சொன்னால், வெள்ளைக்காரர்கள் நிலத்தை ஏலம் போடுவார்களே!" என்று! அதற்கு "நிலத்தைத்தான் ஏலம் போடுவார்களே தவிர; பெயர்த்து சீமைக்கா எடுத்துக் கொண்டு போவார்கள்? பார்க்கிறேன், ஒரு கை!" என்றார் படேல்.



தலைவர்களின் உருவப் படங்கள் ஊர்வலத்தின் அழகை அதிகப்படுத்தின!

அப்படிப்பட்ட 'சர்தார் படேல்கள்' தமிழகத்தில் இல்லையென்று டெல்லியிலே உள்ளவர்கள் கருதுவார்களேயானால் நிச்சயம் ஏமாற்றமடைவார்கள்!

மேற்சொன்ன நிலைமையில், பத்து ஆண்டு காலம்—பதினைந்து ஆண்டு காலம் இரண்டு மூன்று தேர்தல்கள் நடந்தால், வடக்கே உள்ளவர்கள், இதை இனி கட்டி மேய்க்க முடியாது என்று தெரிந்து, அவர்களாகவே பஞ்சாயத்துக்கு வருவார்கள்.

அப்படி எங்காவது நடக்கிறதா என நீங்கள் என்னைக் கேட்கலாம். நான் பழைய வரலாற்றை உங்களிடத்திலே சொல்ல வரவில்லை; ஒரு மாதமாக நடைபெற்று வருகின்ற நிகழ்ச்சி ஒன்றைக் குறிப்பிடுகிறேன்! சின்னஞ்சிறு தீவு ஒன்று இருக்கின்றது — மால்ட்டா என்பது அதன் பெயர். அதனுடைய மொத்த பரப்பளவு 124 மைல் என்று வரலாற்றிலே குறிக்கப் பட்டிருக்கிறது! அதிலுள்ள மக்கள் தொகை சில லட்சம்தான்! அந்த மால்ட்டா தீவு இன்றைய தினம் இங்கிலாந்து நாட்டினிடத்திலே பிடிபட்டிருக்கின்றது. இங்கிலாந்து நாட்டினுடைய கப்பல் தளவாடங்கள் அந்தத் தீவிலே தான் இன்றைய தினம் மிக மகோன்னதமான முறையிலே அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தீவிலே ஒரு தொழிற் கட்சி இருக்கிறது. அந்தத் தொழிற் கட்சியினுடைய தலைவர் பெயர் மின்டாஸ் என்பது.

அவருடைய கட்சிக்காரர்கள் மால்ட்டாவிலிருக்கிற பாராளு மன்றத்தில் 23 பேர்கள் இருக்கிறார்கள். மால்ட்டா பாராளு மன்றத்தின் மொத்த உறுப்பினர்கள் முப்பதிலிருந்து நாற்பதிற்குள்தான். ஆகையினால் இருபத்தி மூன்று பேர்களாக இருக்கின்ற அவர்களால் ஆட்சி அமைக்கப்பட்டு, மின்டாஸ் முதன் மந்திரி ஆக்கப்பட்டார்.

முதன் மந்திரியான உடனே "இங்கிலாந்து நாட்டின் பிடியில் மால்ட்டா இருக்கிறது. அப்படி இருந்தாலும்கூட இங்கிலாந்து நாட்டின் எழில், நாட்டின் வளம், கிடைக்கின்ற ஊதியம் என்னுடைய தீவிற்குக் கிடைக்கவில்லை. அவைகளை எல்லாம் நீங்கள் செய்வீர்களா? இல்லையானால் மால்ட்டா தனியாகப் பிரிகிறது என நான் பிரகடனப்படுத்தட்டுமா?" என்று கேட்டார்.

மால்ட்டா தீவு கேட்டது என்றால் அதற்கு என்ன பொருள்? திருவாரூரிலேயிருந்து மாயவரம் வரையிலுள்ள ஒரு வட்டாரம் கிளம்பி "நாங்கள் தனி நாடு அமைக்கிறோம்" என்று சொன்னால் எப்படியோ, அந்த அளவிற்குத்தான் மால்ட்டா தீவு இருக்கிறது.

வெள்ளைக்கார நாட்டிலிருந்து அங்கு அனுப்பப்பட்ட கவர்னர், மின்டாசை வரவழைத்து "பிரிந்து போகவேண்டுமென்று தனியரசு கேட்கிறாயாமே! அப்படியானால் உன்னை சீமைக்கு அழைக்கிறார்கள். அங்கே போய் பேசிவிட்டு வா!" என்று சொன்னார்.

மின்டாஸ் சீமைக்குச் சென்றார். அங்கே இருக்கின்ற வெளி விவகார மந்திரி இரண்டு மூன்று நாட்கள் கனிவாகப் பேசி, "நீ எவ்வளவு பணம் கேட்கிறாயோ உடனே தருகிறோம்; பிரிந்து போகாதே! தனியரசு கேட்காதே!" என்றெல்லாம் சொன்னார். அதற்கு மின்டாஸ், கேட்கின்ற அளவிற்குக் கொடுத்தால் ஒழிய ஒப்புக்கொள்ள மறுத்தார்.

"நீ கேட்கின்ற அளவிற்கு எங்களிடத்திலே பணமில்லை" என்று பிரிட்டிஷ் மந்திரி கெஞ்சிப் பார்த்தார். கடைசிவரையிலே பலிக்காத காரணத்தால், மின்டாஸ் மால்ட்டா தீவிற்கு வந்து, பார்லிமெண்டிலே மால்ட்டா இங்கிலாந்து ஆட்சியிலேயிருந்து விலகி தனி நாடாக விரும்புகிறது — என்ற தீர்மானத்தை நிறைவேற்றினார். உடனே கவர்னர் அழைத்து, "தனி நாடானால் என்ன கதி நேரிடும் தெரியுமா உனக்கு? மறு வாரமே ரஷ்ய நாட்டுக்காரர்கள் இந்தத் தீவிலே வந்து உட்கார்ந்து விடுவார்கள்!" என்று மிரட்டினார்.

"எனக்கென்ன அதிலே அச்சம்? உங்கள் நாட்டிற்கு பக்கத்திலே இருக்கிறது மால்ட்டா. அப்படி ரஷ்யர்கள் வந்தால், இங்கிலாந்துக்குப் பக்கத்திலேயே வந்தவர்களாவார்கள். அது உங்களுக்கு நிச்சயம் பிடிக்காது! நீங்களே வந்தல்லவா துரத்துவீர்கள்! ஆகவே அது பற்றிய கவலை எனக்கில்லை. நான் கேட்கிற அளவிற்குப் பணம் கொடுக்க முடியுமா?" என்று மின்டாஸ் கேட்டார்.

அத்தகைய மிகச் சின்னஞ்சிறு தீவு பிரிந்து செல்லுவதாகச் சொல்லிவிட்டது. அது மட்டுமல்ல; மறுபடியும் மறுபடியும் எத்தனை முறைகள் தேர்தல் வைத்தாலும் அந்தத் தொழில் கட்சியேதான் வெற்றி அடையும்,

மால்ட்டா போன்ற சிறிய தீவுகளில் அத்தகைய நிலைமை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்றால், பார் புகழும் பண்புகள் பெற்ற நாம முயற்சி எடுத்துக்கொண்டால் — நம்மை நாமே அறிந்துகொண்டால்— நான் குறிப்பிட்ட நிலைமைகள் ஏன் இங்கு ஏற்பட முடியாது?

நீங்களும் நானும் திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கொட்டும் மழையில் ராயபுரத் திடலில் ஆரம்பித்த நேரத்தில், சம்பத் டெல்லிக்கு அனுப்பப்பட்டு, நேரு பண்டிதருடைய கண்ணுக்கு எதிராக உட்கார்ந்து, அவ

ரது காது கேட்கும்படியாக "நாங்கள் திராவிட மக்கள்! நாங்கள் தனியாகப் பிரிந்து போக விரும்புகிறோம்! இந்தி ஏகாதிபத்தியத்தை விரும்போம்!" என்று உரிமை முழக்கமிடுவான் என்றும், அது பத்திரிகைகளிலே வரும் என்றும், அதை யெல்லாம் பார்ப்போம் என்றும் என்றாவது எண்ணியிருக்க முடியுமா? நடைபெற்றதே அந்தக் காட்சி!

ஓட்டு பெறாவிட்டால் இந்த நிலைமை வந்திருக்க முடியுமா?

எப்படி குழந்தைகள் பிறந்தால் அவைகளுக்கு ராமா, கிருஷ்ணா என்று பெயர் வைத்து, அவைகளை அழைக்கின்ற நேரத்திலாவது அது ஆண்டவன் காதிலே விழாதா என்று பக்தர்கள் கருதுகிறார்களோ, அதைப்போலவே நாங்கள் சொல்வது காதில் விழுந்தாலும் விழாவிட்டாலும் 'திராவிடநாடு திராவிடருக்கே' என்று தினந்தோறும் சட்ட சபையில் சொல்லித்தான் வருகிறோம்.

குடகனாறு திட்டம்பற்றி கருணாநிதி பேசினால், அதன் நீள அகலத்தைச் சொல்லி, அதனால் எவ்வளவு நன்மை இருக்கிறது என்று விளக்கி, கடைசியில் "இதெல்லாம் திராவிடநாடு திராவிடருக்கானால் நடக்கும்!" என்று சொல்லி விட்டுத்தான் உட்காருகிறார்.

ஆகவேதான் பலனில்லை என்று சொல்லுகின்ற திராவிடக் கழகத் தோழர்கள் தயவு செய்து இப்போது செல்லுகின்ற பாதையிலிருந்து சற்று விலகி, அடுத்த பொதுத் தேர்தலுக்கு நில்லுங்கள். நீங்கள் நிற்கிற இடத்திலே நாங்கள் போட்டியிடவில்லை. போட்டியிடாதது மட்டுமல்ல; நீங்கள் எங்களுக்கு நடத்திக் காட்டியதை மறந்தும் உங்களுக்கு நாங்கள் நடத்திக் காட்ட மாட்டோம். உங்கள் வெற்றிக்கு நாங்களும் பாடுபடுகிறோம். உள்ளே வாருங்கள். 'திராவிட நாடு திராவிடருக்கே' என்று சொல்லுங்கள். திராவிடத்தின் வளங்களை எடுத்துச் சொல்லும் போது, உங்களுக்கு திருப்தி ஏற்பட்டால், 'இத்தனை வளங்களையும்விட காமராசர் என்ற ஒரு வளமும் இருக்கிறது' என்று சொல்லுங்கள். திருவாரூர் திராவிடர் கழக வாடை அதிகமாக இருப்பதாக நம்பிக் கொண்டிருக்கிற காரணத்தால் இந்த நல்ல சேதியை அவர்களுக்குச் சொல்லுகிறேன். ஏன் கருணாநிதி மட்டும் 'கலைஞர் கருணாநிதி எம். எல். ஏ.' என்று இருக்க வேண்டும்? ஏன் அந்தப் பெயருக்குப் பின்னால் இருக்கின்ற மூன்று எழுத்துக்கள் உங்களுக்கும் தேவையில்லை என்று கருதவேண்டும்? எழுத்துக்கள் அல்ல முக்கியம்! அவைகளின் உதவி கொண்டு சட்ட மன்றத்திலே வந்து சொல்லுகின்ற பேச்சுக்களைத் தான் உலகம் மதிக்கிறது; கவனிக்கிறது!

திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் என்று பேதம் காட்டுவதில்லை, நான். பிறந்த இடத்திலே பெருமை இருந்தால் தான், வாழுகின்ற இடத்திலே பெருமை இருக்க முடியும் என்பதை நான் உணர்ந்திருக்கிறேன். பெற்ற பிள்ளையைத் தூற்றினால் தகப்பனுக்குத்தான் ஏச்சு வருமென்பதை பெரியார் என்னவோ தெரிந்து கொள்ளவில்லை! அது ஒன்றுதான் எனக்கும் அவருக்கும் வித்தியாசம்!

நான் படித்த பள்ளிக்கூடம் சிலாக்கியமானது; நான் கண்ட தலைவர் சிலாக்கியமானவர்; இடைக் காலத்தில் அவர் யார் யார் கிடைத்தார்களோ அவர்களுக்குத் தலைவராகி; எந்த எந்த சீடர்கள் கிடைத்தார்களோ அவர்களுக்கு ஏற்றவாறு தனது சுபாவத்தை மாற்றிக் கொண்டார்!

அப்படி சட்ட மன்றத்திலே எழுப்பப்படுகின்ற நம்முடைய திராவிட நாட்டுப் பிரச்சினைக்கு இன்றைய தினம் காங்கிரஸ்காரர்கள் சொல்லுகின்ற மறுப்புகளில் 'திராவிடம் சின்னஞ்சிறு நாடு; ஆகவே தனியாக இருக்க முடியாது'—என்பது ஒன்று! அதற்கு மட்டும் நான் இரண்டொரு மேற்



அறிஞர் அண்ணாவுடன், நாயன விருந்தளித்த இசைப்பெருங்கோ குளிக்கரை பிச்சையப்பாவும், மாநாட்டுத் தலைவரும்!

திகைப்பும் நகைப்பும்!

திருவாரூர் மாநாட்டின் இரண்டாம் நாள் காலை நிகழ்ச்சி துவங்கி நடைபெற்றுக் கொண்டிருந்தது. அன்று காலையில் திருவாரூர் வந்து சேர்ந்த 'நம்நாடு' பொறுப்பாசிரியர் காஞ்சி கல்யாணசுந்தரனார் அவர்கள், மாநாட்டு மேடையருகில் சொல்லின் செல்வர் சம்பத் அவர்களிடம் டெல்லி அனுபவங்களை சுவைபடக் கேட்டு ரசித்துக் கொண்டிருந்தார்.

அப்போது மேடையை நோக்கி வந்து கொண்டிருந்த ப. உ. சண்முகம் எம். எல். ஏ. அவர்களைக் கண்ட கல்யாணசுந்தரனார் "வாங்க ப. உ. ச.! இப்பத்தான் வர்ரீங்களா?" என்று வினவினார். சுற்றி நின்ற அனைவரும் 'கொல்'லென்று சிரித்தனர். கல்யாணசுந்தரனார் திகைத்தார், சிறிது நேரம்.

அதற்குள் அருகிலிருந்த சம்பத் அவர்கள், சிரித்துக்கொண்டே "மாநாட்டைத் திறந்தவரே அவர்தானே!" என்றார்.

உடனே ப. உ. சண்முகம் அவர்கள் "மாநாட்டைத் திறந்தவன் நான்—மூடியவர் சம்பத்!" என்றார் சிரிப்புடன்.

மீண்டும் சிரிப்பொலி கிளம்பிற்று. கல்யாணசுந்தரனாருக்கு விபரம் புரியவில்லை.

"மாநாட்டுத் திறப்பாளர் சண்முகம்! முதல் நாள் மாநாட்டின் கடைசிப் பேச்சாளன் நான்!" என்று சம்பத் விளக்கமளித்தார்.

அப்பொழுதுதான் கல்யாணசுந்தரனாருக்கு எல்லாம் புரிந்தது; அவரும் உடன் சேர்ந்து சிரித்தார்.

—ராசன்,
சுப்பிரமணியபுரம்.

கோள்கள் காட்ட விரும்புகிறேன்.

"ஒரு நாட்டினுடைய முக்கியத்துவம் அதன் விஸ்தீரணத்திலே இல்லை; மக்களுடைய தொகையிலே இல்லை; ஆனால் மக்களுடைய உணர்ச்சியைப் பொருத்துத்தான் இருக்கிறது!

"அந்த நாடு 2,000 மைல் நீளமா; 200 மைல் அகலமா என்பதைப் பொறுத்து அதன் வலிவு இல்லை; யுத்த காலத்தில் வேண்டுமானால் அது முக்கியமானதாக இருக்கலாம்! சமாதான காலத்தில் மக்களுடைய மனப்பான்மை எப்படியிருக்கிறது; இயல்பு எப்படி இருக்கிறது என்பதைப் பொறுத்துத்தான் அந்த நாட்டின் முக்கியத்துவம் இருக்கிறது!"

—என்று ஒரு பேரறிவாளர் கூறி இருக்கிறார். அதுவும் காங்கிரஸ்காரர்கள் ஒப்புக்கொள்ளுகின்ற ஒரே ஒரு பேரறிவாளர் பண்டித நேரு தான் சொல்லியிருக்கிறார், ஐரோப்பா கண்டத்தில், ஹேப் என்ற ஊரில், சென்ற ஆண்டு, ஜுலை மாதம், 9—ம் தேதியன்று!

நாடு சிறியதாக இருந்தால் என்ன; மக்களுடைய மனப்பண்புதான் முக்கியம் என்று நேருவே சொல்லியிருக்கிறார்.

மற்றொன்று...

"சிறிய நாடாக இருக்கின்ற காரணத்தால் சர்வ தேச அரங்கத்தில் நன்மை கிடைக்காது--மதிப்பு இருக்காது என்று எண்ணுவது ஆபத்தானது; தோல்வி மனப்பான்மை காட்டத் தக்கது! அதை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன். உலகத்தைக் கட்டுப்படுத்தக்கூடிய தீர்மானங்கள் வருகின்ற நேரத்தில் சில நாடுகளை பெரிய நாடுகள் புறக்கணிப்பது பெரிய நாடுகளுக்கே ஆபத்தானது!"

—என்று பர்மாவின் முதல் மந்திரி யூ—நூ என்பார் சொல்லியிருக்கிறார்.

இந்த இரண்டு ஆதாரங்களையும் காட்டியான பிறகு வேறு என்ன மறுப்பு தர முடியும், காங்கிரஸ் தோழர்கள்? ஒன்று சொல்லலாம், நேரு நாட்டுப் பிரிவினையை ஒப்புக்கொள்ள மாட்டார் என்று! அதற்கும் நான் மேற்கோள் காட்டுகிறேன்:

"இந்திய பூபாகத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதி தனியாக விலகிப்போக வேண்டும் என்ற கோரிக்கை பல நேரத்தில் சொல்லப்படுகிறது. அந்த உரிமை வலியுறுத்தப்படுவதற்கு முன்னாலே இந்தியாவில் ஒரு சுதந்திர அரசு நன்றாக இயங்கிக் கொண்டிருக்க வேண்டும். வெளி ஏகாதிபத்தியம் முழுதும் விலகிய பிறகுதான் பிரிவினை பற்றிப் பேச நல்ல நேரம்! அப்போது தான் விருப்பு, வெறுப்பு இல்லாமல் பிரச்சினையைக் கவனிக்கலாம். அதற்கு ஒரு நாள்கூட குறிக்கலாம். சுதந்திர இந்தியாவாக ஆன பிறகு —பத்து ஆண்டுகள் கழித்து! அப்போது பிரிந்துபோக வேண்டிய உரிமை சட்டரீதியான முறையில், அந்தப் பகுதி மக்களின் விருப்பத்திற்கிணங்க பிரிந்து போகலாம்!"

—இதைச் சொல்லியிருப்பவரும் பண்டித நேரு தான்!

நேரு சொன்ன பத்தாண்டு காலம் கழித்து பதினொருவது ஆண்டு நடைபெறுகிறது. ஆகவே பிரிவினையைப் பற்றி பஞ்சாயத்துப் பேச இது நல்ல தருணம்! இதை நழுவ விடலாகாது! நேருவின் காலத்திலேயே கிடைத்திருக்கின்ற வாய்ப்பை இழந்து விடக் கூடாது! ஆகவே மதிப்பு மிக்க காங்கிரஸ்காரர்கள் இங்கு சொல்லப்பட்ட உண்மைகளைப் பலமுறை சிந்தித்துப் பார்த்து, பிரிவினைக்கு ஒத்துழைக்க அழைக்கிறேன்! அதற்கு நல்ல வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த தஞ்சை மாவட்ட மாநாட்டு வரவேற்புக் குழுவினருக்கு என் நன்றியை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்! வணக்கம். ஃ

பொதுச் செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன் உரை

திராவிட முன்னேற்றக் கழகம் எவ்வளவு பொலிவோடும், வலிவோடும் வளர்ந்து, காட்சியாகவும் மாட்சியாகவும் விளங்கி வருகிறது என்பதை இந்த மாநாடு ஒன்றே நாட்டுக்கு நன்கு எடுத்துக் காட்டுகிறது.

நேற்றைய தினம் மிகச் சிறப்பான ஊர்வலத்தையும் நடத்திக் காட்டி, இயக்க வரலாற்றிலே ஒரு நல்ல நிகழ்ச்சியைச் சேர்த்தீர்கள். ஊர்வலத்தின் இடையிலேயே திருவாரூரின் அருமைத் தோழர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரிய கருத்துக்களை நல்ல முறையில் பரப்புவதற்குப் பாசறை ஒன்று அமைக்க — கழகக் கட்டிடம் ஒன்றைக் கட்டுவதற்காக—கல் நாட்டும் பணியை எனக்களித்தார்கள். நான் உங்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன், ஏறத்தாழ 2,500 ரூபாய் பொறுமானமுள்ள அந்த மனையை நண்பர் கருணாநிதி அவர்கள் கழகத்திற்கு அளிக்க முன் வந்திருக்கிறார். மேலும், அந்தக் கட்டிடத்தைக் கட்டி முடிக்கின்ற குழுவுக்குத் தலைவராகவும் அவர் பொறுப்பேற்றிருக்கிறார்! திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எனது நன்றியையும் மகிழ்ச்சியையும் அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது நமது கூட்டங்களைத் தவிர்த்து, வேறு எந்தக் கூட்டத்தை நாம் பார்த்தாலும்; எந்த 'அகில உலக' ரீதிக்காரர்களின் கூட்டமாக இருந்தாலும் சரி; 'அகில இந்திய' வாதிகளுடைய கூட்டமானாலும் சரி; காந்தியார் பிறந்தநாள், இறந்த நாள், அவர் சிலைத் திறப்பு விழா, கண்காட்சித் திறப்பு விழா—எதுவாக இருந்தாலும் சரி; நம்மைப் பற்றி 'முக்காலே மூன்று வீச' நேரம் அர்ச்சனை புரிந்தால்தான் தங்கள் மன எரிச்சல் அடங்கும் என்று ஏசி வருகிறார்கள், மற்ற கட்சித் தோழர்கள்! ஆனால் அவர்களேதான் முன்பு நம்மை அலட்சியப்படுத்துவதின் மூலம் அழித்து விடலாம் என்றும் கருதினார்கள். இன்று அந்த முறை பலனளிக்கவில்லை! ஆகவேதான் இழித்தும் பழித்தும், தூற்றியும் ஏசியும், தாறுமாறாகப் பேசியும் மக்களுடைய கவனத்தைப் பாழாக்கலாம் என்று கருதுகிறார்கள்!

ஆனால், பந்து அடிக்க அடிக்க மேலே மேலே எழும்புவது போல், பூனை தாக்கத் தாக்கப் புலியாக மாறுவதுபோல், சந்தனம் அரைக்க அரைக்க மணப்பதுபோல், செம்பொன் சுடச் சுட ஒளி வீசுவது போல், வைரம் தீட்டத் தீட்ட ஜொலிப்பதுபோல்—திராவிட முன்னேற்றக் கழகம் குப்பைச் சொற்களால் தூற்றப் படத் தூற்றப்பட மேலும் மேலும் சீருடனும் சிறப்புடனும் வளர்ந்து கொண்டே போகிறது!

குப்பையிலே தூக்கி எறிந்து விடுவதின் காரணமாக கழகம் ஒழிந்துவிடும் என்று கருதுகிறார்கள். குப்பையிலே கிடந்தாலும் குண்டுமணி குண்டுமணிதான்! அந்தக் குண்டுமணியைச் சேற்றில் அழுத்தினாலும், குப்பையிலே போட்டாலும், கூளங்களுக்கு இடையிலே எறிந்தாலும் அது கெட்டுவிடாது! அதிலே சேறு ஒட்டாது; சகதி ஒட்டாது; குப்பை ஒட்டாது; தூசுகள் ஒட்டாது; அதனால்தான் சொன்னார்கள் முன்னோர்கள், குப்பையிலே கிடந்தாலும் குண்டுமணி குண்டுமணிதான் என்று! குண்டுமணியே திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொடியினுடைய அடையாளம்தானே!

மாற்றுக் கட்சித் தோழர்கள் ஏசினாலும், தூற்றினாலும், அந்தக் குண்டுமணிக்கு எடைக்கு எடை பவுன் மட்டுமேதான் நிற்குமே தவிர, வேறு எதுவும் நிற்காது!

பாசறையிலே கூடுகின்ற வீரர்கள் பழுதுபட்டக் கருவிகளைப் புதுப்பித்துக் கொள்வார்கள். புதுக் கருவிகளை ஏற்றுக் களத்திலே குதிப்பார்கள். அது போலவேதான் நீங்கள் இந்த மாநாட்டிலே கூடியிருக்கிறீர்கள்.

உலகத்திலே இருக்கின்ற சின்னஞ் சிறு நாடுகளுக்கு உள்ள வசதிகளிலே எந்த வசதி குறைவுடையதாக இருக்கிறது, நாம் கேட்கிற திராவி

டம்? எந்த வகையிலும் குறையில்லாத—பிணைக்கப்பட்ட ஒரு பரந்த நாட்டைத்தான் நாம் விடுவிக்க விரும்புகிறோம்! தவிர, நாம் கேட்பது பிரிவினை அல்ல; நாம் கேட்பது விடுதலையாகும்!

இந்த நாடு தன்னந் தனியாக இருந்தது என்பதற்கு சான்றுகளை வரலாற்று ஏடுகள் நல்ல முறையிலே எடுத்துத் தெரிவித்துக் கொண்டிருக்கின்றன.

பண்டித நேரு முதல் எந்த வடநாட்டுத் தலைவர் தென்னாட்டுக்கு வந்தாலும், பேசுகின்ற அத்தனை கூட்டங்களிலேயும் அகில இந்திய ஒற்றுமையினுடைய மேன்மையையும், அதனுடைய பெருமையையும் பேச வேண்டிய அவசியத்திற்கு வந்துவிட்டார்கள். அவர்கள் அகில இந்திய ஒற்றுமையைப் பேசுகிறார்கள். நாமோ, ஒன்றாக இந்தியா இருந்ததல்ல; ஒன்றாக வளர்ந்ததல்ல—என்று வாதிடுகிறோம், ஆதாரங்களின் மூலம்!

இந்தியா உலகம் தோன்றிய நாட்களிலிருந்து ஒன்றாக இருந்தது போலவும், ஒன்றாக வளர்ந்த நாடு போலவும், ஒன்றாக உறுதிபெற்ற நாடு போலவும், இதை இரண்டாக வெட்டிப் பிரிக்க நாம் விரும்புவது போலவும் நாட்டு மக்களிடத்திலே தவறாக எடுத்துக் கூறி வருகிறார்கள்.

அலெக்சாண்டர் படையெடுத்தபோது இந்தியா ஒன்றா? செலியூகஸ் நிகோட்டர் நுழைந்தபோது, செங்கிஸ்கான் வந்தபோது, மெகாஸ்தனிஸ் நுழைந்தபோது, தைமூர் படையெடுத்தபோது, பாபரின் சேனை நுழைந்தபோது, கோரி வந்தபோது, கஜினி முகமது 17 முறை படையெடுத்தபோது, போர்த்துக்கீசியர் வந்திறங்கிய போது, டச்சுக்காரர்கள் நுழைந்தபோது, பிரஞ்சுக்காரர்கள் அடியெடுத்து வைத்த போது, ஆங்கிலேயர் இங்கே பற்பல கோட்டைகளைக் கட்டிக்கொண்டு ஆளத் தொடங்கிய காலம் வரையில் இந்தியா என்பது ஒன்றா—என்று ஆயிரமாயிரம் மேடைகளிலே நாம் கேட்டிருக்கிறோம்.

இந்த நாட்டை சேர சோழ பாண்டியர்கள், குறு நில மன்னர்கள்தான் ஆண்டிருக்கிறார்கள். அவ்வளவு பெரிய அசோக சாம்ராஜ்யம் நெல்லூர் வரையிலும் தான் வரமுடிந்தது! ஹர்ஷ சாம்ராஜ்யம் விந்தியத்திற்குப் பக்கத்திலேதான்! ஔரங்கசீப் பின் ராஜ்யமும் அப்படித்தான்! அக்பர் ராஜ்யமும் தெற்கே நீண்டது கிடையாது!

அகில இந்திய பிணைப்பு பற்றிப் பேசுகிறார்களே; அந்த ஒற்றுமைக்கு எடுத்துக் காட்டு மதமா? அப்படியானால் ஒரே கிருத்துவ மதத்தைக் கொண்ட ஐரோப்பா 32 பிளவுகளாகப் பிரிந்து கிடப்பானேன்?

நாற்பத்தைந்து இலட்சம் மக்களைக் கொண்ட சுவிட்சர்லாந்து தனி நாடாக வாழ்கிறது—ஆனால் கடல் கிடையாது! நாம் கேட்கிற திராவிடத்திற்கு மூன்று புறமும் கடல் உண்டு!

நார்வே, ஸ்வீடனுக்குப்பக்கத்திலே உள்ள கடல் வருடத்தில் ஆறு மாதங்கள் பனிக் கட்டியாக உறைந்து கிடக்கும். கப்பல்களும் நின்றுவிடும். அந்த நாடுகள் இரண்டும்கூட இன்று தனியாகத்தான் வாழுகின்றன.

லக்சம்பர்க் மூன்றே மூன்று இலட்சம் மக்களைக் கொண்ட நாடு — தனியாக வாழ்கிறது! அகில உலக பிரச்சினைகளில் யோசனை சொல்கிற அளவுக்கு ஐக்கிய நாட்டு சபையிலே இடம் பெற்றிருக்கிறது!

ஆனால் நமது சென்னையின் ஜனத்தொகை மட்டும் கிட்டத்தட்ட பதினெட்டு இலட்சத்துக்கு மதிப்பிடுகிறார்கள்! தமிழகத்து மக்கள் எண்ணிக்கை மூன்று கோடி! திராவிடத்து மக்கள் எண்ணிக்கை ஒன்பதரை கோடி! எந்த வகையிலே குறைவுடையது திராவிடம்?

இரும்பே இல்லாத ஜப்பான் தனி நாடு! அது இன்று அகில உலகத்துக்குத் தேவையான எஞ்ஜின்களை — இயந்திரங்களை அமெரிக்காவைப் போல, பிரிட்டனைப் போல செய்து அனுப்புகிறது!

பருத்தியே விளையாத பிரிட்டன், உலகப் பிரசித்தி பெற்ற லங்காஷயர் துணிகளைச் செய்து உலகமெல்லாம் அனுப்புகிறது!

வெறும் ஊசியிலைக் காடுகளை மட்டுமே கொண்டிருக்கிற பின்லாந்து, வெறும் காகிதப் பூக்களை மட்டும் செய்து உலகத்திற்கு அனுப்பித் தனியாக வாழ முடிகிறது!

பாகிஸ்தான், வட இந்தியா— இவை பெற்றிருக்கிற கடற்கரைத் துறைமுகங்களைவிட நாம் கேட்கின்ற திராவிடத்திலே அதிகம்! விசாகப்பட்டிணம், ஜிங்கிலிப்பட்டிணம், பகுலிப்பட்டிணம், காக்கினாடா, சென்னை, பாண்டிச்சேரி, கடலூர், காரைக்கால், நாகை, தரங்கம்பாடி, தனுஷ்கோடி, தூத்துக்குடி, திருவனந்தபுரம், குளச்சல், கொச்சி, தலைச்சேரி, மங்களூர்—போன்ற இத்தனை துறைமுகங்களும் திராவிடத்திலே உண்டு! இவைகளிலிருந்து ஏற்றுமதி, இறக்குமதியின் மூலம் கிடைக்கின்ற வருமானம் மட்டும் 33 கோடி ரூபாயாம்! அந்தப் பணம் அப்படியே வாய்க்கால் வெட்டப்பட்டு, அதிலே ஓடி டெல்லியிலே போய் விழுகிறது!

தென்னகத்திலே மட்டும் இந்திய உற்பத்தியிலேயே தொண்ணூறு பங்கு காப்பிக் கொட்டை விளைகிறது—அதற்குப் போடுகின்ற வரி போய்ச் சேருகிற இடம் டெல்லி!

இலங்கைத் தேயிலையைவிட சிறப்பான தேயிலை அதிகமாக விளைகிற இடம் இங்கே—ஆனால் அவைகளுக்குப் போடுகிற வரி போய்ச் சேருகிற இடம் வடக்கே!

இந்தியாவிலேயே மிளகு ஏற்றுமதி செய்யப்படுகிற இடம் தெற்கேதான், ஆண்டு ஒன்றுக்கு 21 கோடி ரூபாய்க்கு— அதற்குப் போடுகிற வரி போய்ச் சேருகிற இடம் டெல்லி!

தெற்கே இருக்கிற ஏராளமான நெருப்புப் பெட்டித் தொழிற்சாலைகளின் மூலம் கிடைக்கிற வரிப் பணம் கிட்டத்தட்ட ஐந்தரை கோடி ரூபாய்— அது போய்ச் சேருகிற இடமும் டெல்லி கஜானா!

இங்கே தங்கம் விளைகின்ற கோலார் தங்கவயல் உண்டு; சேலத்திலே இரும்பு விளைகின்ற சேர்வராயன், கஞ்ச மலைகள் உண்டு; பத்ராஜலம் உண்டு; வெள்ளி விளைகிற பகுதிகளும் உண்டு; 'மைக்கா' ஆந்திரப் பகுதியிலே ஏராளம் உண்டு; 'மாங்கனீஸ்', 'பாக்னசைட்' உண்டு; அணுகுண்டு செய்வதற்குத் தேவையான 'யுரேனியம்', 'தோரியம்' போன்ற தாதுப் பொருள்கள் இந்த நாட்டுக் கடற்கரை மணலோடு சேர்ந்து கிடக்கின்றன!

ஏலக்காய், கிராம்பு, தேக்கு, ரப்பர், யானைகள் — இவைகள் எல்லாம் இங்கேதான்!

திராவிடத்தைச் சூழ்ந்திருக்கின்ற கடலிலே பெரும் சொத்தாம் மீன்கள் இருக்கின்றன. ஒரு ஏக்கர் நிலத்தில் விதை விதைத்து, அதன்மூலம் கிடைக்கின்ற பலனைவிட, ஒரு ஏக்கர் கடல்பரப்பிலே ஆண்டு தோறும் மீன்களைப் பிடித்துக் கொண்டே இருந்தால், மூன்று பங்கு பலன் அதிகம் உண்டு எனக் கணக்கிட்டிருக்கிறார்கள். அந்தக் கடல் நமக்கு அதிகம் உண்டு. கண்ணுக் கெட்டிய தூரம் வரையில!

அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள். "இந்தியத் துணைக் கண்டத்திலேயே வெளிநாட்டு நாணயச் செலாவணிக்கான பொருள்களை உண்டாக்குகிற நாடே தென்னாடு தான்!" என்று!

வடக்கே இருக்கின்ற ஒன்றே ஒன்று; வங்காளத்தில் கிடைக்கிற சணல்! அதிலும் பாகிஸ்தானில் பெரும் பகுதி சேர்ந்து விட்டது!

உலகத்தில் எந்தப் பகுதிக்குப் பூகம்பம் வந்தாலும் தமிழ் நாட்டுக்கு நிச்சயம் வராது! வடநாட்டுக்கு வரலாம்; பீகாருக்கு வரலாம்; ஆனால் நம்மை நெருங்காது! ஏனெனில் நம் நாட்டின் அடிப்பாகமே பாறையினால் ஆனது!

இப்படி எல்லா வளங்களும் கொண்டிருக்கிற திராவிடம் தனியாக வாழ முடியாதா?

அறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி எடுத்துச் சொல்வார்கள், வடக்கேயிருந்து வருகிற வாடைக்காற்று என்றால் காங்கிரஸ்காரர்களே கதவைச் சாத்தத்தான் செய்கிறார்கள் என்று! தெற்கிலிருந்து வருகிற தென்றல் காற்று என்றால் திறந்தே வைக்கிறார்கள்! ஆண்டவன்கூட வடக்கு திசையைப் பார்ப்பதாக இல்லை! நாட்டிலே நீண்டகாலமாக ஒரு பழமொழி உண்டு, "வடக்கே தலைவைத்துப் படுக்காதே!" என்று. அதைத்தான் நம தருமை காங்கிரஸ் நண்பர்களுக்கும் சொல்ல விரும்புகிறோம்; வடக்கே தலைவைத்துப் படுக்காதீர்கள்! வேண்டாம்! ஏனெனில் இந்த நாடு வளமாக இருக்க வேண்டும்! ஃ

பொன்னிக் கரையில்... கன்னித்தமிழன்!

உலகம் வியக்க நிலவிய புகழோடு
போன்னிக் கரைதனில் கன்னித் தமிழால்
மேம்பா டடைந்த பூம்புகார் நகரைக்
கோலைக்குணம் படைத்த அலைகடல் விழுங்கச்
சோழர் அரசும் பாழடைந் தொழிய
நேற்களஞ் சியமெனப் பற்பலர் போற்றவும்
அறிவம் பண்பும் மருவிக் கொஞ்சவும்
மிஞ்சிட இயலாத் தஞ்சைத் தரணியில்
புயலால் கடலால் துயர்வந் துற்றும்
கவலைபால் என்றும் துவளுதல் இன்றித்
தன்மதிப் பியக்க நன்மணி விதைகள்
செழித்து வளர்ந்து தழைத்த நிலையில்
அரசியல் களைகள் பரவி முளைத்து
நஞ்சைப் பயிரைப் பஞ்சை யாக்கவே
நடந்த தேர்தல் முடிந்ததிவ் வாறு;ஆனால்
தேர்தலில் தோல்வி நேர்ந்ததென் றாலும்
சிற்றூர் நகரம் மற்றெவ் விடத்தும்
சோர்வு மடிந்து ஆர்வம் துளிர்த்திட
நீண்ட துயிலை நீத்துக் கிளம்பி
ஆண்ட பரம்பரை அடிமையாய் மாள்வதா
மீண்டும் வாழ்வு வேண்டுமென் றெழுந்தார்
சென்ற திங்கள் கண்டதிக் கோலம்!
ஈழம் வென்ற சோழமா வேந்தன்
கரிகால் வளவன் திருநாள் போல
யானை குதிரைச் சேனைமுன் செல்லத்
தேரும் முத்துச் சிவிகையும் தொடர
வான ஊர்தியும் வண்ணக் கப்பலும்
தானைத் தலைவரின் ஆணையால் நடக்க
எண்ணற்ற கொடிகள் கண்ணை மறைக்க
வாழ்த்தொலி முழக்கம் வானைப் பிளக்க
ஆரூர் என்னும் பேரூர் அதிர்ந்தது!
நாடு மீட்கும் நல்லதோர் படையிதை
வெல்லுவார் இனிமேல் இல்லையென் றெவரும்
சொல்லுதல் கேட்டுதே தொல்லைமேற் கொண்டோர்
சிந்தை குளிர்ந்தார் செயற்படு முறையில்
மற்றவர் நமைப்பின் பற்றி நடக்க
வழிகள் வகுப்போம் எழுக தஞ்சையே!

கருணானந்தம்

வடவரும் கழகமும்

சொல்லின் செல்வர் ஈ.வி.கே.சம்பத். எம்.பி.

தஞ்சை மாவட்ட மாநாடு உணர்ச்சியிலும், ஆர்வத்திலும், அழகிலும் மற்ற எல்லா மாநாடுகளையும்விட கலை எழுச்சியிலும், எதிர் பார்த்த அளவிற்கு மேலாக, ஊர் முழுவதிலும் மாநாட்டுப் பந்தலின் ஆதிக்கம் இருக்கக் கூடிய வகையில் நடைபெறுவது கண்டு மகிழ்கின்றேன்.

நம்முடைய கழகத்தின் நற்பணி தமிழ் நாட்டிலே மிகச் சீரிய முறையிலே — பலத்த எதிர்ப்புகளுக்கு இடையிலே— மிக வெற்றிகரமான நிலையில் இன்றையதினம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நம்மைப் பற்றி தவருன எண்ணங்கள் இருந்த நிலை மாறி, அப்படி எவருமே தவருகப் பேச முடியாத சூழ்நிலை இன்று ஏற்பட்டிருக்கிறது.

கொஞ்ச நாட்களுக்கு முன்பு வரையில், நம்முடைய கழகத்தைப் பற்றி பலவிதமாக மனமறிந்து பொய் பேசி வந்தார்கள். அத்தனைக்கும் காரணம், தமிழ் நாட்டு மக்களிடத்திலே இந்த திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி தவருன செய்திகளைக் கூறி அழித்து ஒழித்துவிட முடியும் என்று கருதினார்கள். கருதியதற்கும் காரணம் இருந்தது. அண்ணு அவர்கள் அடிக்கடி கூறுவதைப் போல் திராவிட முன்னேற்றக் கழகம் மிக அண்மையிலே தோற்றுவிக்கப்பட்டது; மிகச் சாமான்யர்களினுல் தோற்றுவிக்கப்பட்டது! தோன்றிய நேரத்தில் அந்தக் குழந்தையை வாழ்த்துவதற்கு தமிழ் நாட்டு அரசியலிலே, பொது வாழ்விலே சம்பிரதாயத்திற்குக்கூட ஒருவர் கிடைக்கவில்லை. அத்தனை பேரும் முகம் சுளித்து மிக அலட்சியமாகப் பார்த்தார்கள்; வெறுப்பாகப் பேசிக் கொண்டார்கள். இது இன்னும் எத்தனை நாளைக்குத் தாங்கும் என்று அவர்கள் பேசிக்கொண்டது நமக்கு இன்னமும் ஞாபகம் இருக்கிறது.

நாம் எந்தக் கழகத்திலே இருந்து வந்தோமோ—அந்தக் கழகத்தினுடைய தலைவரும், தோழர்களும் மனத் தாங்கல் அடைந்ததிலேகூட ஆச்சரியம் இல்லை. ஆனுல், அந்தக் கழகத்திற்குப் பெரும் வைரிகள் என சொல்லிக்கொண்டிருந்தவர்கள் கூட திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ் நாட்டிலே இருக்கக்கூடாது என்பதற்காக அவர்களுக்கே பக்க மேளம் அடித்ததை நாம் மறந்துவிட முடியாது.

இத்தனைக்கும் என்ன காரணம்? புதிய கழகம் என்பது மட்டுமல்ல; அரசியலிலே அனுபவமிக்கவர்களாய் இருக்கின்ற மாற்றுக்கட்சித் தலைவர்கள் பலபேர் இக் கழகம் முளையிலேயே கிள்ளி பெறியப்படாவிட்டால் நிச்சயமாக வலிவுபெற்று, இந்த நாட்டிலே நிலைபெற்றிருக்கிற காங்கிரஸ் ஆட்சியினுடைய இடத்தில் — காங்கிரஸ் ஆட்சி தளர்ந்தால் இடம் பிடிக்கலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கிற வேறு அரசியல் கட்சிகளுடைய இடத்தைப் பிடித்துக் கொள்ளும் என்ற அச்சம் அவர்களுக்கு வந்த காரணத்தால் தான் அத்தனை பேரும் சேர்ந்து நம்மைத் தாறுமாருகப் பேசினுர்கள்.

அதோடுகூட, அவையிலே அமர்ந்திருந்த காங்கிரஸ் ஆட்சி —அது குமாரசாமி ராஜாவினுடைய ஆட்சியாக இருந்தாலும் சரி; ஓமந்தூர் ராமசாமி, ஆச்சாரியார், அல்லது காமராசர்— இப்படி யாருடைய ஆட்சியாக இருந்தாலும் சரி; மந்திரி சபை எப்படி மாறினுலும் சரி; திராவிட முன்னேற்றக் கழகத்தை ஒழிக்க வேண்டும் என்ற மந்திரி சபையினுடைய எண்ணம் மட்டும் அன்றிலிருந்து இன்று வரையிலே இருந்திருக்கிறது என்பது மட்டுமல்ல; நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டும் வந்திருக்கிறது. நான் ஏன் அதைத் தனியாக எடுத்துரைக்கிறேன் என்ருல், அவர்கள் எண்ணுகிறவர்கள் மட்டுமல்ல; காரிய மாற்றக்கூடிய அதிகாரத்தையும் படைத்தவர்கள்!

நல்ல காரியத்தைச் செய்ய முடியும்; அதைச் செய்ய முடியாமல் அவர்கள் திணருகிருர்கள்—நாம் அறிகிருேம். ஆனுல், கெட்ட காரியத்தையும் அவர்கள் செய்ய முடியும்; அதை நாள்தோறும் செய்து கொண்டு வருகிருர்கள் — நாம் பார்க்கிருேம்!

அடக்குமுறை பல்வேறு ரூபங்களிலே அவிழ்த்து விடப்பட்டது! சிறை பிடிப்பது; துப்பாக்கியால் சுடுவது; தடியால் தாறுமாருக அடிப்பது; இழிவான 'செக்ஷன்'களில் வழக்குத் தொடுப்பது — இப்படி அடக்குமுறை அத்தியாயங்கள் அத்தனையையும் புரட்டிப் புரட்டி நம்மீது செலுத்திப் பார்த்தார்கள்.

ஒருபுறம் அடக்குமுறை; மற்ருெரு புறம் இந்த நாட்டிலே இருக்கின்ற பத்திரிகைகளின் கட்டுப்பாடான விஷமப் பிரச்சாரம்; இன்ருெரு புறத்திலே நம்மைத் திட்டவேண்டுமென்ற எண்ணத்திலே நுழைந்த பேச்சாளர்கள்—இவைகளுக்கு மத்தியிலே திராவிட முன்னேற்றக் கழகம் எழிலோடும், வலிவோடும் விளங்கி வருவதைக் கண்டு உள்ளபடியே பெருமிதம் கொள்கிருேம்.

வடநாட்டில் கழகம் என்ற பெயரை இன்னமும் அநேகரால் உச்சரிக்க முடியவில்லை. அதற்குக் காரணம், தமிழுக்கே உரிய சிறப்பு ''ழ''கரம் அந்த சொல்லிலே இருப்பதுதான். அவர்கள் பேச முயற்சித்தால்

'கழகம்' என்றுதான் முடிகிறது. முன்பெலாம் அரசியலிலே ஈடுபட்டிருக்கின்ற சில தலைவர்களுக்கு மட்டும் நம்முடைய இயக்கத்தைப் பற்றி எப்படித் தெரியும் என்றால், "நாயக்கரது பார்ட்டி" என்றுதான் தெரியும்!

இன்றைய தினமோ மிகச் சிரமப்பட்டு, வீட்டிலேகூட பல முறை ஒத்திகை பார்த்து விட்டு, பார்லிமெண்டிலேயே பேசுகிறார்கள், 'திராவிடா முன்னேற்ற கழகம்' என்று!

நம்முடைய திராவிட நாடு திராவிடருக்கே என்ற கோரிக்கையை அவர்கள் சிறிது தவருகப் புரிந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களில் பல பேர் ஒன்றுபட்டுவிட்ட இந்தியாவிலிருந்து திராவிடம் பிரியவேண்டும்; உடைத்துக் கொண்டு போக வேண்டும்; பிய்த்துக் கொண்டு, பிரிந்துபோக வேண்டும் என்று நாம் சொல்வதாகக் கருதுகிறார்கள். அந்த எண்ணத்தை மாற்ற வேண்டிய பெரும் பொறுப்பு நமக்கிருக்கிறது. அண்ணா அவர்கள் அதற்கு நல்ல விளக்கங்களை 'ஹோம் லேண்ட்' ஏட்டின் மூலம் தந்து வருகிறார்கள், "நாம் கேட்பது பிரிவினையல்ல; நம்முடைய இயக்கம் ஒரு விடுதலை இயக்கம்!" என்று.

நானும், அங்கு நண்பர்களிடத்தில உரையாடிக் கொண்டிருக்கும் நேரத்திலெல்லாம் இதைத்தான் உணர்த்துகிறேன். அப்போதுதான் அவர்களுக்கு இந்திய வரலாறே நினைவிற்கு வருகிறது.

அவர்கள் இந்தியாவினுடைய வரலாறு காந்தியார் காங்கிரசில் நுழைந்ததற்குப் பிறகுதான் ஆரம்பித்தது என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய நினைவிலே இன்று இருப்பதெல்லாம், அதிகாரம் அசைக்கமுடியாத நிலையில் காங்கிரஸ்காரர்களுடைய கரத்திலே இருக்கிறது என்பது ஒன்றேதான். ஆகவேதான் இந்த நாடு வெள்ளைக்காரன் வருவதற்கு முன்பு எப்படி இருந்தது; மொகலாயர்களுக்கு முன்பு எப்படி இருந்தது; ஆயிரம் ஆயிரத்தைநூறு ஆண்டுகளுக்கு முன்னால் எந்த வகையான அரசுகளைக்கொண்டிருந்தது— என்பதையெல்லாம் நாம் நினைவுபடுத்த வேண்டியிருக்கிறது.

மற்றொன்று, இன்று இந்தியாவினுடைய சரித்திரம் என்ற பெயரால் வட இந்தியாவினுடைய சரித்திரம்தான் பாடப் புத்தகங்கள் முழுவதும் பரவிக் கிடப்பதைப் பார்க்கிறோம்.

ஆகவே தென்னிந்தியா இருப்பதாகவே அவர்களுக்கு நினைவில்லை! தென்னிந்தியாவுக்கு ஒரு வரலாறு இருப்பது அவர்களுக்குத் தெரியவில்லை! அந்த வாலாற்றினுடைய தொன்மை சிறப்புவாய்ந்தது; உலகம் கண்டு வியக்கத்தக்க நாகரீகத்திற்குச் சொந்தமானது...என்ற அரிய உண்மைகளை அவர்களுக்கு நம்மைப் போன்றோர் எடுத்துரைத்தாலன்றி தெரிவதற்கு மார்க்கமில்லை!

இப்படிப்பட்ட விளக்கங்களைத் தருவதால்தான் வடக்கேயிருக்கிற மூடுபனியை நம்மால் விலக்க முடியும்! நம்முடைய கொள்கையின் விளக்கம்–லட்சியக் குரல் வடக்கு நோக்கி ஒலித்தால் வெகு விரைவில் வடநாட்டு சுயநல மக்களிடத்திலேயும் அனுதாபத்தையும் ஆதரவையும் பெற முடியும் என்ற நம்பிக்கை எனக்கு நிச்சயமாக இருக்கிறது.

இன்றைய தினம் வடக்கே நாங்கள் இருவரே சென்றுள்ளோம். 505 பேர் இருக்கின்ற சபையில் இது மிகச் சாமான்யமான எண்ணிக்கைதான்!

இவ்வளவு பலகீனம் இருந்தாலும் நமக்கிருக்கிற ஒரே பலம்–நம்மைப்பற்றித் தெரிந்துகொள்ளவேண்டும் என்ற ஆவல் அவர்களுக்கு இருக்கிறது. ஆனால் அந்த ஆவலோடு கூட அருவருப்பும் இருக்கிறது; அதையும் உணருகிறேன்—அது இயற்கையும் கூட.

இன்றைய தினம் வடநாட்டு அரசியலிலே, வெளித் தோற்றத்திலே பளபளப்பும், உள்ளே செல்லரித்துப்போன நிலையிலும் உள்ள காங்கிரஸ் கட்சி ஒரு புறத்திலே இருக்கிறது. அதைச் சுற்றிலும் வடக்கே இருக்கின்ற அகில இந்திய கட்சிகள்! ஆனாலும் அத்தனை அகில இந்திய கட்சிகளுக்கும் இன்றைக்குப்பெரிய இலட்சியக் கண்ணோட்டம் இருப்பதாக நான் நம்பத் தயாராக இல்லை. அவையனைத்தும் வெகு விரைவில் காங்கிரஸ் வீழும் என்று தெரிந்துகொண்டு, விழுந்தால் காலியாகும் இடத்தில் எப்படி



முந்திக்கொண்டு உட்காருவது என்ற நோக்கத்தோடு இருக்கின்ற கட்சிகளே தவிர, மக்களின் பிரச்சினைகளில் உள்ளபடியே நாட்டம் செலுத்துபவை அல்ல; பரிதாபத்துக்குரிய கம்யூனிஸ்ட் கட்சி உட்பட!

அமிர்தசரசிலே அவர்கள் கூடிய காங்கிரசில் பல்வேறு வகையான தீர்மானங்கள் போட்டிருக்கிறார்கள்; ஏற்கனவே அவர்கள் கூறிவந்த கருத்துக்கள் தவறானவை என்றும் கூறியிருக்கிறார்கள். ஆனாலும் ஆழ்ந்து சிந்தித்து, அலசிப் பார்த்து, அனுபவத்தை முன் வைத்து யோசித்தால், அவர்கள் அவைகளை இதயப்பூர்வமாகப் பேசுகிறார்கள் என்று ஒத்துக்கொள்ள முடியாது. நேரு விலகினால்—காங்கிரஸ் தகர்ந்தால் அந்த இடத்திலே அமர எங்களுக்குத் தகுதி இருக்கிறது என்று காட்டிக்கொள்ளவே தான் விரும்புகிறார்கள்!

அதேபோல, அங்கிருக்கிற அடுத்த பெரிய கட்சி பிரஜா சோஷலிஸ்ட் கட்சி—கிருபளானியின் தலைமையிலே பாராளுமன்றத்திலே இயங்கிவருகின்ற கட்சி! அவர்கள் தாங்கள்தான் காங்கிரசிற்கு மாற்று—காங்கிரசின்மீது மக்களுக்கு ஆத்திரமோ சலிப்போ ஏற்பட்டால் அடுத்து விரும்புவது தங்களைத்தான் என்ற எண்ணத்தைக் கொண்டவர்கள்!

அடுத்தது லோகியாவின் சோஷலிஸ்ட் கட்சி! அதிலே இன்று ஏற்பட்டிருக்கின்ற பிளவுகளும், விரிசல்களும் அநேகம்! துண்டு துண்டாக இருந்தால், காங்கிரஸ் ஆட்சி காலியாகும்போது அந்த இடத்தைப்பிடிக்க முடியாது; ஆகவே பிரஜா சோஷலிஸ்ட் கட்சியுடன் எப்படியாவது ஒன்றுபட்டு அந்த ஆசையை அடைவதோடு, கம்யூனிஸ்டுகளை நுழையவிடக் கூடாது என்ற முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

அதற்கு அடுத்தது, ஜன சங்கம்—அதாவது இந்து மகா சபை! இந்தியாவுக்கு எதிர்ப்பு பாகிஸ்தான்; அது முஸ்லீம்களின் நாடு; நாம் வசிப்பது இந்துக்களின் நாடு—என்று சொல்லி, இரண்டுக்கும் வெறியைக் கிளப்பி, பகையை மூட்டி. காங்கிரசின் இடத்தைப் பிடித்து விடலாம் என்பது அதன் நினைவு!

நான் இவைகளை எதற்குக் குறிப்பிடுகிறேன் என்றால், அங்கிருக்கின்ற எல்லா கட்சிகளுக்கும் இன்றைய நோக்கம் பதவி சிம்மாசனத்தின்மேல் இருக்கிறதே தவிர, மக்களின் உள்ளங்களிலே எழுகின்ற எண்ணங்கள் என்ன; புதிய தேவைகள் என்ன; குறைகள் என்ன; மொழியைப்பற்றி அவர்கள் என்ன கருதுகிறார்கள்; மாநிலப் பிரிவினையைப் பற்றி என்ன நினைக்கிறார்கள்; பொருளாதாரத் துறையிலே என்ன மாற்றங்கள் விளையவேண்டும் என்று விரும்புகிறார்கள் — என்பதை கவனிக்க மனமின்றி — அரண்மனைக்கு வெளியிலே இருக்கின்ற அலங்கோலங்களைப் பற்றித் துளியும் எண்ணாமல் இருக்கிறார்கள்!

பல நண்பர்கள் என்னிடம் கேட்பார்கள், "நீங்கள் என்ன; நாடே பிரியவேண்டும் என்று கேட்கிறீர்களாமே, மெய்தானா மிஸ்டர் சம்பத்?" என்று.

"ஆமாம்! பிரியவேண்டும் என்று சொல்லவில்லை; நாங்கள் விடுபடவேண்டும் — விடுதலை பெறவேண்டும் என்று சொல்லுகிறோம்!" என்று நான் பதில் தருவேன்.

வேடிக்கையாகப் பேச ஆரம்பித்தவர்கள் உட்கார்ந்து விவாதிக்கத் தொடங்கும் நேரத்தில் "இப்போது இருக்கிற போக்கிற்கு அது ஒத்துவருமா?" என்று கேட்பார்கள்.

நாட்டிலே அரசியல் துறையானாலும் பொருளாதாரத் துறையானாலும், ஏதாவதொரு போக்கு இருக்கத்தான் செய்யும். ஆனால் நாட்டு மக்களின் நலனிலே அக்கறை படைத்த அரசியல் கட்சிகள், பொதுநல அமைப்புகள் இருக்கின்ற போக்கிற்கு ஒத்த போக்கிலே கவனத்தைச் செலவிட்டால் அதிலே அர்த்தமில்லை. இருக்கின்ற போக்கு மக்களின் ஒத்தப் போக்காக இருந்தால் அதை அவர்கள் வலுப்படுத்துவதிலே பொருள் உண்டு!

ஆனால் இருக்கிற போக்கை மாற்ற நம்மால் முடியுமா; அதற்கு அவகாசம் இருக்கிறதா; மாற்றத்தைக் காணும் முன் நாம் செத்து விடுவோமா; அதிலே கிடைக்கின்ற பலனிலே நமக்குப் பங்கு கிடைக்காமல் போய் விடுமா—என்று ஆரூடம் பார்க்கிறவர்கள், மக்களை எமாற்றுகின்ற பொதுவாழ்வுக்காரர்கள் என்று நான் அவர்களிடத்திலே பேசுவதுண்டு.

இன்றைய தினம் அகில இந்திய அரசியலிலே இருக்கின்ற மனப்போக்கு சரிதானா என்று யோசிக்க வேண்டுமே தவிர, இருக்கின்ற போக்கிற்கு எதிர்த்த ஒரு போக்கு உண்டாக்குவது பற்றி சந்தேகப்படுவது கோழைத்தனம் என்று நான் அவர்களிடத்திலே வாதாடுவேன்!

அடுத்து சில பேர்கள், "நீங்கள் பேரம் பேசுவதற்குத்தான் பிரிவினை பிரச்சினையைப் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். அது எங்களுக்குத் தெரியும்!" என்கிறார்கள்.

"என்னய்யா பேரம் பேசுகிறோம்?" என்றால், "ஐந்தாண்டுத் திட்டத்தில் உங்களுடைய ராஜ்யத்திற்கு அதிகப் பணம் வேண்டுமென்று கேட்கிறீர்கள். கொடுக்காவிட்டால் பிரிந்து போவோம் என்று மிரட்டுகிறீர்கள்!" என்று கூறுகிறார்கள்.

அப்படிச் சொல்லுவோரிடத்தில், "உங்கள் ஐந்தாண்டுத் திட்டம் உதயமாவதற்கு முன்பே, 'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற முழக்கம் தெருவெல்லாம் முழங்கிக் கொண்டிருக்கிறது. 1939—லிருந்தே! நாங்கள் சொல்லி வந்தது எவ்வளவு நியாயமானது என்பதைக் காட்டுவதற்காக உங்களது ஐந்தாண்டுத் திட்டத்துப் பித்தலாட்டங்கள் துணை புரிந்திருக்கின்றன என்று சொல்லுங்கள்; நான் ஒத்துக் கொள்ளுவேன்." என்று நான் சொல்ல அஞ்சுவதில்லை.

இன்னும் சில பேர், நாம் இந்தி மொழி படிப்பதற்குப் பயந்துகொண்டு—இந்தி மொழி படித்தால் வட நாட்டுக்காரர்களோடு போட்டி போட முடியாதே என்று அஞ்சிக்கொண்டு—இன்று டெல்லி 'செக்ரடேரியட்'டிலே சென்னைவாசிகள் கொட்டம் அடித்துக் கொண்டிருக்கிறார்களே; அந்த நிலை மாறி விடுமோ என்ற பயத்தில்—இந்தி கூடாது என்று சொல்லுவதற்காகப் பிரிவினை கேட்பதாகச் சொல்லுகிறார்கள்.

அவர்களுக்கும் நான் சொல்வேன். இந்திப் பிரச்சினை என்பது இருக்கின்ற ஒரு வியாதியினுடைய அறிகுறியே தவிர, அதுவே ஒரு வியாதி அல்ல. இந்தியைக் கொண்டு வருவதற்காக துணைபுரிகின்ற அரசியல் சட்டத்தை அறவே நீக்கினாலும் திராவிட நாடு பிரச்சினை இருக்குமே தவிர பின்னாலே போய் விடாது!'' என்று.

மக்கள் சபையில் இரண்டே முறைதான் உரையாற்றுவதற்கு எனக்கு வாய்ப்பு கிடைத்தது. அந்த வாய்ப்புகளைப் பெறுவதற்கு முன்பு எனக்கு நிறைய மனப் போராட்டங்கள் இருந்தன. அது அண்ணா அவர்களுக்குத் தெரியும்; நம்முடைய கட்சியிலே இருக்கிற முக்கியமான தோழர்களிடத்திலேயும் அதை எடுத்துரைத்திருக்கிறேன். நான் இங்கிருந்து சென்றேன். செல்லும்போது அண்ணா அவர்கள், ''நீ மிகப் பொறுமையாக இருக்க வேண்டும்; உன்னுடைய ஆத்திரத்தைக் காட்டக் கூடாது; ஜனநாயகத்திலே காத்திருக்கப் பழகிக் கொள்ள வேண்டும்; யாரிடத்திலும் அனாவசியமாக சத்தம் போட்டுப் பேசிக்கொள்ளவும் கூடாது!'' என்று இரயிலடி வரை வந்து அறிவுரை தந்து விட்டுப் போனார்கள்.

நான் அங்கு போனதிலிருந்து ஏதாவதொரு விஷயத்தின்மீது பேச வேண்டுமென்று பல முறைகள் முயன்று முயன்று தோற்றுப் போனேன்.

முதல் சபைக் கூட்டத்தில், கடைசி நாளுக்கு முதல் நாள் தோழர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் வரவு — செலவு திட்டத்தின்கீழ் நடைபெற்ற விவாதத்திற்குப் பதில் சொல்ல எழுந்திருந்தார். சபை முழுவதும் கையொலி செய்து அவரை வரவேற்றது. அவரும் தன்னுடைய பேச்சை ஆரம்பித்தார். உடனே நான் எழுந்து நின்று, என்னுடைய ஆட்சேபணையைத் தெரிவித்தேன். ''ஐயா! நான் இங்கு வந்து ஒரு மாதத்திற்குமேல் ஆகிறது! நான் பேசுவதற்கு இதுவரை பல முறை முயன்றிருக்கிறேன். எனக்கு வாய்ப்பு தரவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த தூதுவர்கள் இங்கே வந்திருப்பது இரண்டே பேர்கள்தான் என்றாலும், தமிழ்நாட்டினுடைய அரசியலின் எதிர் காலத்தை உருவாக்குகிற பெரும் ஆற்றலும், பெரும் உரிமையும் எங்கள் இயக்கத்திற்கு இருக்கிறது. அதை மனதிலே வைத்துக் கொண்டு எங்களை நீங்கள் மதிக்க வேண்டும்!'' என்றேன்.

அதற்கு சபாநாயகர் அவர்கள், ''தங்களுக்கு இடம் கிடைக்காதது பற்றி நான் வருந்துகிறேன். இருந்தாலும் இங்கே 505 பேர் இருக்கிறார்கள். கொஞ்சம் தாமதமானால் பொறுத்துக் கொள்ளவேண்டும்!'' என்று சமாதானம் சொன்னார்.

பிறகு அடுத்த சபைத் தொடரில் உள்நாட்டு இலாக்கா மான்யம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது எனக்கு வாய்ப்பு கிடைத்தது.

எனது அந்த முதல் பேச்சுக்குப் பிறகு, என்னைப் புறக்கணித்து வந்ததாக நான் கருதிய சபாநாயகரேகூட ''இப்படி முதல் பேச்சிலேயே இத்தனை தன்னம்பிக்கையோடு பேசுபவரை நான் இப்போதுதான் சந்திக்கிறேன். உங்களுடைய கழகத்துக்காரர்கள் நன்றாகப் பேசுவார்கள் என்று முன்பே கேள்விப்பட்டிருக்கிறேன். இன்று உங்களைப் பார்த்தேன்; பேச்சைக் கேட்டேன்!'' என்று அவர் பாராளுமன்றத்தில் புதிதாக நுழைந்தவருக்குத் தரவேண்டிய உற்சாகத்தைத் தந்தார்.

மேலும், ''சம்பத் அவர்களே! சபையில் நான் பல காலமாக சபாநாயகராக இருந்திருக்

ஆரூர் தெருக்களில் வீர உலா வந்த ஊர்வலத்தில் ஒரு பகுதி!



கிறேன். பேச்சுக்களை மூன்று ரகமாகப் பிரித்து வைத்திருக்கிறேன். சில உறுப்பினர்கள் பேச எழுந்ததும், வெளியே 'காபி' குடித்துக் கொண்டிருக்கிற உறுப்பினர்கள்கூட எழுந்து ஓடி வருவார்கள்—இது ஒரு வகை! இரண்டாவது வகை, வெளியிலே இருந்தும் ஒருவரும் வரமாட்டார்கள்; உள்ளே இருக்கிறவர்களிலேயும் யாரும் வெளியே எழுந்து செல்லமாட்டார்கள்! மூன்ருவது தரமான பேச்சு, இருக்கின்றவர்களும் எழுந்து வெளியே சென்றுவிடுவார்கள்! சாதாரணமாக, புதிய உறுப்பினர்களின் முதல் பேச்சு மூன்ரும் வகையான பேச்சாகத்தான் இருக்கும்! உங்களுடைய பேச்சு ஆரம்பத்திலேயே சபையில் இருக்கிறவர்களை உட்கார வைத்தது!'' என்றெல்லாம் தைரியம் கொடுத்தார்.

அடுத்தபடியாக சில மான்ய விவாதங்கள் வந்தபோது நான் பேச முயற்சித்தேன்; வாய்ப்பு கிடைக்கவில்லை. ஆகவே, நான் சென்னை வந்தபோது அண்ணுவிடம் நிலைமையைச் சொல்லி வருந்தினேன். அண்ணு அவர்கள் ''இந்தமுறை மீண்டும் டெல்லி செல்கிறபோது முயற்சி செய்; முடியாவிட்டால் வேறு வழிகளைப் பற்றி யோசிப்போம்!'' என்று ஆறுதல் சொல்லி அனுப்பிஞர்கள்.

நான் மறுபடி டில்லி சென்றபோது அமைச்சர் கேஸ்கருடைய தலைமையில் இயங்கிவருகின்ற செய்தி —போக்குவரத்து இலாக்கா மான்யத்திலே பேச அனுமதி கேட்டேன். உடனே அனுமதி கொடுக்கப்பட்டது. நம்முடைய கழகம் இந்த நாட்டிலே பல்லாண்டு காலமாக எதைக் கூறி வந்ததோ — ரேடியோவைப்பற்றியும் சினிமாத் துறையில் இந்த சர்க்கார் செய்கிற அக்கிரமங்களைப் பற்றியும் எதை எடுத்துக் கூறி வந்ததோ — அவைகளில் சிலவற்றைத்தான் நான் அன்றைக்குக் கூறினேன். புதிதான செய்திகள் அல்ல; ஆனல் அந்த இடத்திலே அதைக் கேட்பவர்களுக்கு விஷயம் புதியதாகவும், அதற்குப் பின்னலே இருந்த ஆத்திரத்திலே வலிவு அதிகமானதாக இருப்பதாகவும் கருதிக் கொண்டார்கள்.



தானைத் தலைவரின் ஆணையால் நடக்கும்...

நான் இதை ஏன் சொல்கிறேன் என்ருல், சம்பத்தினுடைய சாமர்த்தியம் எதுவுமே கிடையாது; திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொள்கைக் கண்ணேட்டம் இருக்கிறதே— அது அங்கே அதிர்ச்சியை உண்டாக்குகிற ஆற்றல் படைத்திருக்கிறது!

அன்று நான் பேசும்போது இடையில் பலர் குறுக்கிட்டுப் பேசிஞர்கள். அந்த மான்ய விவாதத்திற்கு வழக்கமாக ஒதுக்கப்படுவது மிகமிகக் கேவலமான நேரம்—இரண்டு மணி நேரம்; அதற்கேகூட ஆள் கிடைக்கமாட்டார்கள். ஆனல், அன்று மூன்று மணிநேரம் ஒதுக்கியிருந்தார்கள். நம்முடைய கருத்துக்கள் அங்கே பிரதிபலிக்கப்பட்ட உடனே அந்த மூன்று மணி நேரம் போதாது; திடீரென்று சுவை ஏற்பட்டுவிட்டது; இந்த இலாக்காவிற்கு ஒரு மகத்துவம் ஏற்பட்டுவிட்டது; நான்கு மணி நேரம் வேண்டும்; ஐந்து மணி நேரம் வேண்டும் — என்று சபையிலேயே கேட்டார்கள். வழக்கமாக ஐந்து மணி வரையிலேதான் சபை உண்டு. அன்று ஆறு மணி வரையிலே நீடிக்கப்பட்டது!

அந்த விவாதத்திலே நான் இரண்டாவது நபராகப் பேசினேன். எனக்குப் பின்ஞல் 10, 12 பேர் பேசிஞர்கள். பேசிய ஒவ்வொருவரும் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கருத்தை எடுத்து ஒட்டியே பேசிஞர்கள்!

நம்முடைய கருத்துநுழைந்தால் அங்கே அச்சம் ஏற்படுகிறது! நம்முடைய கருத்து அங்கே செல்லாத வரையில் அது சாமான்யமானதாகக் கருதப்படலாம்; எடுத்துச் சொல்லப்பட்டால், அத்தனை பேருடைய கவனத்தையும், விருப்பத்தையோ, வெறுப்பையோ —ஆத்திரத்தையோ, அச்சத்தையோ — அசாத்திய விழிப்புணர்ச்சியோடு இருக்க வேண்டுமென்கிற எச்சரிக்கையையோ உண்டாக்குகிறது.

ரேடியோ பொது மக்களுக்கு —பொது நோக்கோடு பயன்படுத்தப்படுகிற சாதனமாக இல்லாமல், காங்கிரசின் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்துகிருர்கள்—என்பது எனது குற்றச்சாட்டுகளின் ஒன்று.

அடுத்தபடியாக, சினிமாப் படமெடுக்கிறார்கள். அத்தனையிலும் காங்கிரஸ் மாநாடுகளும், காங்கிரஸ் தலைவர்களுடைய திக் விஜயங்களும்தான் இருக்கின்றனவே தவிர, நமது மாநில மாநாட்டிலே ஏன் ஐம்பது அடி எடுத்துக் காட்டி யிருக்கக் கூடாது? டெல்லியிலே இரண்டு இலட்சம் சீக்கியர்கள் ஆண்களும் பெண்களுமாக ஊர்வலமாக வந்தார்களே; அதில் ஒரு ஐம்பது அடியை ஏன் படமெடுத்துக் காட்டியிருக்கக் கூடாது? 'கேமரா' முழுவதுமே நேருவினுடைய அந்தப் புறத்திலேயே — காங்கிரசின் மந்திராலோசனை மண்டபத்திலேயே இருக்கிறதே; இது முறையா— என்று கேட்டேன்.



…ஆண்ட பரம்பரையின் அணிவகுப்பு காணீர்!

சர்க்காரை ஆதரிக்கின்ற ஏடுகளுக்கு மட்டுமே அரசாங்க விளம்பரங்கள் தருவதையும் நான் கண்டித்தேன்.

இன்னொன்று, 'விவித் பாரதி' என்ற வானொலி நிகழ்ச்சி சென்னையிலேயும் பம்பாயிலேயும் மிக சக்தி வாய்ந்த இயந்திரங்களைக் கொண்டு ஒலிபரப்பப் படுவதை அறிவோம். இவை இரண்டும் தினம் ஐந்து மணி நேரம் இந்தியிலே நிகழ்ச்சிகளை சொல்லிக் கொண்டிருக்கின்றன. இவை தேவைதானா? ஏன் தென்னாட்டு மொழிகளில் ஒரு நிலையம் வேலை செய்யக் கூடாது—என்று கேட்டேன்.

அன்றைய தினம் மந்திரி அதற்கு மழுப்பினார். ஆனால் பின்னால் பலன் இருந்தது.

மாலை, தமிழ்ச் செய்தி அறிக்கையில், அன்று பாராளு மன்றத்தில் பேசியவர்களில் நான்கு பேரது பெயரைச் சொன்னார்களாம். அதிலே என் பெயரையும் சொல்லி யிருக்கிறார்கள்— மனக் கசப்போடுதான்; ஆனால் பயத்தோடு!

மேலும், இப்போது வருகின்ற செய்தித் திரைப் படங்களை நான் பார்க்கிறேன். இன்னும் நம்முடைய மாநாடுகளைப் படமெடுத்துக்காட்டத் தாராளமும் தைரியமும் அவர்களுக்கு வரவில்லையானாலும், ஏதாவதொரு தென்னிந்திய நிகழ்ச்சி வலிந்து இடம் பெறுகிறது.

நான் ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், நம்முடைய சொற்கள் வெறும் ஒலிக் குறிப்புகளாக மட்டுமல்ல; செயலாற்றும் ஆற்றல் கொண்டு மிருக்கின்றன!

அடுத்தபடியாக காங்கிரஸ் ஸ்தாபனத்தை — அதன் மூலஸ்தானத்தை — மூலவர்களை — மிக மிகப் பக்கத்திலேயிருந்து தெரிந்து கொள்ளுகின்ற வாய்ப்பை நாம் பெற்றிருக்கிறோம்.

காங்கிரஸ் ஒரு வகுப்புவாத ஸ்தாபனம்; அதில் ஜாதி வெறி தலை தூக்கி ஆடுகின்றது; பதவி வெறி அங்கிங்கெனாதபடி எங்கும் தாண்டவமாடுகிறது! இப்படி யார் சொன்னது? நேரு பிரான் அவர்கள்தான்!

இதை மாற்றுவதற்கு, தான் விலகிப் போனால் தவிர வேறு வழியில்லை என்றும் சொல்கிறார். காங்கிரசினுடைய நிலையை அவர் ஓரளவு படம் பிடித்துக் காட்டினார். "பண்டித நேருதான் பதினோரு ஆண்டு காலம் பிரதம மந்திரியாகப் பதவி வகித்துவிட்டார். இன்னும் அவரது இள்மை மங்காது இருக்கிறதே, ஆண்டுகள் பல வானாலும்! எத்தனை நாட்கள் அவரைப் பார்த்தே நாங்கள் பரவசப்படுவது? கொஞ்சம் விலகி…கொஞ்சம் எங்களுக்கும்…" என்ற ஆசை இன்று எல்லோருடைய உள்ளத்திலும் தோன்றிவிட்டது. அந்த எண்ணத்திற்குப் பின்னால், அதற்குப் பிறகு யார் என்பதில் அவர்களுக்கு அபிப்பிராய பேதம் இருந்தாலும், அவர் போய்விட வேண்டுமென்ற எண்ணம் பலப்பட்டுவிட்டது! அவர்களை மிரட்டவே பண்டித நேரு கட்சிக் கூட்டத்திலே அதுமாதிரிப் பேசினார் நான் வெளியே போனால் எதை எதைப் பேசுவேன் என்று இப்போது பொதுவாகத் தெரிந்து கொள்ளுங்கள் என்பதற்குத்தான் அந்த ஜாடை காட்டினார்.

'அந்த நிலைமை மாறுகிறவரை இன்னும் கொஞ்சநாள் இருந்துத் தொலை' என்பதுபோல் உட்காரச் செய்திருக்கிறார்கள். ஆனால் மிகச் சாமான்யர்கள் தான்–சத்தியநாராயண் சின்கா, டாக்டர் சுப்பராயன், மகாவீர் தியாகி போன்றவர்கள்தான் அவர்களது வெளியேற்றத்தை விரும்பாது பேசினார்களே தவிர, பண்டித பந்த் வாயைத் திறந்தாரில்லை! மொரார்ஜி தேசாய் போன்ற பெரிய தலை

வர்கள் "போகாதே! போகாதே!" என்று அலறித் தடுக்கவில்லை!

மற்றொன்று, நாம் மட்டும்தான் விடுதலை பெறவேண்டும்; இந்திய யூனியன் என்பது ஏகாதிபத்திய மோசடி வித்தை—என்ற எண்ணம் நமக்கு மட்டும்தான் இருக்கிறது என்று நாம் கருதிக்கொண்டிருந்தோம். இன்று அந்த எண்ணம் வங்கத்திலே வேர் விட்டுக்கொண்டிருக்கிறது! மாராட்டியத்திலே பெரும் மரமாகவே வளர்ந்து விட்டிருக்கிறது! சம்யுக்த மகாராஷ்டிரத்தின் முக்கிய தலைவரான ஜோஷி நம்முடைய இயக்கத்தைக் குறிப்பிட்டு, "பம்பாயைத் தலைநகராக வைத்து மாராட்டியத்தைப் பிரிக்காவிட்டால், தெற்கே திராவிட முன்னேற்றக் கழகம் பிரிவினை கேட்பதுபோல், நாங்களும் முழுச் சுதந்திர மராட்டியத்திற்குப் போராடுவோம்!" என்று எச்சரிக்கை விடுத்தார். நம்முடைய மாநாடுகளிலே கலந்துகொள்ள வேண்டும் என்றும் அவர்கள் ஆர்வத்துடன் இருக்கிறார்கள். கோவை மாவட்ட மாநாட்டிற்கு அவர்களை அழைத்து வருவதாகவும் நான் சொல்லியிருக்கிறேன்.

இன்னொரு தோழர் "ரவீந்திரநாத் தாகூர் ஒரு கவிஞர் மட்டுமல்ல; ஒரு தீர்க்கதரிசியாகும்! தேசிய கீதம் இருக்கிறதே 'ஜன கன மண' என்ற பாடல், அதை கவனித்திருக்கிறீர்களா? 'பஞ்சாபு சிந்து குஜராத்த மராட்டா திராவிட உட்கல வங்கா' என்ற இதைத்தான் அவர் இந்தியா என்று குறிப்பிட்டிருக்கிறார். இன்று இந்தியாவை ஆட்டிப் படைக்கின்ற உத்தரப் பிரதேசத்தையும் பீகாரையும் காணவில்லை பார்த்தீர்களா? தாகூர் குறிப்பிட்டிருப்பது இவை எல்லாம் தனித் தனி நாடாகப் போய்விடும்; இந்தியா என்று கட்டிக்கொண்டு மாரடிக்கவேண்டிய கருமத்திற்கு ஆளானவை அந்தப் பாடப்படாத பகுதிகள்தான்!" என்று புது வியாக்யானம் தந்தார்!

இந்தியா ஒன்றுதான் என்ற பண்டிதருடைய போலித் தத்துவத்திற்கு மிகுந்த ஆதரவு வேறு மாநிலங்களில் இருப்பதைக் காணோம்! இந்தியாவை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கின்ற இந்தி வெறி பிடித்த மாநிலங்கள் மட்டுமே அமைதியாக இருக்கின்றன! உத்தரப் பிரதேசம், பீகார், மத்தியப் பிரதேசம்—ஆகிய மாநிலங்களில் பிரச்னை இல்லை! மற்ற மாநிலங்களில் இந்த சர்க்காருக்குக் கொடிய தலைவலி காத்துக்கொண்டிருக்கிறது!

தமிழ் நாட்டிலிருந்து அங்கு வந்திருக்கின்ற காங்கிரஸ் நண்பர்களுடைய நிலை என்ன? அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய செயல் முறைகளைப் பாராட்டத்தான் செய்கிறார்கள். ஒரு மாஜி மந்திரி—புதிதாக ராஜ்ய சபைக்கு வந்தவர்— காங்கிரஸ் நண்பர்களைக் கூட்டி வைத்துக்கொண்டு சொல்கிறார், "தெரியுமா சேதி? இப்போது சுப்பிரமணியம் மிக அழகாகத் தமிழ் பேசுகிறார் எல்லாம் அண்ணாத்துரையினுடைய பயிற்சிதான் காரணம்!" என்று தனது முதல் செய்தியாக!

அவர்கள் எல்லோருடைய உள்ளத்திலும் அகில இந்தியா என்பது ஒரு அரசியல் மோசடி என்பது மட்டும் தெரியும். அது பதவி தந்திருக்கிற காரணத்தால் மௌனம் சாதிக்கிறார்கள்; அது நீடிக்க வேண்டும் என்பதற்கு வாதம் புரிகிறார்கள்.

அண்ணா அவர்கள் சட்டசபைக்கு சென்ற உடனேயே ராஜதந்திரத்தால் பாடம் கொடுத்தார்கள், அவர்களுக்கு. "டெல்லி சர்க்காரிடத்திலே காரியம் சாதித்துக் கொள்ளத் தெரியவில்லை உங்களுக்கு. நாங்கள் சட்டசபைக்கு வந்திருக்கிறோம்; டெல்லியில் சொல்லுங்கள், நீங்கள் அதிக சலுகைகள் தராவிட்டால் அவர்கள் மானத்தை வாங்குவார்கள்; முன்னேற்றக் கழகம் வளர்ந்துவிடும் என்று பய முறுத்தி வாங்கி வாருங்கள்!" என்று பாடம் தந்தார்கள்.

அண்ணா அவர்கள் வளருவார்கள் என்று சொல்லி மிரட்டுங்கள் என்றார்கள். அவர்கள் அதையும் மீறி, "அடுத்த தேர்தலில் மந்திரி சபையே அவர்களுடையது; இந்தி மொழி விஷயத்தில் அதைச் செய்யாவிட்டால், அண்ணாதுரை முதல் மந்திரியாகி விடுவார்! அப்புறம் குறை சொல்லிப் பயன் இல்லை! கேரளாவுக்கு அடுத்தது தமிழ் நாடுதான்!"—இப்படி மந்திரிகள் முதல் அதிகாரிகள்வரை நம்மைச் சொல்லித்தான் அங்கே உட்காருவதற்கே இடம் வாங்க வேண்டியிருக்கிறது!

அடுத்தாற்போல், இன்றைய தினம் வட இந்தியப் பத்திரிகைகள் அனைத்துமே நமது பிரச்சினைகளில் கவனம் செலுத்துகின்றன. பிடிக்காவிட்டாலும், அருவருப்பு இருந்தாலும், போடப்படுகின்ற விஷயங்களில் பெரும்பாலும் தவறு இருந்தாலும், நம்மைப் பற்றிய செய்திகளை வெளியிடுவதில் அவசியம் வந்து விட்டதாகக் கருதுகிறார்கள்.

"டெல்லி டைம்ஸ்" என்று டெல்லியிலிருந்து வருகிற வாரப் பத்திரிகை, வாரம் தவறாது நம் கழகத்தைப் பற்றியும், நமது அண்ணாவைப் பற்றியும் எழுதிக் கொண்டிருக்கிறது. இப்போது ஒரு பெரிய தொடர் கட்டுரையே எழுதி வருகிறது.

இவை எல்லாம் எதைக் குறிக்கின்றன? திராவிட முன்னேற்றக் கழகம் தமிழக அரசியலிலே நிலைபெற்று விட்டது என்பதைத்தான்!

எதற்கு இதனைக் கூறுகிறேன் என்றால், முன்னேற்றக் கழகத்தைப் பற்றி—அதனுடைய செயல் முறைத் திட்டங்களைப்பற்றி — அறிந்துகொள்வதற்கு—நம் பக்கத்திலே வந்து நின்றுகொள்வதற்கு —வடக்கே இருக்கின்ற கட்சிகள் விரும்புகின்றன! நமது கட்டுரைகள்; கொள்கைகள் இன்று பலமொழிகளில் ரகசியமாக மொழி பெயர்க்கப்பட்டும், பகிரங்கமாகச் சிலவும் வடக்கேயும், உலகத்துக்கும் போய்க்கொண்டிருக்கின்றன.

பெரிய புயல் வீசிக் கொண்டிருக்கின்ற நேரத்திலே நாம் தமிழ் நாட்டிலே ஒரு விளக்கேற்றி வைத்தோம்! அது அணைந்துவிடுமோ என்றுகூட அங்கலாய்த்துக் கொண்டிருந்தோம், ஆனால், அது இன்று குன்றின் மேலிட்ட தீபமென உலகமெல்லாம் தெரிகிறது! தெரிவது மட்டுமல்ல; உலகத்தின் பார்வையையே தன் பக்கத்தில் இழுத்து வந்திருக்கிறது!

ஃ

ஜனநாயக முறைகள்

இரா. செழியன், எம்.ஏ.

திருவாரூர் மாநாட்டின் சிறப்பைக் காண நாம் மட்டுமல்ல; நமது கழகத்தின்பால் அனுதாபம் கொண்டவர்கள் மட்டுமல்ல; மாற்றுக் கட்சித் தோழர்கள்கூட, கதராடையணிந்த காங்கிரஸ் கனதனவான்கள்கூட, வர விரும்புகிறார்கள் என்பது நமக்குத் தெரியும். மற்றவர்களின் சந்தேகத்திற்கு ஆளாகாமல் எப்படி வருவது என்பதுதான் அவர்களுடைய மனக்கிலேசமாக இருக்கிறது!

இவ்வளவு பெரிய மக்கள் கூட்டம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எப்படிக் கூடுகிறது?

இந்த நாட்டு அரசியலிலேயே இழிச் சொற்களுக்கென அதிகமாக ஆளாக்கப்பட்ட கட்சி திராவிட முன்னேற்றக் கழகமாகும். அது பிறந்தபொழுது, அதை வாழ்த்தி வரவேற்பார் யாருமில்லை. அழிந்துவிடும் என ஆரூடம் கணித்தவர்களும்; சிதறிவிடுவார்கள் எனச் சிந்தனையில் களிப்பு அடைந்தவர்களும்தான் இந்த நாட்டில் இருந்தார்கள். அதன் தளர் நடைப் பருவத்தில் சந்தித்த தடியடிகள், துப்பாக்கிப் பிரயோகங்கள், அடக்குமுறைகள் சொல்ல முடியாதன!

பிரிவினை கோரும் பிற்போக்காளர் என்றும், நாட்டைப் பிரித்திடும் நாசகாலர் என்றும் தூற்றப்படுகிறோம்!

கடந்த ஜனவரி 6-ந்தேதிக்குப்பின்—பெரியதொரு அடக்குமுறைக்குக் கழகம் ஆளாக்கப்பட்டபின்—நமது கழகத்தைப்பற்றிப் பயங்கரமான முறையில் "பலாத்காரவாதிகள்! அமைதிக்கு ஆபத்தானவர்கள்! அவர்களைப் பேச அனுமதித்திருந்தால், பேராபத்துதான்!" என்றும் 'நாட்டில் பரவிவரும் விஷவாடை" என்றும் நாடாளும் மந்திரிகள் நம்மைப்பற்றிச் சொன்னார்கள்!

மக்கள் பலத்தை நம்பித்தான் நமது கழகம் ஆரம்பிக்கப்பட்டது; மக்கள் பலத்தின்மீதுதான் அது வளர்ந்து வருகிறது! எனவே மற்ற சக்திகள் அதை எதிர்க்கின்ற நேரத்தில் அதிகார பலமும், அடக்குமுறை பலமும், பண பலமும், பத்திரிகை பலமும் கட்டுப்பாடாக கழகத்தை எதிர்த்த நேரங்களில், மக்கள் பலம்தான் கழகத்துக்கு உறுதுணையாக இருந்தது!

இதைப்போலத்தான், அரசியல் அமைப்பில், மக்கள் பலத்தையும் மக்கள் நலத்தையும் மனதிலே வைத்து வளர்கிற முறைதான் ஜனநாயகம் என்பதாகும்!

மற்ற அரசியல் கட்சிகளில் ஜனநாயகத்தில் அதிக நம்பிக்கை வைத்துள்ளது நம்முடையதுதான்! அந்த காரணத்தாலதான், நாம் வேறு ஒரு கழகத்திலிருந்து வெளியேறவேண்டிய அவசியத்துக்குத் துரத்தப்பட்டோம்! அதனால்தான் வசதிகள் எதுவுமற்ற நிலையில் சாமான்யர்களால் ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கழகம் இவ்வளவு வளர்ச்சியை அடைந்துள்ளது!

மாநாட்டுத் தலைவர் மதியழகன் அவர்களும், தோழர் என். வி. நடராசன் அவர்களும் குறிப்பிட்டார்கள், பதினெட்டு ஆண்டுகளுக்குமுன் இதே திருவாரூரில்தான் ஜஸ்டிஸ் கட்சி மாநாட்டில் திராவிட நாட்டுப் பிரிவினைத் தீர்மானம் முதல் தடவையாகக் கொண்டுவரப்பட்டதென்று!

பதினெட்டு ஆண்டுகளுக்கு முன் நடந்த மாநாட்டுக்கும் இன்று நடைபெறும் மாநாட்டுக்கும் எவ்வளவு வேறுபாடுகள்!

அன்று ஜரிகைக் குல்லாய்களும், ஜமீன்தார்களும் இருந்தார்கள்; செட்டிநாட்டு அரசர்களும், பித்தாபுரம் ராஜாக்களும் இருந்தார்கள்; சீமான்களும் செல்வந்தர்களும் நிறைய இருந்தார்கள்! இன்று அத்தகையோரை இங்கே காணமுடியவில்லை; சாமான்யர்கள்தாம் இங்கு இருக்கிறார்கள்!

உழைத்துப் பிழைப்பவர்களும்; உழவர் குடிப் பெருமக்களும்; கடை கண்ணி வைத்திருப்பவர்களும்; அதிக வசதியில்லாதவர்களும் இங்கே வந்திருக்கிறார்கள்!

சீமான்கள் இல்லை—சிரித்த முகத்தினர் இருக்கிறார்கள்! இவர்கள் சிந்தையில் பட்டம் கிடைக்குமா; பதவி கிடைக்குமா என்ற நோக்கம் இல்லை—என்றைக்கு திராவிடம் பிரியும்; நமது கவலைகள் தீரும் என்ற எண்ணம்தான் இருக்கிறது!

"அரண்மனையில் இருந்த அரசியலை ஆலமரத்தடிக்குக் கொண்டுவந்தேன்" என்று அறிஞர் அண்ணா அவர்கள் கூறுவார்கள்! அரண்மனையில் இருந்த அரசியலை ஆலமரத்தடிக்குக் கொண்டுவருவதுதான் ஜனநாயகம் என்பதும்!

வரலாற்றில் ஆட்சிமுறை பல காலங்களில் பலவிதமாக இருந்திருக்கிறது! பலமுள்ளவர்கள் பலமில்லாதவர்களை அடக்கினார்கள்! வலிவான கரமுடையவன் வலிவு இல்லாதவனை அடக்கினான்! வாள் பிடித்தவன் வாள் பிடிக்கத் தெரியாதவனை மிரட்டினான்! வாளும் வேலும் வில்லும் அம்பும் பெற்றவர்கள் மற்றவர்களை அடக்கி ஆண்டார்கள்! வீரர்கள் மற்றவர்கள்மீது ஆட்சி செலுத்தினார்கள்; வீரர் தலைவர்கள் ஆட்சி நடத்தினார்கள்; மன்னர்களாக மாறினார்கள்! ஒரு மன்னனுக்குப் பின், அந்த மன்னனுடைய மகன் பட்டத்துக்கு வரும் முறை ஏற்பட்டது! அரசனுக்குப் பின் மற்றொரு அரசன்—ஓர் அரச பரம்பரைக்குப் பின் மற்றொரு அரச பரம்பரை என வந்தது!

மன்னர்கள் ஆண்டார்கள்!
மன்னர்களை அடக்கி மதவாதிகள் ஆண்டார்கள்;
மகான்கள் ஆண்டார்கள்;
சித்தர்கள் ஆண்டார்கள்;
ஜீவன் முக்தர்கள் ஆண்டார்கள்! மக்களுக்கு மட்டும் ஆட்சி முறையில் பங்கு இல்லாமலிருந்தது!

பிரெஞ்சுப் புரட்சிக்குப் பின், மக்களை மக்களே—மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு—மக்கள் நம்பிக்கையையும்பெற்றவர்களாலேயே ஆட்சி முறை நடைபெறுவது என்ற முறை ஏற்பட்டது! மன்னர் பரம்பரை அகற்றப்பட்டது! சமத்துவம், சகோதரத்துவம், விடுதலை என்ற அடிப்படை உரிமைகள், பிரெஞ்சுப் புரட்சிக்குப் பின் வலியுறுத்தப்பட்டன! தற்காலத்திய ஜனநாயக முறைக்கு ஆரம்பம் அங்கே ஏற்பட்டது என்று கூறலாம்!

ஜனநாயக முறையில் ஆரம்பிக்கப்பட்ட பல ஆட்சி முறைகள், அப்படியே நீடித்து ஜனநாயக ஆட்சியாக இல்லை! அவைகளும் பல தடவைகள் வழி தவறி சென்றுள்ளன; பல தடவைகள் வலுவுள்ளவர்களால் கைப்பற்றப்பட்டுள்ளன!

பிரெஞ்சு நாட்டில் ஆரம்பிக்கப்பட்ட ஆட்சி, பின்பு நெப்போலியன் என்ற வீரனுக்குப் பணிந்துவிட்டது என்பது வரலாற்றைப் படித்தவர்களுக்குத் தெரியும்!

அதேபோல், ஜெர்மனியில் இருந்த குடியரசு ஆட்சியை இட்லர் என்பவன் கைப்பற்றி சர்வாதிகார ஆட்சியை உண்டாக்கினான்!

ஜெர்மனியிலிருந்த குடியரசைப் பற்றி சரித்திர ஆசிரியர்கள் மிகவும் பெருமையாகச் சொல்லுவார்கள்! அங்கிருந்த வைமார் ரிபப்ளிக் என்பது, உலகிலேயே மிகச் சிறந்த ஜனநாயக முறைகள் நிறைந்த—அரசியல் சட்டத்தைப் பெற்றிருந்தது! ஆனால் அந்த ஜனநாயக முறையினாலேயே தேர்ந்தெடுக்கப்பட்ட இட்லர், தனது கட்சிக்குக் கிடைத்த பெரும்பான்மை பலத்தை வைத்துக் கொண்டு, சட்டத்தில் இருந்த சந்து பொந்துகளில் நுழைந்து, ஆட்சி அதிகாரம் முழுவதையும் கைப்பற்றிக் கொண்டு, சர்வாதிகாரியானான்!

இந்தியத் துணைக் கண்டத்தில் ஜனநாயக முறையில் ஆட்சி நடைபெறுவதாகக் கூறப்படுகிறது! உலகத்திலேயே மிகப் பெரிய அரசியல் சட்டம், தேர்தல்கள், அரசியல் சபைகள் இங்கு இருக்கின்றன! ஆனால் ஜனநாயக முறைகள் மட்டும் ஜனநாயக ஆட்சியைத் தந்துவிடாது!

ஜனநாயக ஆட்சிக்குப் பதில், புதியதொரு சர்வாதிகார — புதியதொரு ஏகாதிபத்திய ஆட்சி டில்லிப் பட்டணத்தில் உண்டாகியிருக்கிறது; மற்ற பகுதிகளை அடக்கியாளும் ஆட்சி—மற்ற மொழிகளை அடக்க நினைக்கும் ஆட்சி வளர்ந்து வருகிறது! வெள்ளைக்கார ஏகாதிபத்தியம் இருந்த இடத்தில், வடநாட்டு ஏகாதிபத்தியம் அமர்ந்துள்ளது! ஆட்சிப் பொறுப்பு மாறியுள்ளது; ஆள்பவர்களின் நிறமும் பெயரும்தான் மாறியுள்ளன; ஆட்சி முறைக்கு உள்ள பெயர் மாறியிருக்கிறது; ஆனால் பழைய ஏகாதிபத்திய முறைதான் நீடிக்கிறது!

ஜனநாயக ஆட்சியில் இவர்களுக்கு உண்மையில் நம்பிக்கை இருந்தால், ஒவ்வொரு பகுதிக்கும் — ஒவ்வொரு இன மக்கள் கூட்டத்துக்கும்—தங்கள் ஆட்சியைத் தாங்களே நடத்திக் கொள்ள உரிமைகள் தரப்பட்டிருக்க வேண்டும்! ஆனால் இந்திய துணைக் கண்டத்திலேயிருக்கும் பல வகையான மாறுபட்ட வரலாற்றாலும், பண்பாட்டாலும், மொழியாலும் மாறுபட்ட பல பகுதியினரும், ஒரே ஆட்சியின் பெயரால், டெல்லி ஆதிக்கத்தின் இரும்புப் பிடியின் கீழே கொண்டு வரப் பட்டுள்ளனர்!

ஜனநாயக ஆட்சியில் இவர்களுக்கு நம்பிக்கை இருந்திருந்தால், ஆங்காங்கு காணப்படும் தேசிய உணர்ச்சிகளை அழிக்க முற்படமாட்டார்கள்!

ஜனவரி 6-ந் தேதி திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு விதிக்கப்பட்ட தடை ஜனநாயகத்துக்கு விதிக்கப்பட்ட தடை ஆகும்! திராவிட முன்னேற்றக கழகத்தினர் சிறையில் தள்ளப்பட்டனர் என்றால், உண்மையில், ஜனநாயகம்தான் சிறையில் தள்ளப்பட்டது! மக்களின்மீது விழுந்த ஒவ்வொரு தடியடியும் ஜனநாயகத்துக்குத் தந்த கசையடியாகும்!

அதிகார பலத்தாலும், அடக்குமுறை உதவியாலும், வளர்ந்துவரும் கழகத்தை அடக்கிவிடலாம் என ஆள வந்தார்கள் நினைத்தால், அவர்கள் பெரியதொரு தப்புக் கணக்குப் போடுகிறார்கள் என்று எச்சரிக்க விரும்புகிறேன்! இவர்களைவிட அதிகமான பலத்துடன்தான் வெள்ளையன் ஏகாதிபத்தியம் இருந்தது; இவர்களைவிட அதிகமான துப்பாக்கிகளையும், பீரங்கிகளையும், யுத்தக் கப்பல்களையும், தளவாடங்களையும் வைத்துக் கொண்டுதான் அவன் மிரட்டினான்; முடியவில்லை! அவன் பார்த்துக் கொடுத்துவிட்டுப் போன துப்பாக்கிகளையும், தளவாடங்களையும் வைத்துக்கொண்டுதான் இவர்கள் நம்மை மிரட்டுகிறார்கள்; இவர்களும் படுதோல்வியடைவது நிச்சயம்!

அடக்குமுறையால் நம்மை அழித்துவிட நினைப்பவர்களுக்கு அன்றைய தினம் காந்தியார் சொன்னதை நினைவூட்ட விரும்புகிறேன். ஆட்சி பீடத்தில் ஏறியதும் காந்தியார் சொன்ன பலவற்றை அவர்கள் மறந்துவிட்டார்கள்; எனவே அவர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

ஒத்துழையாமைபோராட்டத்தை நடத்திவிட்டு, மிகக் கடுமையான அடக்குமுறைகளுக்கு விடுதலை இயக்கம் ஆளாக்கப்பட்டு, கடைசியாக 1931—ஆம் ஆண்டு இறுதியில், லண்டன் மாநகரத்தில் கூடிய வட்டமேஜை மாநாட்டில் கலந்துகொண்ட காந்தியார், வெள்ளைக்கார ஏகாதிபத்தியவாதிகளின் முன் கூறினார்:

"உங்களுடைய பிரதிநிதி லார்டு இர்வின் தன்னால் முடிந்தவரையில் அடக்குமுறைகளையும் தடையுத்தரவுகளையும் வீசிப் பார்த்துவிட்டார்! அவற்றை எதிர்த்துக் கஷ்ட நஷ்டங்களைத் தாங்கிக்கொள்ள ஆயிரக் கணக்கான ஆண்களும், பெண்களும், சிறுவர்களும் இருக்கின்றார்கள் என்பது இதற்குள் அவருக்குத் தெரிந்திருக்கும் என நினைக்கிறேன். அடக்குமுறைச் சட்டங்கள் எவ்வளவுதான் வீசப்பட்டாலும், தடையுத்தரவுகள் எவ்வளவுதான் தரப்பட்டாலும், விடுதலை காணத் துடிக்கும் ஒரு மக்களின் உள்ளக் குமுறலை—எழுச்சி வெள்ளத்தைத் தடை செய்ய யாராலும் முடியாது!"

காந்தியார் அன்று சொன்னது, இன்றைய நிலைமையில் அப்படியே இங்கு ஒத்துவருகிறது!

லண்டனிலிருந்த வெள்ளைக்கார ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதிகளாக லார்டு இர்வின் இருந்ததுபோல, டில்லியிலிருக்கும் வட நாட்டு ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதிகளாக கவர்னர்களும் காமராசர்களும் இருக்கிறார்கள், இன்று.

காந்தியார் எச்சரித்ததைப் போல, "எவ்வளவுதான் அடக்குமுறை வீசப்பட்டாலும், தடை யுத்தரவுகள் போடப்பட்டாலும், விடுதலை காணத் துடிக்கும் எங்களுடைய உள்ளக் குமுறலை—எழுச்சி வெள்ளத்தைத் தடை செய்ய யாராலும் முடியாது!" என்று நாமும் ஆள வந்தார்களுக்கு எச்சரிக்கை தர விரும்புகிறோம்.

இந்த நாட்டு மக்களுக்காக —இந்த நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காக —உரிமைகளுக்காக—மக்கள் பலத்தில் நம்பிக்கை வைத்து, "நாமெடுத்தப் போராட்டம் வெற்றி பெறும்! இன்பத் திராவிடம் அமைந்தே தீரும்!" என்ற நல்ல உறுதிப்பாட்டுடன் திராவிட முன்னேற்றக் கழகம், ஒரு விடுதலை இயக்கமாக-ஒரு ஜனநாயக அமைப்பாக பணியாற்றுகிறது. அந்த வகையில் அது வெற்றி பெறும் என்பதும் நிச்சயமே! ஃ



நீண்ட துயில் நீத்துக் கிளம்பிய மறக் குலத்தினர் பவனியில் ஒரு பகுதி!

சட்டமும் சமுதாயமும்

தில்லை வில்லாளன்: எம். ஏ.

நாடு என்பது நான்கு முக்கிய உறுப்புகளைக் கொண்டதாகும். மக்கள், நிலப்பரபபு, ஆடசி, அதிகாரம் என்ற நான்கும் சேருகிற பொழுதுதான் நாடு என்று அழைக்கிறோம். இந்த உறுப்புகளில் ஒன்றோ இரண்டோ குறைந்தால் நாடு என்ற பெயர் போய்விடும்.

இந்த நான்கு உறுப்புகளில் முக்கியமானது மக்கள்; அதாவது சமுதாயமாகும். சமுதாயம் என்று பொதுவில் எடுத்துப் பேசுவதைவிட, திராவிட சமுதாயம் என்று எடுத்துப் பேசுவதே பொருத்தமானதாகும்.

திராவிட சமுதாயத்தின் முன்னாள், இந்நாள் நிலையை வரலாறு துணைகொண்டு அறிகிறோம். நமது முன்னோர் இந்நாட்டை ஆண்ட சேர, சோழ, பாண்டிய பரம்பரையைச் சேர்ந்தவர்களாவர். நாமோ ஆளப்படுவோராக இருக்கிறோம். வீரர் பரம்பரை அன்று; கோழையர் கூடாரம் இன்று! கடல் கடந்து வணிகம் அன்று; கடல் தாண்டிச் செல்வதே பாவம், இன்று! சென்றாலும், கூலிகளாய்ச் செல்கிறோம், இலங்கைக்கு, மலேயாவுக்கு! இலக்கியங்களை மலை போல் குடித்தனர்; புலவர், அன்று; கையெழுத்துப் போடத் தெரிந்தவர் எண்ணிக்கையே 100-க்கு 14 இன்று! இப்படி திராவிட சமுதாயத்தின் உயர்வையும், தாழ்வையும் உணர்கிறோம்.

திராவிட சமுதாயம் இப்படி வீழ்ந்துவிட்டது—இதனை மீண்டும் உயர்த்த வழி என்னவென ஆராய்ந்தோம். மக்கள் இழிந்தவர்களாக — தாழ்த்தப்பட்டவர்களாகப் போனதிற்குக் காரணம், அவர்கள் மன நிலை! அம்மனதிலே புரட்சி ஏற்பட வேண்டும் என்று முடிவுக்கு வந்தோம். முப்பது ஆண்டு காலமாகப் பிரச்சாரம் செய்தோம்; செய்கிறோம்.

சமுதாயத்தைத் திருத்தியமைக்க இரண்டு முறைகள் உண்டு. ஒல்று பிரச்சாரம்—மற்றொன்று; சட்டம்!

சமுதாயத்தைத் திருத்த பிரச்சாரம் மட்டும் போதுமா என்று கேட்டால், போதாது என்கிறோம். அதுபோலவே சமுதாயப் புனரமைப்பிற்கு சட்டமே போதும் என்றால், அதுவும் தவறான முடிவாகும் என்பதே நம் கருத்து. இரண்டு சக்திகளும் தொடர்ந்து இடைவிடாது பணியாற்றவேண்டும். அப்படிப் பணியாற்றினால்தான் சமுதாயத் திருத்தப்பணி வெற்றிபெறும்.

திராவிட முன்னேற்றக் கழகம் இந்த நிலைமையை நன்குணர்ந்துதான், சென்ற மாநில மாநாட்டில் சட்ட சபைக்கு நாமும் செல்ல வேண்டும் என்று முடிவு செய்தது. அதன்படி போட்டியிட்டது. 15, சட்ட சபை உறுப்பினர்களையும், 2 பாராளு மன்ற உறுப்பினர்களையும் தேர்ந்தெடுத்தனர் மக்கள்.

நம் வீட்டுத் தாய்மார்கள் குழம்பு தயாரிக்கிறார்கள். உப்பு, மிளகாய், புளி இவற்றைக் கரைத்து வைத்து விட்டால் மட்டும் குழம்பாகிவிடுவதில்லை. அடுப்பில் கொதிக்க வைத்து, தாளித்து இறக்கினால்தான் வாயுக்கு ருசியாக இருக்கிறது.

அதுபோலத்தான் பிரச்சாரத்தினால் உருவாக்கப்படுகின்ற ஒரு நிலையை, சட்டத்தின்மூலம் உறுதி செய்யலாம். அதற்கு வாய்ப்பளிப்பதே சட்டசபை நுழைவாகும்.

எதிர்க் கட்சி — எதிர்ப்புக் கட்சி—என ஆளுங் கட்சியை எதிர்ப்பவர்களில் இரு ரகத்தவர் உண்டு. அடிப்படைக் கொள்கைகளில் நேர் எதிரிடையாக உள்ளவர்களே எதிர்க் கட்சியாக அமர முடியும். வெறும் பதவிச் சண்டை காரணமாக எதிர்ப்புறம் இருப்பவர் எதிர்ப்புக் கட்சியைச் சேர்ந்தவர்களே! ஏற்கனவே சி. ஆர். சி. என்ற பெயரிலும், இப்பொழுது என். டி. சி. என்ற பெயரிலும் உலவும் கட்சி இந்த ரகத்தைச் சேர்ந்ததே! ஆனால் தி. மு. க. தான் உண்மையான எதிர்க் கட்சியாகும்!

சட்டங்களை இயற்றுவது என்பது ஆளுங் கட்சியாலேதான் முடியும். "நீங்கள் பதினைந்து பேர் இருந்து கொண்டு என்ன செய்வீர்கள்?" என்று கேட்கக் கூடும். சட்டங்களை இயற்றுவதும், இயற்றுவிப்பதும் ஒன்றே! செய்வினை, செயப்பாட்டுவினை என்று தமிழ் இலக்கணம் கற்றோர் கூறுவர். மன்னன் மணி மண்டபத்தைக் கட்டினான் என்றால், மன்னனே கட்டுவதில்லை; தன் ஆட்களைக் கொண்டு கட்டினான் என்று பொருள்! அதுபோல், எதிர்க் கட்சியில் இருந்தாலும், தேவையான சட்டங்களை ஆளுங் கட்சி மூலமே செய்து கொண்டு வரச் செய்யலாம்; கொண்டு வரும் சட்டங்களையும் திருத்தலாம்! ஆகவே, சட்டசபை நுழைவால் நாம் இரண்டாவது சக்தியையும் பெற்றுள்ளோம்.

ஆகவே, சமுதாய திருத்த வேலையில் பிரச்சார சக்தியும் வேலை செய்கிறது. எனவே, திராவிட சமுதாயம் மிக விரைவில் முன்னேறும் என்ற நம்பிக்கை நாட்டோருக்கு ஏற்பட்டுள்ளது. ஃ

முன்னேறும் சமுதாயம்

ஏ.வி.பி. ஆசைத்தம்பி . எம்.எல்.ஏ

ஒரு நாடு முன்னேறுகிறது; நாட்டு மக்களுடைய வாழ்க்கைத் தரம் முன்னேறுகிறது; தகுதி முன்னேறுகிறது; திறமை முன்னேறுகிறது என்றால்—அதற்கு அடிப்படையிலே முன்னேற்றம் காண வேண்டிய ஒன்று இருக்கிறது என்றால்—அது சமுதாயம்தான்!

உலக நாடுகளிலே உள்ள பல சமுதாயங்கள் மிகத் தாழ்ந்த நிலையில் இருந்து—குறுகிய காலத்தில் முன்னேறி இருப்பதை — முன்னேறி வருவதை காண்கிறோம். ஆனால், உலகில் மிகத் தொன்மையான சமுதாயமாகவும், உயர்ந்த பண்புள்ள சமுதாயமாகவும் விளங்கிய திராவிட சமுதாயம் மட்டும் வேகமாக முன்னேற முடியாத நிலையிலே அழுத்தி வைக்கப்பட்டுள்ளது!

திராவிட சமுதாயம் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே அரசாங்கத்தையும், உயர்ந்த மொழியையும், இலக்கண இலக்கியத்தையும் கொண்டிருந்தது! எந்த பாகுபாடுமில்லாமல் ஒரே இனமாக இருந்துவந்தது!

அப்படி நினைக்க நினைக்க மகிழ்ச்சியைத் தரத் தக்க மகோன்னத நிலையில் இருந்த சமுதாயம், இன்று பழங்கதை யாவானேன்? மாண்டு போன மேதைக்குச் சிலை வடித்துக் களிப்படைவது போல, பண்டைய சிறப்பை ஞாபகப்படுத்திப் பார்த்து மட்டுமே திருப்தி அடையத் தக்க நிலைமை ஏன் ஏற்பட்டது?

ஒரே குலம் என்ற உறுதிப்பாடு ஒருநாள் குலைந்தது; நான்கு குலங்கள் — நம் பெருமையைக் குலைக்கும் ஜாதிப் பிரிவினைகள் வந்து புகுந்தது, ஆரியத்தின் ஆபத்தான பிரவேசத்தால்! அவ்வளவுதான்; பண்புள்ள சமுதாயம் படுகுழிப் பயணம் துவங்கிற்று! சீரும், சிறப்பும், சிந்தை குளிரச் செய்த மேம்பாடும் சின்னா பின்னமாகி விட்டது!

அந்த நேரத்திலேதான் இந்நிலை இருக்கலாமா; இனியும் வளரலாமா; அழித்திடத் துணிவு வேண்டாமா— என்ற கேள்வி எழுந்தது! பழமைப் பித்தர்களது பாய்ச்சலுக்கும்—வைதீக புரியினரின் சாபத்திற்கும் இடையில் ஓயாது கேட்டுக் கொண்டே இருந்தது, பகுத்தறிவுவாதிகளின் அந்தக் கேள்வி!

சரியான பதில் கிடைக்கவில்லை!

ஆனால் தெளிவான பாதை ஒன்று புலப்பட்டது!

பாதையிலே நடைபோட்டது—நீண்ட நெடும் பயணத்திலே ஈடுபட்டது அறிவியக்கம்—திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூலக் கட்சி!

பாதையிலே குறுக்கிட்ட இடுக்கண்கள் இடையூறுகள்—இன்னல்கள் அல்லல்கள் ஏராளம்! ஆனால் இடர்பாடுகளுக்கு மத்தியிலேதான்—அந்த சுவை மிக்க எதிர்ப்பிலேதான் — இலட்சியம் மலரமுடியும் என்ற பொதுவாழ்வுப் பணியின் தத்துவத்தை—ஒரே இலக்கணத்தை நன்குணர்ந்த பகுத்தறிவுவாதிகள் அச்சமின்றி எடுத்த பணியிலே புதுமுறுக்குடன் ஈடுபட்டார்கள்!

வெற்றியும் புலப்பட்டது! திராவிட சமுதாயம் முன்னேற, முதலில் சமுதாய விடுதலைதான் வேண்டும் என்பதை உணர்ந்தது! ஆகவேதான் 'பிராமணரல்லாதார் கட்சி' என்ற பெயரிலே நீதிகேட்கும் நீதிக்கட்சியாக—சமுதாய விடுதலை இயக்கமாக மக்கள் மன்றத்திலே தோன்றியது! எதிர்ப்புகளைத் துச்சமென மதித்து—எள்ளுநரை, ஏகடியங்களைக் கெள்ளி எறிந்து — சாய்ந்திருக்கும் புலி மயன்றாலும், பாய்ந்துவரும் . மான் குட்டிகளுக்கு மரணமுகட்டுக்குத் தான் வழிகாட்டும் என்பது போல—மாசு கற்பிக்க வந்தவர்களைத் தூசென மதித்துப் பணியாற்றியது; அயராது தொண்டு செய்தது; ஜாதி வெறி தொலைய—நம் சமுதாயத்தின் தீராத வியாதியாம் தீண்டாமை விலகப் பாடுபட்டது!

சமுதாய விழிப்புக்குப் பாடுபட்ட அந்த வழியிலே வந்தவர்களாகிய நாம்தான் நாட்டில் சமுதாய விடுதலை பெற்று வருகிற மக்களி

னிடையே இன்று அரும்பு விட்டிருக்கிற நாட்டு விடுதலைக்குப் போராடும் தூதுவர்களாக இருக்கிறோம்!

மக்களின் தூதுவர்கள்தான் நாம்; ஆனால் விழிப்பு கண்டு வெதும்பிக் கொண்டிருக்கிற ஆட்சியினருக்கோ வேண்டாதவர்களாகக் காண்கிறோம்!

நாம் எழுப்பிய "திராவிட நாடு திராவிடருக்கே!" என்ற உரிமை முழக்கம் பழுக்கக் காய்ச்சிய ஈயத்தைப்போல அவர்களது செவிகளிலே பாய்ந்தது; காதை இறுகமூடிக்கொண்டு நடந்தார்கள்! ஆனால் இன்றோ கண்டிப்பாக நமது இலட்சியத்தைக் கேட்டுத்தான் தீரவேண்டும் என்கிற நிர்ப்பந்த நிலைமைக்கு ஆளாகிவிட்டார்கள். நாம் சட்ட மன்றத்துக்குள் நுழைந்துவிட்ட காரணத்தால்!

திராவிட நாட்டுப் பிரச்சினைக்குப் பின்னால்தான்—திராவிடத் தனியரசு தேவை என்ற உரிமைக் குரலுக்குப் பின்னால்தான் பாக்கிஸ்தான் பேச்சு வந்தது! இடையிலே பூசல்கள் நிறைய நேர்ந்தது என்றாலும், இன்று 'பாக்கிஸ்தான்' இருக்கிறது! ஆனால் திராவிடநாடு இல்லை!

அதற்கு என்ன காரணம்? இதை யோசிக்கப் போகிற நேரத்தில்தான் ஒரு நாட்டு முன்னேற்றத்திற்குத் தேவையான சமுதாய முன்னேற்றத்தின் அவசியம் புலப்படுகிறது.

நாம் பார்க்கிறோம்; இஸ்லாமிய சமுதாயம் அசைக்க முடியாத ஒற்றுமையுடனும், அழிக்க முடியாத கட்டுப்பாட்டுடனும் இருக்கின்ற காட்சியை!

அத்தகைய ஒரு சமுதாய விழிப்பு நமக்குத் தேவை என்பதை உணர்ந்த காரணத்தால்தான் திராவிட முன்னேற்றக் கழகம் சமுதாய சீர்திருத்தப் பணியிலே பல்லாண்டுகள் ஈடுபட்டு—எழுச்சியை ஏற்படுத்தி—இன்று சுதந்திரத்திற்குப் பாடுபடும் தேசியக் கட்சியாக—தென்னகத்தின் தனிப் பெரும் தலைவர் அறிஞர் அண்ணாவின் தலைமையிலே பணியாற்றி வருகிறது!

இந்த நேரத்திலும் கேட்கிறார்கள், "திராவிட முன்னேற்றக் கழகமா? அதில்யார் இருக்கிறார்கள்?" என்று! தெருவிலே உருண்டு கிடக்கும் திண்ணைத் தூங்கிகள் பேசவில்லை; ஏதும் புரியாத ஏனோதானோக்கள் கேட்கவில்லை; அமைச்சர்கள் பேசுகிறார்கள்! இந்த நாட்டின் தூண்களே தாங்களெனச் சொல்லிக் கொள்ளும் ஆளும் கட்சியினர்தான் கேட்கின்றனர்!

அவர்களது மூடிக் கிடக்கும் கருத்துக் கண்களை நாம் திறக்கிறோம்! "யார் இருக்கிறார்கள் என்று கேட்கிறாயே; பார் இதோ! பல்லாயிரக் கணக்கிலே-இலட்சக் கணக்கிலே — கூடியிருப்பதை! இந்த மாநாட்டிலே மட்டுமல்ல; கொள்கையைக் காக்க எந்த இடத்திற்குப் போக வேண்டுமென்றாலும் இந்தப் பெரும் படை—தானைத் தலைவனும் அண்ணாவின் ஆணைக்குட்பட்டுக் கூடும்! எதிரிகளைச் சாடும்! வெற்றியை நாடும்!" என்று எடுத்துரைக்கிறோம்!

இயக்கத்திலே இன்று இலட்சோப இலட்சம் வாலிபர்கள் இருக்கிறார்கள்! மாணவர்கள்—கலைஞர்கள்—பாட்டாளிகள்—நடுத்தர வர்க்கத்து மக்கள் இருக்கிறார்கள்! விடுதலைப் போராட்டத்திலே குதித்திடத் தயாராக இருக்கிறார்கள் இன்று! வெற்றி கிடைக்கு மட்டும் விழிமூடாது காத்திருக்கவும் தயாராக இருக்கிறார்கள்! ஃ

மேடையில் தலைவர்கள்!



மொழிப் போராட்டம்

பேராசிரியர் க. அன்பழகன் எம்.எல்.ஏ.

இன்றைய தினம் தென்னகத்தின் அரசியல் வானிலே கப்பிக் கிடக்கின்ற பனி மூட்டம்தான் இந்தி மொழிப் பிரச்சினை!

மொழிப் பிரச்சினை சாதாரணமாக நாட்டில் வளர்ந்து இருக்கின்ற-மொழிகளுக்கு இடையே அடைந்திருக்கின்ற வளர்ச்சியினால் ஏற்பட்டிருக்கிற பிரச்சினை அல்ல; அந்த மொழிகளினுடைய சொற்களை எப்படி வழங்குவது என்றதால் ஏற்பட்ட பிரச்சினை அல்ல; அந்த மொழிகளை எப்படி வளர்ப்பது என்பதால் ஏற்பட்ட பிரச்சினை அல்ல; இலக்கியங்களை அந்த மொழியில் எப்படி உருவாக்குவது என்ற சிந்தனையினால் ஏற்பட்ட பிரச்சினையல்ல; எந்த மொழியினால் இந்த நாட்டு மக்களை எல்லாம் ஒன்று சேர்த்து ஆளலாம் என்ற பிரச்சினை! ஒருமொழி, ஆதிக்கத்திற்கு ஆசைப்பட்டு நுழையவும், ஒரு மொழி அதனிடமிருந்து தப்பி, தன்னைக் காப்பாற்றிக் கொள்ள—தன் உரிமையைப் பாதுகாத்துக்கொள்ளவும் விரும்புகிறதாலே விளைந்த பிரச்சினை!

இதைத் தீர்த்து வைப்பதற்கு மிகப் பெரிய இலக்கிய மேதைகள் கருத்து மட்டும் ஆற்றல் படைத்ததாக இல்லை. மொழிப் பிரச்சினை அரசியல் வாதிகள் தலையிடாமல், அதில் ஆதிக்கம் பெற்றவர்களின் பேச்சுக்கு இடமில்லாமல், நல்ல சிந்தனையாளர்கள் கூடித் தீர்த்து வைக்கக் கூடிய கட்டத்தில் இன்றைய தினம் இல்லை.

அதனாலேதான், இந்தப் பிரச்சினையில், இலக்கியக் கட்டத்தைத் தாண்டி — மொழியியலைத் தாண்டி— ஆராய்ச்சிக் கட்டத்தைத் தாண்டி — பேரறிஞர்களின் கூட்டத்தைத் தாண்டி— பொதுமக்களின் ஆதரவைப் பெற்றுத்தான் இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கக் கூடியதாக அரசியல் அமைப்பு ஆக்கப்பட்டிருக்கிற காரணத்தால்தான் தி. மு. கழகம் இந்தப் பிரச்சினையை ஓர் உயிர்ப் பிரச்சினையாக—விடுதலைப் பிரச்சினையாக—மக்கள் பிரச்சினையாகக் கருதி நாட்டிலே பாடுபட்டு வருகிறது.

அப்படிப்பட்ட தி. மு. கழகத்தின்மீது மாசு கற்பிக்க வேண்டும் என்ற கருத்தோடுதான், அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள், "இந்தியை அண்ணாதுரை ஆதரித்து விட்டார்!" என்று குறிப்பிட்டதாகப் பத்திரிகைகளில் செய்தி பார்த்தோம்.

நாட்டு மக்களிடையே சந்தேகம் ஏற்பட்டது. இந்தி எதிர்ப்பிலே முதலில் நின்ற அறிவியக்கத்தின் தூதுவர்கள்—திராவிடத்தின் விடுதலைக்குப் பாடுபடுபவர்கள இந்தியை ஆதரித்துவிட்டார்களா என்று அதிர்ந்துபோயினர்.

ஆகவேதான் அறிஞர் அண்ணா அவர்கள் அந்த விஷப் பிரச்சாரத்தைக் கண்டிக்கும் பாணியில் தெளிவான மறுப்பு ஒன்றை வெளியிட்டார்கள்.

"மொழி குறித்து கூடிய சர்வ கட்சிக் கூட்டம் நடைபெற்றது இந்தியைப்பற்றி பேசுவதற்கு அல்ல; பேசுகிற உரிமையே இன்றைய தினம் சென்னை சர்க்காருக்கு இல்லை! அது எப்படியோ பேசப்பட்டு ஒரு காலத்தில் டெல்லியிலே தீர்மானமாகி விட்டது. இனி கூடிப் பேசினால், அது எதிர்ப்பதற்குத் தானே தவிர, ஆதரிப்பதற்கு அல்ல. பேசுவது ஆட்சி மொழியாக ஆங்கிலம் இருக்க வேண்டுமென்பதே தவிர, இந்தியைப்பற்றி பரிசீலிப்பதற்கு அல்ல! எனவே என்னைப் பொறுத்த வரையில் நான் இந்தியை ஆதரிக்க வேண்டிய அவசியம் அங்கே ஏற்படவில்லை; சுப்பிரமணியத்திற்கு ஏற்படவில்லை!" என்று அறிக்கையிலே விளக்கினார்கள்.

வண்ணக் குவியலாய் -
எண்ண ஓவியமாய் -
தயாராகிறது
முத்தாரம்
ஜூலை இதழ்!

அண்ணா அவர்களுடைய அறிக்கைக்கு நியாயமான மறுப்பு-விளக்கம் தரவில்லை அமைச்சர்.

அதற்கு மாறாக, அறிக்கை வெளியானபோது 'அண்ணாதுரை கையெழுத்துக்கூடப் போட்டார்' என்றார். அதற்குப் பிறகு அண்ணாவுக்கே சந்தேகம் ஏற்பட்டுவிட்டது. எங்கே தான் வேறு பிரச்சினையில் கவனம் செலுத்தியிருக்கும்போது, கையெழுத்து வாங்கி விட்டார்களோ; அல்லது கூட்டத்துக்கு வந்தேன் என அறிக்கை ஏட்டிலே வாங்கியிருப்பார்களோ; அதை சுப்பிரமணியம் இப்படிச் சொல்லுகிறாரோ என்று சந்தேகம் ஏற்பட்டது. இரண்டு நாட்களுக்கு பிறகு, "நான் எந்த இடத்திலும் கையெழுத்துப் போடவில்லை; சுப்பிரமணியம் இந்த அளவிற்கு தப்புப் பிரச்சாரம் செய்கிறார்!" என்றார்கள்.

அதற்கும்பிறகு சட்டசபையிலே "அண்ணாத்துரை அப்பொழுது கையெழுத்துப் போட்டுவிட்டு இப்போது இல்லையென்று பிரச்சாரம் செய்கிறார்!" என்று கோபமாகப் பேசினார்கள்.

உடனே அண்ணா எழுந்து, சட்ட மன்ற விதியிலிருந்து மாறாமல், "என்னைப் பற்றி ஒரு தவறான கருத்து தெரிவிக்கப்படுகிறது. நான் எங்கேயும் கையெழுத்துப் போடவில்லை. அந்த சர்வ கட்சிக் கூட்டத்திலே எந்த இடத்திலும் கையெழுத்து வாங்கவில்லை. அது சுப்பிரமணியத்திற்கே தெரியும்!" என்று சொல்லி அமர்ந்தார்கள்.

சுப்பிரமணியம் எழுந்து "அண்ணாத்துரை கையெழுத்துப் போடவில்லை; அந்தக் கூட்டத்திலே கலந்து கொண்டு எல்லாவற்றிற்கும் சம்மதம் தந்தார். மனச்சாட்சி இருக்கிறதல்லவா?" என்று கேட்டார்.

அண்ணா அவர்கள் "என் மனச்சாட்சிப்படி சொல்லுகிறேன். இந்தியை ஆதரித்து நான் சம்மதிக்கவில்லை! கையெழுத்துப் போடவுமில்லை!" என்றார்.

மறுபடி அந்த விவாதத்திற்கென்று தனி நாள் ஒதுக்கப்பட்டபோது, நான் கேட்டேன், "நாங்கள் ஆதரிக்கவில்லை என்று கூறுகிறோம். ஆதரித்தோம் என்பதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது? உங்களது அறிக்கையைக் கையிலே வைத்துக்கொண்டுதான் அண்ணா அவர்கள் இந்தியை ஆதரித்தார்கள் என்று சொன்னீர்கள். அப்படிப் பிரச்சாரம் செய்த நீங்கள் இப்போது என்ன கூறுகிறீர்கள்? கையெழுத்துப் போட்டார்கள் என்றீர்களே; என்ன ஆதாரம்?" என்று.

கடைசியில். இத்தனை போராட்டத்திற்குப் பிறகுதான் சொன்னார், "நான் இப்போது சொல்லிவிட விரும்புகிறேன்! நான் ஒரு இடத்திலேயும் அண்ணாத்துரை இந்தியை ஆதரித்தார் என்று கூறவில்லை. சொன்னதெல்லாம் அண்ணாத்துரை 'மெமரண்ட'த்தை ஆதரித்தார் என்றுதான்! அதைத்தான் இந்தியை ஆதரித்தார் என்று பத்திரிகையிலே தவறாகப் போட்டு விட்டார்கள்!" என்று.

இந்தப் பிரச்சினை சிந்திப்பதற்கு மட்டும் உரியதாக இருக்குமானால், எண்ணிப் பார்த்து முடிவு கட்டுவதாக மட்டும் இருக்குமானால், இந்த நாட்டில் உள்ள பேரறிவாளர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்லிய பிறகும் இது வாதத்திற்குரியதாக இருந்திருக்க முடியாது.

சிந்தனையாளர்கள் தங்கள் முடிவைத் தெரிவித்துவிட்டார்கள். பின்னரும் இந்தப் பிரச்சினை ஒரு முடிவுக்கு வரவில்லை என்று சொன்னால், இந்த அரசு இந்தப் பிரச்சினையை அப்படியே பாதுகாத்து வருகிறது; இந்தப் பிரச்சினையில் நியாயம்வழங்க அது விரும்பவில்லை. எனவே, இந்தப் பிரச்சினை அரசியலோடு இணைக்கப்பட்ட பிரச்சினையாக ஆகிவிட்ட கார

ணத்தால்தான், நாம் இதைப் போராடித் தீர்க்க வேண்டிய வர்களாக இன்றைய தினம் இருக்கிறோம்.

எனவே, இந்தப் பிரச்சினை யைப்பற்றி—தி. மு. கழகம் மிக மிக முற்போக்கான கருத்துக்கள் கொண்ட கழகம் என்ற கருத்தினால் மட்டும் அல்ல—திராவிடத்தை விடுதலை நாடுகளாகக் கருதுகின்ற காரணத்தாலே—தமிழைக் காக்கின்ற கழகம், தெலுங்கைப் போற்றுகின்ற கழகம், கன்னடத்தை ஆதரிக்கின்ற கழகம், மலையாளத்தை விரும்புகின்ற கழகம் என்ற காரணத்தினாலே—நாம் இதுபற்றி மாநாட்டில் பேசி முடிவு செய்து, ஒரு உறுதி பூணவேண்டியவர்களாக இருக்கிறோம்.

1938-39ல் தமிழகத்தில் இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்றது. ஆயிரக் கணக்கான தோழர்கள் சிறை சென்றார்கள்.

அப்போதுமட்டுமா? பிறகும் அதே போர்; மொழிக்கான போர்!

இருந்தாலும், இந்தப் பிரச்சினை இன்னும் தீர்ந்தபாடில்லை. தமிழ்நாடு செலுத்த வேண்டிய காணிக்கையைச் செலுத்தி விட்டது. தமிழ்த் தொண்டர்கள் சிந்த வேண்டிய இரத்தத்தைச் சிந்திவிட்டார்கள். பலமுறை போராட்டத்தினால் சிறைக்குச் சென்று விட்டார்கள். மற்றவர்களுக்கு நம் தலைவர்கள் நல்ல வழி காட்டிவிட்டார்கள். திராவிட இனம் அந்த அளவுக்கு விழிப்பு கொண்டுவிட்டது. எனினும், இந்தப் பிரச்சினை இன்னும் தீரவில்லை. அது ஒரு ஏகாதிபத்தியப் பிரச்சினையாக—காங்கிரஸ் ஆதிக்கப் பிரச்சினையாக — அவர்களுடைய தற்பெருமைப் பிரச்சினையாக ஆகிவிட்டிருக்கிறது!

இந்தப் பிரச்சினை, தமிழ் மக்கள் எவ்வளவுதான் வாதிட்டு எடுத்துக் காட்டினாலும் கூட — கொதித்தெழுந்தாலும் கூட— இன்றைய தினம் தீராத பிரச்சினையாக இருக்கிறது. முதன் முதலில் இந்தி வேண்டும் என்று சொன்ன இராசகோபாலாச்சாரியார் அவர்கள்கூட, 'இந்தி பொது மொழியாக வேண்டாம்' என்று சொல்லுகிற அளவுக்கு—முதன் முதலில் இந்தியை ஆதரித்த காங்கிரஸ்காரர்களெல்லாம் இன்றைக்கு அந்த மொழியை வெறுத்து ஒதுக்கும் அளவுக்கு—இந்த மொழிப் பிரச்சினை இன்றைய தினம் வளர்ந்து வருகிறது.

உண்மையாக, பெருமையோடு குறிப்பிட ஆசைப்படுகிறேன்—அண்ணா அவர்கள் வகுத்துக் காட்டிய வழி

ஒவ்வொரு கிளைக் கழகத்தின் பெயரும் பொறித்த பெரிய 'பானர்'கள் ஊர்வலத்திற்குத் தனி அழகைத் தந்தது!



மாநாட்டின் முதல் நாள் இரவு ஆசிரியர் மு. க. நடித்த "உதயசூரியன்" நாடகத்தில் ஒரு காட்சி!

களை—எடுத்துச் சொன்ன மொழிகளை — எடுத்தியம்பிய கொள்கைகளை—அவரை மதிக்காதவர்கள்கூட — புறக்கணித்தவர்கள் கூட மதிக்க வேண்டிய நிலைமை இன்றைய அரசியலில் ஏற்பட்டிருக்கிறது என்றால், அதை விடச் சிறந்த கொள்கை தி. மு. கழகத்தைப் பொறுத்த வரையிலே வேறு இருக்க முடியாது.

அதைப்போல், இன்றைய தினம் முன்னாள் முதலமைச்சராக இருந்த சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் அவர்கள் மட்டும் அல்ல—மைசூர் முதலமைச்சராக இருந்த திரு. அனுமந்தையா அவர்கள், திருவாங்கூர் திவானாகத் திகழ்ந்த சர். சி. பி. இராமசாமி ஐயர் அவர்கள், விசுவேசுவரய்யா போன்றவர்கள் எல்லோரும் 'இந்தி கூடாது' என்று சொன்னால், நம்முடைய கருத்தை இவர்கள் எல்லோரும் ஏற்றுக்கொள்கிறார்கள் என்று பொருள்.

அதேபோல் இன்றைய தினம் தமிழ்நாடு தமிழர்களுக்கு ஆகவேண்டுமானால்—தென்னாடு தென்னாட்டவர்களுக்கு ஆக வேண்டுமென்றால்—நம்முடைய உரிமை பறிபோகாமல் இருக்க வேண்டுமென்றால் நம் நாடு நமக்காக வேண்டும்.

பண்டித நேரு அவர்கள் சமீபத்தில் திருவாங்கூர் பகுதியில் பேசுகின்ற நேரத்தில் எடுத்துச் சொன்னார்—'நான் எந்த அன்னிய மொழியும் இந்தியாவில் ஆட்சி மொழியாக ஆவதற்கு விட மாட்டேன்! ஆங்கிலம் அந்நிய மொழி; அது இந்தியாவின் ஆட்சி மொழியாவதற்கு விடமாட்டேன்! ஆங்கில மொழிக்கு வால்பிடிப்பவர்கள் அந்நியனுக்கு வால் பிடிக்கின்ற காரணத்தால் நான் அதை ஆட்சி மொழியாக ஆவதற்கு விடமாட்டேன்'—என்று! அவர் ஆங்கிலத்தில் மேதையாம்; நல்ல எழுத்தாளராம்; ஆனால் நிலைமையை மறந்து பேசுகிறார்!

பண்டித நேரு சொன்ன காரணத்தைத்தான் நான் காங்கிரஸ் தோழர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்—அவர்களுடைய வழிகாட்டி பண்டித நேருவுக்குச் சொல்ல விரும்புகிறேன். இந்தியும் இங்குள்ளவர்களுக்கு அந்நிய மொழிதான்—தமிழருக்கு அந்நிய மொழி—கன்னடியருக்கு அந்நிய மொழி—கேரளத்தவருக்கு அந்நிய மொழி—இன்னும் தள்ளிச் சென்றால் மராட்டியருக்கு அந்நியமொழி — கிழக்கே வங்காளிகளுக்கு அந்நிய மொழி — இன்னும் சொன்னால் பஞ்சாபியருக்கும் அந்நிய மொழி! இப்படி இந்தியும் அந்நிய மொழியாக இருக்கும் போது, எப்படி இந்தி மொழியை மட்டும் ஆட்சி மொழியாக ஆக்க வேண்டும் என்று நான் பண்டித நேருவையே கேட்கிறேன். இவர் விடாப்பிடியாக இந்தியையே ஆட்சி மொழியாக ஆக்குவாரேயானால், ஆச்சாரியார் அவர்கள் சொன்னதுபோல் — தென்னகம் பிரியவேண்டும் என்ற நமது கொள்கை நிச்சயம் வெற்றியடைந்தே தீரும் என்பது உறுதி! ஃ

அரசியல் கட்சிகள்

துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன்

இம்மாநாட்டில் கலந்து கொண்ட எனக்கு நமது இயக்கத்தின் பழைய நினைவுகள் மனக்கண்முன் தோற்றமளிக்கின்றன. குறிப்பாக, *1940*–ம் ஆண்டு, ஆகஸ்டு திங்கள், *24—25*–ம் நாட்களில் நடைபெற்ற நீதிக் கட்சியின் *15*–வது மாநில மாநாட்டையும், இன்று நடைபெறும் திராவிட முன்னேற்றக் கழக தஞ்சை மாவட்ட *3*–வது மாநாட்டையும் ஒப்பிட்டு எண்ணியெண்ணிப் பார்த்தேன்.

1940–ம் ஆண்டு, திருவாரூரில் நடைபெற்றது, நீதிக் கட்சியின் மாநில மாநாடு! அன்று திரண்டிருந்த மக்கள் எண்ணிக்கை பத்தாயிரம் இருக்கக் கூடும். அன்று மாநாட்டுக்கு வரவேற்புத் தலைவர் ராவ்பகதூர் என். ஆர். சாமியப்ப முதலியார்; மாநாட்டுத் தலைவர் பெரியார் அவர்கள்; திறப்பாளர் ராஜா சர். முத்தையா செட்டியார்; கொடியேற்றி வைத்தவர் ஆந்திரத் தலைவர் இராமச்சந்திரா ரெட்டியார்; வந்தவர்களை யெல்லாம் போட்டி போட்டுக் கொண்டு வரவேற்றவர் திருவாளர்கள் ராமாநுஜ முதலியாரும், வடபாதிமங்கலம் ‘மைனர்’ என்று சொல்லப்படும் பி. எஸ். தியாகராசர் உள்ளிட்ட பலரும்!

மேடை மீதோ சர், திவான் பகதூர், ராவ்பகதூர் போன்ற பட்டங்களைத் தாங்கிக்கொண்டிருந்த பெரியவர்கள் ஒரு பக்கமும்—அண்ணா அவர்களும், அவரது வழி நின்று பணியாற்றும் வாய்ப்பைப் பெற்ற என்னைப் போன்ற தோழர்கள் மற்றொரு புறமும் வீற்றிருந்தோம்.

திருவாரூரில் நடைபெறும் தி. மு. கழக மாவட்ட மாநாட்டில் கூடியுள்ள மக்களின் எண்ணிக்கை ஐம்பதாயிரம் பேர். அதுமட்டுமா? இம்மாநாட்டிற்கு வரவேற்புக்குழுத் தலைவர் மிகச் சாமான்யராகிய தோழர் என். எஸ். இளங்கோ. இம்மாநாட்டைச் சீரும் சிறப்புமிக நடத்தும் பொறுப்பை ஏற்றிருப்பவர் கருணாநிதி. மாநாட்டுத் தலைவர் தோழர் கே. ஏ. மதியழகன் அவர்கள். திறப்பாளர் தோழர் ப. உ. சண்முகம். இவர்கள் அனைவரும் சாமான்யர்களே! அன்று *1940*–ம் ஆண்டில் இயக்க மாநாட்டின் மேடை மீது அமர்ந்திருந்த ராஜா சர்கள், வடபாதி மங்கலங்கள், என். ஆர். எஸ். வழியில் நிற்பவர்கள்—அனைவரும் இன்று காங்கிரஸ் முகாமில் வீற்றுள்ளனர்—பார்க்கிறோம்.

ஆனால் இன்று நமது மாநாட்டில் உறுதியான உள்ளம் படைத்த வீரர்கள், கொள்கையே தங்களின் உயிர், மூச்சு, குடும்பம் என்ற தூய்மையான எண்ணம் படைத்தவர்கள் ஆயிரமாயிரம் பேர்களைக் காண்கிறோம். இதிலிருந்து நமது கழகம் வளர்ந்துள்ள அளவினை நன்கு அறியலாம். அதுபோல நமது கொள்கையும் வளர்ந்திருக்கிறது.

1940–ம் ஆண்டு இங்கு நடைபெற்ற நீதிக் கட்சி மாநாட்டில் ஆந்திர — கேரள—கன்னடப் பகுதிகளிலிருந்து வந்திருந்த தலைவர்கள், திராவிட நாடு என்றால் என்ன வென்று விளக்கம் கேட்டனர். பெரியார் அவர்கள் தக்க விளக்கம் தந்தார்கள். அண்ணா அவர்கள் அதனை விரிவாகப் பலமேற்கோள்களுடன் எடுத்துக் கூறி தீர்மானமும் கொண்டு வந்தார்கள்.

பின்னர், சேலம் மாநாட்டில் நீதிக் கட்சியைத் திராவிடர் கழகம் என்று மாற்றியதுடன், திராவிட நாட்டுப் பிரிவினையும் வற்புறுத்தப் பட்டது. திருவாரூர் மாநாட்டில் மற்றொரு குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால், அன்றுவரை நீதிக் கட்சியின் மத்திய நிர்வாகக் குழுவில் பெரும் பணக்காரர்களும் சர், திவான்பகதூர்களுமே நிரம்பியிருந்தனர். திருவாரூர் மாநாட்டில்தான் அண்ணா அவர்கள் கூட்டுச் செயலாளராகவும், என் போன்ற தோழர்கள் சிலர் மத்திய நிர்வாகக் கமிட்டியின் உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டோம். அன்று முதல் நமது இயக்கம் மக்களின் சொத்தாகப் படிப்படியாக மாறி வந்திருக்கிறது.

மாளிகை வாசிகளின் பிடியில் சிக்கியிருந்த இயக்கத்தை மக்களின் கட்சியாக மாற்றும் விதையை *1940*—ல் அண்ணா தூவினார்கள். *1958*—ல் விதை முளைத்து, செடியாகி, மரமாகி, காயாகி, செம் பழமாக உள்ள நிலைபோல நமது இயக்கம் வளர்ந்திருக்கிறது. இயக்கக் கொள்கையும் பட்டி தொட்டிகளிலெல்லாம் பரவி வருகிறது.



அதுமட்டுமல்ல; அன்று திராவிட நாட்டுப் பிரிவினையென்றால் என்ன என்று கேட்டனர் ஆந்திர, கேரள, கன்னடப் பகுதித் தலைவர்கள். இன்று அங்கெல்லாம் தனி உரிமை வேட்கை தலைதூக்கி நிற்கிறது. வடநாட்டுப் பிடியிலிருந்து நம் நாடு முழு உரிமை பெற்றே ஆக

வேண்டும் என்ற எழுச்சியை திராவிடம் முழுதும் காண்கிறோம்.

ஆளும் பொறுப்பை ஏற்றுள்ளவர்கள்கூட சில சமயங்களில் வீம்பு, வரட்டு ஜம்பம் ஆகியவைகளை மறந்து, நமது கொள்கைகளைத் திட்ட வட்டமாகப் பேசுகின்றனர்.

எனவே, திராவிட நாட்டுத் தனி உரிமையை நம் வாழ்நாளில் பெற்றே தீருவோம்—என்ற நம்பிக்கையை நமக்கும், அதே சமயத்தில் வடநாட்டு ஏகாதிபத்தியத்திற்கு எச்சரிக்கையாகவும் அறிவிக்கிறது இம்மாநாடு.

1940—ம் ஆண்டில் நாம் சில பேர். இன்று மக்களின் மகத்தான சக்தி யென்றால் அதற்கு ஒரே ஒரு எடுத்துக் காட்டு திராவிட முன்னேற்றக் கழகம் தான் என்பதை நாடு உணருகிறது; நல்லோர் உணருகிறார்கள். நமது பணி வீணாகவில்லை என்று நாமும் நமது கொள்கையில் புதியதோர் நம்பிக்கையும், உறுதியும் கொள்கிறோம்.

திராவிடம் எவருக்கும் அடிமைப்படாமலும், அதுபோன்று நாமும் மற்ற எந்த நாட்டினரையும் அடிமைப்படுத்தாமலும் வாழவேண்டும் என்ற பெரிய கொள்கை வேரூன்றி வளர்ந்துவரும் இன்றைய நிலையில் தமிழ் மாநில முதலமைச்சர் காமராசரும் நாட்டுப் பிரிவினையை நாங்கள் தரமுடியாது என்று வீம்பு பேசுகின்றனர். இவர்களின் போக்குக்கு பரிதாபப்பட வேண்டியிருக்கிறது.

நாம் திராவிடநாட்டு உரிமையை காமராசரிடம் கேட்கவில்லை; காமராசரிடமும் அந்த அதிகாரம் இல்லை. இருந்திருப்பின் இதற்கு முன்னதாகவே நாம் கெஞ்சியோ மிஞ்சியோ பெற்றிருக்கக் கூடும். எனவே முதலமைச்சர் காமராசர் உள்ளிட்ட தமிழகக் காங்கிரஸ் நண்பர்களுக்கு ஒன்று கூற விரும்புகிறேன்.

ஜனாப் ஜின்னா அவர்கள் பாகிஸ்தான் அடிப்படையில் நாட்டுரிமை கேட்ட போது, அன்றைய காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான டாக்டர் அன்சாரி அவர்கள், பாகிஸ்தான் உரிமையை நாங்கள் அனுமதிக்க முடியாது என்று கூறிவந்தனர். அதற்கு ஜனாப் ஜின்னா அவர்கள், ''டாக்டர் அன்சாரி அவர்களே! நான் கேட்கும் நாட்டுமை உங்களிடமல்ல; உங்களையும் என்னையும் நம் முஸ்லீம் சமுதாயத்தினரையும் அடிமைப்படுத்தி வாழும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைக் கேட்கிறேன். சந்தர்ப்ப வசத்தால் காங்கிரஸ் தலைவர்களாகிவிட்ட உங்களைப் போன்றவர்களுக்கும் கூடச் சேர்த்தே நான் பாகிஸ்தான் உரிமை கேட்கிறேன். எனவே நீர் வலியவந்து வம்பு பேசுவது அரசியல் விவேகம் ஆகாது!'' என்று சொன்னார்.

அதைப் போலத்தான் காமராசருக்கு நாம் நினைவூட்டவேண்டியிருக்கிறது, நாம் கேட்கும் திராவிடநாட்டுரிமை காங்கிரசிலுள்ள காமராசர்களையும், கக்கன், பக்தவத்சலம், சுப்ரமணியம் உள்ளிட்ட அனைவரையும் சேர்த்துத்தான் வடநாட்டு ஏகாதிபத்தியத்தைத் தட்டிக் கேட்கிறோம். இன்னும் சொல்லப்போனால்பல்வேறு அரசியல் கருத்து கொண்ட திராவிட நாட்டுப் பெருங்குடி மக்கள் அனைவரின் நல்வாழ்வுக்குத்தான் தி. மு. கழகம் நாட்டுரிமை கேட்கிறது. இந்த அரசியல் சூட்சமத்தைப் புரிந்து கொள்ளாத காமராசரும் பிற காங்கிரஸ்காரர்களும் ''கழகக் கொள்கையை அழித்து விடுவோம்; நசுக்கி விடுவோம்'' என்று பேசுவது அரசியல் விவேகமாகாது.

திராவிட முன்னேற்றக் கழகம், ஆதிக்கக்காரர்களின் அட்டூழியங்களையும் அவர்களுக்கு ஏவலாளிகளாயிருந்து சொந்த நாட்டுக்குத் துரோகம் புரியும் கூட்டத்தினரின் இழித்தனமான ஏச்சுக்களையும் பேச்சுக்களையும் சகித்துக் கொண்டு தனது கொள்கையில்—இலட்சியப் பாதையில் முன்னேறி வருகிறது.

இடுக்கண்களையும், இடையூறுகளையும் கடந்து சென்றால் தான் இலட்சியத்தை அடைய முடியும் என்ற அரசியல் தத்துவத்தை நாம் நன்கு உணர்ந்திருக்கிறோம்.

அதன் வளர்ச்சியை—வருங்கால வெற்றியை—நம் தாயகத்தின் விடுதலையைப் பெறுவோம் என்ற உறுதிப்பாட்டிடையே இந்த மகத்தான மாநாடு உலகிற்கு அறிவிக்கிறது. அந்தப் பெருமையையும், பூரிப்பையும் ஆறுதலாகக் கொண்டு, அண்ணாவின் அறிவுரையையும், பொதுச்செயலாளரின் அன்புக் கட்டளையையும் பெருந்துணையாகக் கொண்டு சுதந்திரத் திராவிடத்தை—நமது இன்பபுரியை—நமக்கே உரித்தான தாயகத்தை வடநாட்டு ஏகாதிபத்திய வெறியர்களின் பிடிப்பிலிருந்து விடுபடச் செய்வோம். நாமும் நமது தாய்த் திருநாடும் தலை நிமிர்ந்து வாழ்வோம். உலக நாடுகள் அவையிலும் நமது நாடு இடம் பெறச் செய்வோம். இது உறுதி-உறுதி உறுதி. வணக்கம்! ஃ

மாநாட்டுப் பந்தலை ஒட்டி இருந்த தேநீர் விடுதி!

எங்கள் பங்கு

"மயூரான்"

ஆரூரில் கடந்த திங்கள் நடைபெற்ற தஞ்சை மாவட்ட தி. மு. க. 3-வது மாநாடு நமது வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமைந்து விட்டது. மாயூரத்திலும், தஞ்சையிலும் ஏற்கனவே நடைபெற்ற முதல்—இரண்டாவது மாநாடுகளில் மிகக் குறைவான தொகைதான் மீதமாயிற்று என்பதை மாத்திரம் எண்ணிச் சொல்லவில்லை. ஊர்வலமும் மாநாடும் இப்படித்தான் இருக்க வேண்டும்; இவ்வளவு எழிலும், எழுச்சியும், கவர்ச்சியும், பயனும் ஏற்பட வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக இந்த மாநாடு அமைந்துவிட்டது

இத்தகைய சிறப்புகளில் எங்கள் மாயூரம் வட்டம் செலுத்திய பங்கும், ஏற்று முடித்த பொறுப்புகளும் குறிப்பிடத்தக்க அளவிலே இருந்தன.

ஆரூரில் மாநாடு என்ற உடனேயே முதல் பூரிப்பு எங்கள் மாயூரம் நகர தி. மு. க. சார்பு மன்றமான நடராசன் வாசக சாலைத் தோழர்கட்கே ஏற்பட்டது. காரணம், தென்னங் கீற்றுகளால் அழகுற முகப்பு அமைப்பதில் அலாதித் தேர்ச்சி பெற்றுள்ள அத்தோழர்களுக்குத் தங்கள் திறமையைக் காட்ட மற்றொரு வாய்ப்புக் கிடைத்ததே யாகும். அவ்வாறே அவர்கள் தாஜ்மகால் போல முன் முகப்பை அமைப்பதாகப் பொறுப் பேற்றுக் கொண்டு, ஊண், உறக்கம். ஊதியம்பற்றிக் கவலையுறாமல் சுமார் பத்து நாட்கள் முயன்று, கண்டோர் வியக்கும் வண்ணம் தங்கள் காரியத்தை முடித்துக் காட்டினர்.

அஃதேபோல் பனங்குருத்து அல்லது தென்னங் குருத்து ஓலைகளில் தட்டிகள் பின்னி அதில் இணையில்லாப் புகழ் பெற்ற தோழர்கள் மாயூரத்தை அடுத்துள்ள குத்தாலத்தில் இருக்கிறார்கள். அவர்களிலும் பெரும்பாலோர் நமது கழகத்தில் தீவிரப் பற்றுக் கொண்டவர்கள். அவர்களும் அவ்வாறே தங்கள் கைத் திறனைக் காட்டுவதில் தணியா ஆவல் கொண்டு மு. க. அவர்களிடத்தில் சலுகை பெற்று இரண்டாவது முகப்பினை ஏற்றமுடன் உயர்த்தியிருந்தார்கள்.

மேலும், மும்முனைப் போராட்டக் காலத்தில் எங்களோடு சிறை வாசம் செய்தவரும், சிறையிலும் தன் தொழிலைச் சிறை அதிகாரிகளின் பாராட்டுதலோடு செய்தவருமான மாயூரம் தோழர் பி. டி. இராசன் உரிமையுடன் ஆரூரில் தங்கியிருந்து தன் ஓவியத் திறமையை ஊர் முழுதும் பரப்பியிருந்தார்.

மாயூரம் வட்டச் சார்பில் ஆறு சைக்கிள் வண்டிகளைப் பிணைத்து, அதன்மீது பெரிய கப்பலொன்றை அலங்கரித்து, மிகுந்த சிரமத்தின் பேரில் மாயூரம் வட்டத் தோழர்களின் அருமையான ஒத்துழைப்போடு, அதை மாயூரத்திலிருந்தே திருவாரூர்வரை ஊர்வலத்தில் கொணர்ந்து, புகழ் வாய்ந்த மாயூரம் பாண்டு வாத்தியம் முழங்க, கண்டோர் கண்ணையும் கருத்தையும் கவரும்வகையில் எடுப்பாக உலா வந்தது.

மாநாட்டுக்கு முன்பு நடைபெற்ற ஆக்க வேலைகளிலும், டிக்கட் விற்பனையிலும் மாயூரம் தோழர்கள் முழுப் பங்கேற்று வெற்றி தேடித் தந்துள்ளனர்.

மாநாட்டுக்கு முன்னர் பிரச்சாரக் கூட்டங்கள் நடைபெற்றபோது எங்கள் வட்டத்தைச் சேர்ந்த பழைய கூடலூர், திருமங்கலம், புலவனூர் ஆகிய சிற்றூர்க் கிளைகள் நூறு ரூபாய் நன்கொடை யளித்ததோடு கூட்டத்தையும் மிகவும் சீரும் சிறப்புமிக நடத்தின. வட்டத்தைச் சேர்ந்த எல்லாக் கிளைகளுமே அநேகமாக ரூ. 10 நன்கொடையும் தந்துள்ளன.

மொத்தத்தில் மாநாட்டிற்கு முன்பிருந்தே புதிய எழுச்சியும் மலர்ச்சியும் எங்கள் வட்டம் பூராவும் பரவி, ஏறக்குறைய ஐம்பது புதிய கிளைகள் இப்போது துவக்கப்பட்டுள்ளன. பொதுவாக இந்நிலைக்கு உற்ற காரணமாய் அமைந்தது நமது மாவட்ட மாநாடுதான்! ஃ



தலைவர்கள் அப்போதைக்கப் போது அங்கு தேனீர் அருந்தினர்!

எங்கள் பணி

நாகை இராமன்

தஞ்சை மாவட்ட தி. மு. கழக 3-வது மாநாடு திருவாரூரில் மே 10, 11-ம் நாட்களில் நடைபெறப் போகிறதென அறிவிப்பு கிடைத்தவுடன் நாங்கள் எல்லாம் பெருமகிழ்ச்சிகொண்டோம். மற்ற மாவட்ட மாநாடுகளைவிட இந்த மாநாடு மிகச்சிறப்புடன் அமைவதோடு பெருந் தொகையும் மிச்சப் படும் என்ற நம்பிக்கை எங்களுக்கு ஏற்பட்டதில் வியப்பில்லை.

மிகப்பெரிய பந்தல் அமைத்து மாநாட்டிற்கு வருவோருக்குச் சிறந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன. திருவாரூரில் குடி தண்ணீருக்குப் பஞ்சமென்றாலும் எப்படியோ நல்ல தண்ணீர் அனைவருக்கும் கொடுக்கப்பட்டது. மாநாட்டு முகப்பு வேலைகளும், ஒலி—ஒளி அமைப்பும், பநதல் அலங்கார வேலைகளும், மாநாட்டை சிறப்பித்தன. கண்டோர் அனைவரும் இது என்ன மாவட்ட மாநாடா; அல்லது மாநில மாநாடா என பெருமிதப்பட்டனர்.

